# உள்ளே...




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

நியூ செஞ்சுரியின்

**உங்கள் நூலகம்**

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2050*

*மலர் - 12 இதழ் - 1 & 2 - ஏப்ரல் - மே - 2020*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*

**இதழ் வடிவமைப்பு**

*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**



காலனி ஆட்சியில் தமிழகத்தில்
மேலை மருத்துவம்
முனைவர் டாக்டர் சு.நரேந்திரன்........................ 04

திண்ணையில் பாடமெடுத்த
அண்ணாவிகள்
அ.கா.பெருமாள்............................................ 09

கொங்குநாட்டில் புதிய வட்டெழுத்துக்
கல்வெட்டு கண்டுபிடிப்பு
டாக்டர்.ச.இரவி............................................ 15

கருவி மாமழை சிலைதரும் குரலே
ஆ.கார்த்திகேயன்.......................................... 19

பழங்குடிகளைக் கற்க ஓர் அரிச்சுவடி
இரா. காமராசு.............................................. 23

செட்டிநாட்டில் வ.உ.சிதம்பரனார்
முனைவர் சொ. சேதுபதி.................................. 30

மக்கள் பாதுகாப்பை
அரசு உறுதி செய்யுமா?
க.பழனித்துரை.............................................. 43

வரலாற்றுப் பின்னணியில்
புயலிலே ஒரு தோணி
கி.இரா.சங்கரன்............................................ 48

தங்கப்பாவின் இயற்கைப்பாடல்கள்
- ஓர் இலட்சியக்கனவு
பாவண்ணன்................................................ 59

ஆழ்ந்த வாசிப்பைக் கோரும் ஆய்வுநூல்
முனைவர் ம.திருமலை..................................... 68



# காலனி ஆட்சியில் தமிழகத்தில் மேலை மருத்துவம்

முனைவர் டாக்டர் சு.நரேந்திரன்

**சிப்பாய்களுக்கு சுதேசி மருந்து:**

கிழக்கிந்தியக் கம்பெனி ஐரோப்பிய மருத்துவர்கள் தமிழகத்திலுள்ள சென்னை, கடலூர் போன்ற கடற்கரை நகரங்களில் கொள்ளை நோய் மற்றும் மணிக்கணக்கில், நாட்கணக்கில் இறப்புகளை உண்டாக்கும் நோய்களைக் குறித்து கவனித்து, அவை எப்பொழுது ஏற்படுகிறது, அதன் காரணம் என்ன? என அறிந்து, அவற்றிற்கான மருந்துகளை லண்டனிலிருந்து பெற்று ஆவன செய்ய வேண்டியவரானார்கள். இதனால் கொள்ளை நோய்கள் ஒருவாறு கட்டுப்படுத்தப்பட்டது என்றாலும் மருந்துகளைப் பெறும் பொழுது பல சிக்கல்கள் ஏற்பட்டன.

*எ.கா.:* கப்பலில் *(1664)* வரும் மருந்தை நம்பியே மருத்துவ மனைகள் இயங்க வேண்டிய நிலை இருந்தது. மேலும் தமிழ்நாட்டில் கம்பெனியார் பல உள்நாட்டுப் போர்களுக்கு உள்ளானதால் புதிய சுதேசி சிப்பாய்களைச் சேர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதன் காரணமாக செலவு 1798இல் *7447* பவுண்டாக இருந்தது. *1799*இல் *12,994* பவுண்டாக உயர்ந்தது.

மருந்து தேவைப்படும் பொழுது கிடைக்காது ஐரோப்பியாவிலிருந்து மருந்துகள் வர தாமதமானது. உள்நாட்டுப் போர் அடிக்கடி நிகழ்வதால் உள்ளூர் சிப்பாய்கள் எண்ணிக்கை அதிகமானது. இதன் காரணமாக அவர்களுக்கு மருத்துவம் அளிக்க

கடைச்சரக்கு *(1696)* உள்நாட்டு சந்தையிலேயே மூலிகை மற்றும் கிராம்பு, மிளகு, ஏலக்காய் போன்றவற்றை வாங்கிப் பயன்படுத்தினர். இவைகள் பெரும்பாலும் ஆயுர்வேதம், சித்தா மருந்துகள் தயாரிக்க உதவும் பொருட்கள் ஆகும்.

இம்மருந்துகளில் சில வெளிநாடுகளிலிருந்து, **எ.கா.:** சூடம், ஜாவா, சுமத்திராவிலிருந்தும் இலவங்கப்பட்டை போன்ற கடைச்சரக்குப் பொருட்கள், இலங்கையிலிருந்தும் பெறப்பட்டு சந்தையில் விற்கப்பட்டன. *1758* சர்ஜன் ஜெனரல் பதிவின்படி, உள்ளூர் மருந்துகளைச் சேமித்து வைக்க அரசு மருத்துவமனைகளில் தனி அறை பயன்பாட்டில் இருந்துள்ளது அறிய வருகிறது. இம்மருந்துகள் *1765*இல் நடைபெற்ற போர்களுக்காக ராணுவம் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் உள்ளூர் சிப்பாய்கள் நோயுற்றபொழுது பெரிதும் பயன்பட்டிருக்கின்றன (DCB, 1758: P. 268). இதன் பிறகு *1789*இல் கிழக்கிந்தியக் கம்பெனி உள்ளூர் சிப்பாய்களுக்குப் பயன்பட *769* பகோடாக்களுக்கு **"கடை மருந்துகளை"** (Bazaar Medicine) வாங்கியுள்ளது. இதற்கு மற்றொரு காரணம் *1789*இல் அலோபதி மருந்துகளை லண்டனிலிருந்து போதிய அளவும், வேண்டிய காலத்திலும் அனுப்ப முடியாததும், மற்றொரு காரணமாகும். இவ்வுள்ளூர் மருந்துகளை மதராஸ் சர்ஜன் ஜெனரல் விலைக்கு வாங்கி மற்ற இடங்களுக்கு அனுப்பியுள்ளார். இது தவிர லண்டனிலிருந்து பெறப்பட்ட டின்சர் ஓபியம் மருந்து மதராசிலேயே குறைவாகக் கிடைப்பதால் தமிழ் நாட்டிலேயே வாங்கிக் கொள்ளவும் லண்டன் மருத்துவ இயக்ககம் அனுமதித்தது.


கம்பெனி ராணுவத்தில் ஒவ்வொரு காலால் படைக்கும் ஒரு நாட்டு வைத்தியர் அவில்தார் ஊதிய அளவில் பதவியில் அமர்த்தப்பட்டார். *1833*லிருந்து அரசு மருந்தகம் (Government Dispensary) ஆரம்பிக்கப்பட்டு, அங்குச் சுதேசி மருந்துகள் தயாரிக்கப்பட்டு அவை மதராசின் மத்திய பகுதிக்கு அனுப்பப்பட்டன. அதன் பிறகு தேவை அதிகமான பொழுது சிந்தாதிரிப்பேட்டையில் மற்றொரு மருந்தகம் ஆரம்பிக்கப்பட்டது. இவைகளிலிருந்து அரை ஆண்டுக்கான அளவு மருந்துகளை மருத்துவமனைகள் பெற்றுக்கொண்டன. இம்மருந்துகளை ஆங்கிலேயருடன், டேனிஷ்காரர்களும் வாங்கி தரங்கம்பாடியில் உள்ள மருத்துவமனைகளில் பயன்படுத்தினர்.

இவ்வகை மருந்துகளை ஆங்கிலேயர்கள் தங்கள் நாட்டிலிருந்தே பெற்றிருக்கலாம் என்றாலும், முக்கியமாக மூலிகை மருந்துகள் ஐரோப்பிய சீதோஷ்ண நிலையில் பயிர் செய்ய முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

**அம்மைக்கு தடுப்பு மருந்து:**

இந்நிலையில் கிழக்கிந்தியக் கம்பெனி கொள்ளை நோயான பெரியம்மைக்கு எதிராகத் தடுப்பூசி முதன் முதலில் *1787*இல் திருச்சிராப்பள்ளியில் ஐரோப்பிய வீரர்களுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் போடப்பட்டது. இது அம்மைப் பாலிலிருந்து பழைய முறையில் ஒரு பிராமண கீழ்மட்டப் பிரிவினரால் போடப்பட்டது. ஆனால் *1792*இல் தான் எட்வர்ட் ஜென்னர் மாட்டிலிருந்து தயாரித்த அம்மைப்பால் அம்மை நோய் எதிர்ப்புக்கான ஊசியாகப் பயன்படுத்தப்பட்டது. இது மதராசில் அம்மைக்கு எதிராக *1800* செப்டம்பரில் முதன் முதலில் தடுப்பூசியாகப் போடப்பட்டது. இந்நிலையில் தமிழ்நாட்டில் பெண் தெய்வமான மாரியம்மாவின் கோபத்தினாலே அம்மை உண்டாவதாக நம்பி, அதற்கான கோவில்களில் பல சடங்குகள் நடத்தப்பட்டன.

அம்மைக்கான மருத்துவம் தமிழ் மருத்துவத்தில் 'வைத்திய வாகடம் *1500* அகஸ்தியர்' என்ற நூலில் காணப்படுகிறது. இதுபோலவே, மருத்துவ நூலான 'மாதவா நிதானா' என்ற நூலிலும் பெரியம்மைக்கான குணப்பாடு குறிப்புகள் உள்ளன. இந்நோய் தமிழகத்தில் ஒவ்வொரு



ஆண்டும் நவம்பர் மாதம் கடைசியிலிருந்து பிப்ரவரி வரை காணப்படுவதாக டாக்டர் ஒட்லே அன்சி குறிப்பிடுகிறார். அம்மை தடுப்பு ஊசியை *1801*ஆம் ஆண்டு பதிவின்படி ஐரோப்பியர்களே மிகுதியாக சுதேசிகளைவிட ஏற்றுக் கொண்டனர். பழைய முறை தடுப்பு ஊசியைப் போடாது, ஜென்னர் கூறும் முறையில் மாட்டிலிருந்து தயாரிக்கப்பட்ட தடுப்பு ஊசியே *1802*லிருந்து மதராசில் ஊக்கப்படுத்தப்பட்டு போடப்பட்டது. இவ்வகையில் அம்மைக்கான தடுப்பு முறையான மேலை மருத்துவம் தமிழகத்தில் நுழைந்தது.

**உடல் கூறு:**

இதுபோலவே சுதேசி மருத்துவத்தில் உடற்கூறு குறித்த நூல்கள் மற்றும் அதைச்சார்ந்த அறிவியல் நுட்பம் மிகுதியாக அறிந்திருந்திராத பொழுது ஐரோப்பிய அறுவை மருத்துவர்கள் முன்பு கற்றறிந்த உடல் கூறு அறிவியலை மேலும் வளப்படுத்திக் கொள்ளும் விதமாக 1693இல் முதன் முதலாக வெண்பாஷாணத்தை உட்கொண்டதால் ஏற்பட்ட மரணத்தின் உண்மையைக் கண்டறிய பிரேதப் பரிசோதனை செய்து நிரூபிக்கப்பட்டது. மேலும் 1746இல் பிரெஞ்சுக்காரர்களுடன் ஏற்பட்ட போரில் இறந்த 205 ஐரோப்பியர், பாண்டிச்சேரி முற்றுகையில் இறந்த 67 நபர்கள், ஹைதரலியிடம் மேற்கொண்ட போரில் (1781) இறந்த 48 நபர்கள், திப்பு சுல்தானுடன் நடந்த போரில் இறந்த 175 நபர்கள் உடலை, அவர்கள் உறவினர்கள் பெறாத பொழுது அறுவை மருத்துவர்கள் பிணப் பரிசோதனை செய்ததன் மூலம் உடல் கூறு மருத்துவத்தை மேலும் அறிந்து கொண்டனர்.

ஜான் கிளர்க் என்ற கம்பெனி சர்ஜன் (1773), கப்பல்படை மருத்துவமனை சர்ஜன் சார்லஸ் கர்டிஸ் நோயினால் இறந்தவர்களைப் பிணப்பரிசோதனை செய்து, நோயினால் இறந்தவர்கள் ஏன் இறந்தார்கள் என்ற காரணத்தை அறிந்து கூறினர். இதன் வெளிப்பாடாக டாக்டர் ஜேம்ஸ் அன்சிலி 25 ஆண்டுகள் அனுபவத்துடன், 1828இல் வெப்பக்காலத்தில் ஏற்படும் நோய்களைக் குறித்து ஒரு நூல் எழுதி வெளியிட்டார்.

இதற்கு மாறாக, டாக்டர் ஒட்லே அன்சி என்ற மருத்துவர், இந்து மருத்துவர்கள் பிரேதப் பரிசோதனையை மறுப்பதைக் கூறி (1794) சுசுருதா காலத்தில் பிணப்பரிசோதனை செய்தே நூல்கள் எழுதப்பட்டதால் அந்நூல்கள் போற்றப்படுவதாகக் கூறினார். இவர் அகஸ்தியர் வைத்தியம் 500 என்ற நூலைப்படித்து ஹிந்துஸ்தான் மருந்துப்பட்டியல் என்ற நூலை எழுதியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஐரோப்பிய கண் மருத்துவ சிகிச்சை மதராசில் (1819 1857) நடைமுறைக்கு வந்தது:**

1819இல் கண் நோய்க்கு மட்டும் என மதராசில் மருத்துவமனை கிழக்கிந்தியக் கம்பெனியால் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. மேலை மருத்துவத்தை விரும்பாத பிராமண வகுப்பினர்கூட இங்கு மருத்துவம் பெற்றுச் சென்றனர். இம்மருத்துவ மனையின் முதல் கண்காணிப்பாளர் டாக்டர் ரிச்சர்ட்சன். இவரைத் தொடர்ந்து கண்காணிப்பாளராக வந்த டாக்டர் லேன், இவர் கூற்றுப்படி, விழி வெண்புள்ளியுள்ள (Leucoma) நோயாளிகள் மிக அதிக அளவில் மருத்துவத்திற்கு வந்து சென்றிருக்கின்றனர் என்பதாகும். ஏனெனில் இவ்வகை விழி வெண்புள்ளி உள்நாட்டு கண் மருத்துவர்களால் கண் நோய்களுக்குச் சரியான மருத்துவம் புரியாத நிலையில் ஏற்படுகிறது என்று கூறி, இதன் காரணமாக பலர் தங்கள் பார்வையை இழந்து குருடாகின்றனர் என்று குறிப்பிடுகிறார் (Bl. Gioc.: P/262/1747: Fl. 998).

இம்மருத்துவமனைக்கு கண் அறுவைக்கான உபகரணங்கள் லண்டனிலிருந்து பெறப்பட்டன. அக்கால கட்டத்தில் உள்நாட்டில் கண்புரைக்கு செய்யப்படும் கௌசிங் என்ற மருத்துவம் மேல் நாட்டினர் மருத்துவத்தை ஒத்ததாகவே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது (Bl.Govt. Gazette. Madras: 21 Feb. 1826).

**மதராசில் மேலை மருத்துவத்தைக் கற்பிக்க மருத்துவப்பள்ளி:**



மதராஸ் பொது மருத்துவமனை

மேலை மருத்துவ மருத்துவமனைக்கு மதராஸ் கருப்பு நகரிலுள்ள சுதேசிகள் 1815ஆம் ஆண்டில் முன்பைவிட அதிக எண்ணிக்கையில் மருத்துவம் பெற்றனர். மதராசில் 1800 - 1820ஆம் ஆண்டு வாக்கில் நான்கு மருத்துவமனைகள் இயங்கின. இதில் பொது மருத்துவமனையே (General Hospital) புகழ் பெற்றிருந்தது. 1827இல் பொது மருத்துவமனைக்கு டி.மார்டின், கண்காணிப்பாளராக

நியமிக்கப்பட்டார். இவரால் அங்கு மருத்துவம் கற்பிக்கப்பட்டது. இது 1822இல் கல்கத்தாவில் மேலை மருத்துவத்துடன் ஆயுர்வேதம், யூனானியை சேர்த்து கற்பிக்கப்பட்டதைப்போல் இன்றி மேலை மருத்துவம் மட்டுமே ஆங்கில வழியில் கற்பிக்கப்பட்டது.

இதற்குக் காரணம் (1774 - 1839) லார்ட் வில்லியம் பென்டிக் கவர்னர் ஜெனரலாக இருந்தபொழுது "ஆங்கிலத்தை ஆதரிப்பவர்கள், தமிழ்க் கலாசாரத்தைப் பேணிக்காக்க அவசியமில்லை. இதற்குப் பதிலாக மேலைக் கலாசாரத்தை ஆங்கில வழியில் கொணர வேண்டும்" என வற்புறுத்தியதே ஆகும்.

இதன் காரணமாக கவர்னர் ஜெனரல் 1833இல் ஒரு கமிட்டியை அமைத்து, உள்நாட்டினர் மற்றும் ஆங்கிலத்தை ஆதரிப்பவர்களைப் பேட்டி கண்டு அறிக்கை சமர்ப்பிக்கக் கேட்டுக்கொண்டார்.

இவர்களின் அறிக்கையின் கருத்துப்படி கவர்னர் ஜெனரல் 1835 அக்டோபர் 28இல் மதராசில் ஐரோப்பிய மருத்துவத்தை மட்டும் ஆங்கிலத்தில் கற்பிக்க ஆணையிட்டார். ஏனெனில் அம்முறை மட்டுமே காலனி அரசால் அங்கீகரிக்கப்பட்ட முறையாகும். 1835இல் இம்மருத்துவப்பள்ளியில் கவர்னர் சர்.ஃபிரடெரிக் ஆடம்ஸ் ஆணைப்படி மதராசில் அப்போதகிரி மற்றும் நேட்டிவ் டிரசர்களுக்குப் பயிற்சி அளித்து மருத்துவம் கற்பிக்கப்பட்டது.


இதன்படி தமிழகப் பகுதியில் உள்ள ஐரோப்பியர் மற்றும் சுதேசிகள் மருத்துவ சேவைக்குத் தகுதி பெற முடிந்தது. ஆரம்பத்தில் மருத்துவப்பள்ளி மருத்துவமனை, அறுவை மருத்துவர்கள் தங்கும் விடுதி அருகில் ராணுவத்தினருக்காக ஆரம்பிக்கப்பட்டது. 1838இல் ராணுவத்தினருடன் இக்கால கட்டத்தில் உள்நாட்டு மக்களும் படிக்க அனுமதிக்கப்பட்டது. ஆரம்பகாலத்தில் இரண்டாண்டுப் படிப்பாக இருந்தது பிறகு 5 ஆண்டுகளாக ஆனது. உள்நாட்டு சிவில் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை அளிக்கப்பட்டது. இப்பள்ளி 1850 அக்டோபர் 1 முதல் கல்லூரியாக மாறியது. இக்கல்லூரியில் கற்பிக்கப்படும் கல்வி இங்கிலாந்தை ஒத்ததாகவே அமைந்தது, ஆகவே 1851இல் இங்குப் படிப்பவர்களை ராயல் காலேஷ் ஆப் சர்ஷன் இங்கிலாந்து அங்கீகரித்தது. 1852இல் முதல் செட் மாணவர்கள் பட்டச்சான்றிதழ் டிப்ளோமா பெற்று வெளியேறினர். இது 1863ஆம் ஆண்டு கல்லூரி மதராஸ் பல்கலைக்கழகத்துடன் இணையும் வரை நீடித்தது (A Meeting of the minds European and Tamil Encounters in Modern Science 1507 - 1857 : 301 551).

●





07.03.2020 (சனிக்கிழமை) அன்று மார்க்சிய செவ்வியல் நூல்கள் முன்வெளியீட்டுத் திட்டம் அறிமுக விழா மதுரையில் நடைப்பெற்றது. இதில் தோழர் தா.பாண்டியன், தோழர் சு. வெங்கடேசன் M.P., திரு. சண்முகம் சரவணன், பேரா.ந.முத்துமோகன், திரு. நவபாரத் நாராயணன், மணிமேகலைப் பள்ளி திரு. வரதராஜன், திரு.அ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்




₹ 315/-





₹ 120/-





₹ 100/-





₹ 350/-




₹ 120/-





₹ 195/-




₹ 20/-




₹ 45/-




₹ 80/-




₹ 70/-




₹ 85/-




₹ 50/-

கட்டுரை



# திண்ணையில் பாடமெடுத்த அண்ணாவிகள்

அ.கா.பெருமாள்

யாழ்ப்பாணம் குடநாட்டில் நிலாக்காலங்களில் பனையோலையை நார்நாராகக் கிழித்து மாடுகளுக்குக் கொடுப்பார்கள். இதைச் செய்கின்ற வயதான மனிதர் தன்னைச் சுற்றியிருக்கும் குழந்தைகளுக்கு பாரத, ராமாயணக் கதையைச் சொல்லிக்கொண்டிருப்பார். சில சமயம் நீதிநூல் பாடல்களைச் சொல்லி விளக்கமும் கூறுவார். இதை நிலாப்பள்ளி படிப்பு என்பார்கள். சி.வை. தாமோதரன் பிள்ளை இப்படியான நிலாப்பள்ளியில் படித்திருக்கிறார்.

**திண்ணையில் படித்தவர்கள்**

வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியார், வையாபுரிப்பிள்ளை என தாமிரபரணித் தமிழறிஞர்கள் சிலர் திருநெல்வேலி தெற்கு புதுத்தெருவில் இருந்த கணபதியாபிள்ளையின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். 19ஆம் நூற்றாண்டிலும், 20ஆம் நூற்றாண்டு ஆரம்பத்திலும் வாழ்ந்த தமிழறிஞர்களில் பலரும் இதுபோன்ற திண்ணைப் பள்ளிக்கூடங்களில் படித்தவர்கள்தாம். ஜே.எம்.நல்லுசாமிப்பிள்ளை (திருச்சி ஓதுவார் திண்ணைப் பள்ளிக்கூடம்) மறைமலை அடிகள் (காடம்பாடி தி.ப) பண்டிதமணி கதிரேசன் செட்டியார் (மகிபாலன் பட்டி தி.ப) பி.ஸ்ரீ (தென்திருப்பேரை தி.ப) என இப்படியான தமிழறிஞர்களின் பட்டியல் நீளமானது.

**தொன்மமாகிவிட்டது**

திண்ணைப் பள்ளிக்கூடம் பற்றிய செய்திகள் எல்லாம் இன்று தொன்மமாகிவிட்டன. இது பற்றிய செய்திகள் பெரிய அளவில் சேகரிக்கப்படவில்லை. திண்ணைப் பள்ளிக்கூடங்களின் கற்பிக்கும் முறையும், நெறிமுறையும் தமிழகத்தின் ஒரே மாதிரியான போக்கில் இருக்கவில்லை. இது வட்டார ரீதியான வேறுபாடு இருந்தது. மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராட்டி போன்ற மொழிகளைக் கற்பித்த திண்ணைப் பள்ளிகள் இருந்தன. இதுபோல

தமிழின் பாடத்திட்டமும்; கணக்கு கற்பித்தலிலும் வேறுபாடு இருந்தது.

திண்ணைப் பள்ளிக்கூடம் தொடர்பான சொற்கள் முழுதும் வழக்கில் இல்லை. இவை அழிந்து விட்டன. (பி.கு. காண்க) இவற்றில் சில பழம் அகராதிகளில் கூட இடம்பெறவில்லை. இவை எல்லாவற்றிற்கும் மாற்றுச் சொற்கள் வந்து விட்டன. தமிழகக் கல்வி குறித்த பழம் தகவல்கள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. கல்வி உயர்வானது, கற்றவன் சமூகத்தில் மதிப்புடையவன் என்பன போன்ற அறச் சார்புடைய சில சிறு குறிப்புகள் பழம் பாடல்களில் வருகின்றன.

முந்தைய காலங்களில் இயங்கிய கல்வி நிலையம், மாணவர்களின் பாடத் திட்டம், ஆசிரியர் தகுதி, பெண்கள் கற்கும் நிலை என்பன போன்ற பல விஷயங்கள் மிகக் குறைவாகவே கிடைத்திருக்கின்றன. 17, 18, 19 நூற்றாண்டு கதைப் பாடல்களில் ஆசிரியரின் தகுதி, கற்பித்த பாடங்கள் பற்றிய செய்திகள் வருகின்றன. இவை கிராமங்களில் கற்பித்தமுறை தொடர்பானவை. கல்வெட்டுகளில் காணப்படாதவை.

### அம்மானைப் பாடல்களில்

புகழேந்திப் புலவர் பேரில் உள்ள அம்மானைப் பாடல்களிலும், வில்லிசை கணியான் ஆட்டம் கலைகளுக்குரிய கதைப்பாடல்களிலும் 16-முதல் 19ஆம் நூற்றாண்டுவரை உள்ள காலகட்டத்தில் பாமர மக்கள் கல்விகற்றது பற்றிய செய்திகள் உள்ளன. இக்காலங்களில் 7 வயதுக்குப் பின்னரேதான் கல்வி கற்க வேண்டும் என்ற வழக்கு இருந்திருக்கிறது. ஆத்திசூடி முதலான நீதி நூற்களைக் கற்றவனே படித்தவன் என்ற நம்பிக்கையும் இருந்தது.

### ஆசிரியரின் கல்மிஷம்

அபிமன்னன் சுந்தரிமாலை என்னும் கதைப் பாடல் உண்டு. அதில் அர்ஜுனனின் மகன் வீர அபிமன்யூ பற்றியது. கிருஷ்ணனின் மகள் சுந்தரி அபிமன்யூவைக் காதலிக்கிறாள். கிருஷ்ணன் அதற்குத் தடைசொல்லுகிறான். அவளிடம் நீ எந்த ஆசிரியரிடம் படித்தாய் எனக் கேட்கிறான். சுந்தரி உடனே ஆசிரியர் ஒருவரின் கதையைக் கூறுகிறாள். அந்த ஆசிரியர் தன் மாணவியிடம் கல்மிஷம் செய்கிறார். அவர் கடைசியில் புலிகடித்து இறக்கிறார்; கொல்லப்படுகிறார். இதுபோல் வேறு கதைகளும் உண்டு. இதுபோன்ற பதிவுகள் இலக்கியங்களிலோ கல்வெட்டுகளிலோ இல்லை.

### திருவிதாங்கூரில்

திருவிதாங்கூர் அரசு பள்ளிகள் அறிமுகமாவதற்கு முன் இருந்த - திண்ணைப் பள்ளிக் கூடங்கள் பற்றி திருவிதாங்கூர் சர்ச் வரலாற்றை எழுதிய சி.எம்.ஆகூர் என்பவர் விரிவாகச் சொல்லியிருக்கிறார். "1903இல் திருவிதாங்கூரில் 1300 திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்தன. இவற்றில் 50,000 மாணவர்கள் படித்தனர். ஒரு பள்ளிக்கு ஒரே ஆசிரியராக இருந்தார். பெண்கள் இந்தப் பள்ளிகளில் படிக்கவில்லை. திண்ணைப் பள்ளிக் கூட ஆசிரியர்கள் செல்வந்தர் வீடுகளுக்குச் சென்று பெண்களுக்குக் கற்பித்திருக்கிறார்கள்" என்கிறார்.

திருவிதாங்கூரில் 1860லேயே அரசு பள்ளிகள் வந்த பின்பும் 40 ஆண்டுகள் கழித்தும் திண்ணைப் பள்ளிகள் நடந்திருக்கின்றன. இது போன்றே தமிழகத்தின் நிலையும், சென்னையில் பல்கலைக்கழகம், ராஜதானி கல்லூரி, தாம்பரம் கல்லூரி, பிஷப் ஹியூபர் கல்லூரி, பாளை தூய சேவியர் கல்லூரி, வளனார் கல்லூரி எல்லாம் தொடங்கப்பட்ட பின்பு 60-70ஆண்டுகள் திண்ணைப் பள்ளிகள் நடந்திருக்கின்றன.

### திண்ணையில் பள்ளிகள்

பள்ளி என்பது சமண சமயம் தொடர்பான சொல். மடங்களைக் குறிக்கவும் பின் கல்விக் கூடங்களைக் குறிக்கவும் பயன்பட்டது. ஆசிரியரின் வீட்டுத் திண்ணையே பள்ளியாகச் செயல்பட்டது. இது தமிழகத்தில் பரவலான ஆரம்பகால நிலை. இது பற்றிய குறிப்புகள் உ.வே.சா. போன்ற பழைய தமிழறிஞர்களின் அனுபவக் கட்டுரைகளில் உள்ளன.

பெரும்பாலும் திண்ணைப் பள்ளிக் கூடம் இருந்த ஊரில் உள்ள மாணவர்களே இங்குக் கற்றனர். மாணவர்கள் வீட்டிற்குச் சென்று திரும்பும் அளவு தூரத்தில்தான் திண்ணைப் பள்ளிக் கூடம் இருந்தது.

மாணவர்கள் அதிகாலையில் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குள் நுழைந்ததும் ஆசிரியர் மாணவன் கையில் பிரம்பால் லேசாக அடித்துதான் வரவேற்பார். அது பள்ளிக்கு வந்ததன் அடையாளம். மாணவன் காலையில் கொண்டுவந்த மணலைத் தரையில் கொட்டி பரப்பிவிட்டு எழுதப் பழகுவான். வரிவடிவமும் ஒலி வடிவமும் முழுதும் பூர்த்தியான பின்புதான் ஓலையில் எழுதும் பயிற்சி ஆரம்பமாகும்.

### சட்டாம்பிள்ளை

மாணவர்களில் உடல்வலு உள்ள திறமையான மாணவனே மற்ற மாணவர்களுக்குப் பாடம் சொல்லவும் செய்வான். கட்டளை இடுவான். அதிகாரம் செய்வான். இவன் சட்டாம்பிள்ளை எனப்படுவான். பிரிட்டிஷ் அரசு காலத்தில்




மாணவனைக் கொண்டே மாணவனுக்குக் கற்பிக்கும் முறை இருந்தது. இதை "சட்டாம்பிள்ளை கல்விமுறை" என்றனர். இது அப்போது கம்பெனி அரசால் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**இரண்டே பாடங்கள்**

திண்ணைப் பள்ளிக் கூடத்தில் தமிழ் கணக்கு இரண்டு மட்டும் கற்பிக்கப்பட்டன. தொடக்ககாலத்தில் நீதி நூற்கள் வழி ஒழுக்கத்தைக் கற்பிப்பதே கல்வி என நம்பப்பட்டது. கணக்கு என்பது வாய்ப்பாடுகளை மனனம் செய்வதுதான். அவை கீழ் வாயிலக்கம், மேல் வாயிலக்கம் குழிமாற்று நெல்லிலக்கம் என்பவை. முக்கியமாக பெருக்கல் வகுத்தல் கூட்டல் வாய்ப்பாடுகளாகக் கற்பிக்கப்பட்டன.

மரபுவழியான தொழில் நுட்பம் கல்வியாக அங்கீகரிக்கப் படவில்லை. இவை தந்தை / மாமா வழியே அறியப்பட்டன.

**முறண்டு**

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பாடத்தை ஒப்புவிப்பதை முறை சொல்லுதல் என்றனர். இதற்கு முறண்டு என்றும் பேச்சுவழக்குச் சொல்லும் உண்டு. திரும்பத்திரும்பச் சொல்லுதல் என்பது இதன் பொருள். முறண்டு பிடித்தல் என்னும் சொல்வழக்காறு இதிலிருந்து வந்திருக்கலாம்.

**சம்பளம்**

மாத அமாவாசை, பிரதமை, அட்டமி நாட்களிலும் விஜயதசமி, தீபாவளி, சதுர்த்தி போன்ற நாட்களிலும் திண்ணைப் பள்ளிக்கூடத்துக்கு விடுமுறை நாட்கள். இவை வாவு நாட்கள் எனப்படும். ஆசிரியருக்கு மாதம்தோறும்கால் அதற்குக் கூடுதலோ சம்பளம் கொடுக்கும் மரபு தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இருந்ததை உ.வே.சா. கூறுகிறார். தினமும் காய்கறி, வறட்டி, விறகு என எதாவது ஒன்றையும் கொடுப்பதுண்டு. வசதி படைத்த மாணவன் இன்னும் அதிகம் கொடுப்பார். இவர்களின் வீட்டுக் கல்யாண சமயத்தில் ஆசிரியருக்கு ஆடையும் தானியங்களும் கொடுப்பார்கள். நவராத்திரி காலத்தில் ஆசிரியருக்கு வருமானம் அதிகம். இது வட்டாரத்துக்கு வட்டாரம் மாறுபடும்.

**தண்டனை**

மாணவனைத் தண்டிப்பதன் மூலம் தான் நல்ல கல்வியைக் கொடுக்க முடியும் என்பது அன்றைய ஆசிரியர்களின் உறுதியான நம்பிக்கை. இதற்குப் பெற்றோர்களும் மறுப்புச் சொல்லவில்லை. ஆசிரியர் எப்போதும் பிரம்புடன்தான் இருப்பார். அம்மானைப் பாடல்களும் வில்லிசைப் பாடல்களும் இந்தத் தண்டனைகளைப் பட்டியல் போடுகின்றன. பிரதாபமுதலியார் சரித்திரம் என்னும் நாவலில், ஆசிரியர் அடிப்பது பற்றிய செய்தி கிண்டலாகக் கூறப்படுகிறது. செல்வந்தரான பிரதாபனுக்குக் கற்பித்த ஆசிரியருக்கு மாணவனுக்கு அடிகொடுக்காமல் பாடம் நடத்த முடியாது. ஜமீந்தாரின் மகனை அடிக்கவும் முடியாது. அதனால் அடிப்பதற்கென்றே ஒரு மாணவனை நியமித்தார் ஜமீந்தார். பிரதாபன் பாடம் சொல்லவில்லை என்றால் அந்தக் கூலி மாணவன் அடிபடுவான். இந்த நாவல் தமிழின் முதல் நாவல் 1878இல் வந்தது.

திண்ணைப் பள்ளிக் கூடங்களில் கற்பிக்கப்பட்ட இன்னொரு விஷயம் ஓலையில் எழுதவும் படிக்கவும் பயிற்சி கொடுத்தது. பனை ஓலையை வடிவமைப்பது, எழுதுவது, பாதுகாப்பது எனப்பல விஷயங்களை திண்ணைப் பள்ளிக் கூட ஆசிரியரே கற்பித்திருக்கிறார். வில்லிசைப் பாடல்களில் கூட இது பற்றிய செய்தி வருகின்றது (சிவராம பாண்டியன் கதை, ஆந்திரமுடையார் கதை)

தமிழகத்தில் இரண்டு வகையான ஓலைகளில் எழுதினார்கள். முதல்வகை சாதாரணப் பனை ஓலை; இந்தவகை சுவடிகள் அதிகம் கிடைக்கின்றன. இன்னொன்று சீதாளப் பனை ஓலை அல்லது தாளிப்பனை ஓலை. இந்த ஓலை நீளமும் அகலமும் அதிகம் உடையது. மென்மையானதும் கூட. அதனால் பெரிய இதிகாசங்களை எழுத இந்த ஓலையைப் பயன்படுத்தினர். இந்த ஓலை நாளடைவில் கறுத்துவிடும் என்பது ஒரு குறை. கன்னியாகுமரி மாவட்டம் பார்த்திவசேகரபுரம் என்ற ஊரில் கிடைத்த சமஸ்கிருத இலக்கியங்கள் எல்லாம் தாளிப்பனை ஓலையில் எழுதப்பட்டவை என இவற்றை சேகரித்த கணபதி சாஸ்திரிகள் கூறுகிறார். கவி பாஷனின் ஸ்வப்பன வாசவதத்தா என்ற சமஸ்கிருத நூலின் முழுமையான வடிவம்

இந்தியாவிலேயே இந்த ஊரில்தான் கிடைத்தது. அதுவும் ஒரு திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரின் வீட்டிலிருந்தது.

**எழுத்தாணி**

ஓலையில் எழுத எழுத்தாணி என்ற கருவியைப் பயன்படுத்தினர். இது குண்டெழுத்தாணி, வாரெழுத்தாணி, மடக்கெழுத்தாணி எனப் பல பெயர்களில் இருந்தது. மிகச் சிறிய எழுத்தில் எழுத கூரெழுத்தாணி என்ற ஒருவகையைப் பயன்படுத்தினர். மந்திரவாத நூற்கள் எழுத கூரெழுத்தாணிதான் வேண்டும் என்ற செய்தியை "காணி சாவு" கதைப்பாடல் கூறும். வரைபடம் வரைய நுட்பமான குறியீடுகளை எழுத கூரெழுத்தாணியால் தான் முடியும். ஓலையை நறுக்கப் பயன்பட்ட கத்தியும் எழுத்தாணியும் இணைந்த வடிவம் உண்டு. இது மடக்கெழுத்தாணி எனப்பட்டது. பனையோலை செய்த கூட்டுக்குள் இருப்பது வாரெழுத்தாணி.

**எழுதும் முறை**

ஓலையை இடது கையால் பிடித்து வலது கையால் எழுதினர். சிலர் இடது கை பெருவிரலில் நீண்ட நகம் வளர்த்திருப்பார். நகத்தில் பிறைவடிவத்துளை இருக்கும். பெருவிரல் நகத்தை ஓலையில் பதித்து பிறைதுவாரம் வழி கூரிய எழுத்தாணி முனையை நுழைத்து எழுதுவர். மிகச் சிறிய எழுத்து எழுத இந்த முறை. சிவராமப் பாண்டியர் கதைப்பாடல் இதை நுணுக்கமாகக் கூறுகிறது.

ஒரு ஓலையில் இத்தனை வரி எழுத வேண்டும் என்ற கணக்கில்லை. ஓலையின் பக்க எண் இடுவது, தலைப்பு இடுவது என்ற வழக்கம் இருந்தது. இலக்கிய ஏடுகளைவிட மந்திரவாத, மருத்துவ, ஜோதிட ஓலைகளில் இந்த வழக்கம் கட்டாயமாக்கப்பட்டிருந்ததை பதனீர் குணசிந்தாமணி ஏட்டுப் பிரதி கூறும். ஓலைக்கட்டுகளில் ஒன்றோ ரெண்டோ துவாரமிட்டு நூலைச் செருகி கட்டிவைப்பர். கயிறு நழுவாமல் இருக்க பனை ஓலை நறுக்கைக் கட்டியிருப்பர், இது கிளிமூக்கு எனப்பட்டது.

**ஓலை பாதுகாப்பு**

ஓலைச் சுவடியைப் பாதுகாப்பது பற்றி உ.வே.சா. போன்றோர் கூறியுள்ளனர். பதநீர் குணசிந்தாமணி என்ற ஏடு இது பற்றி விரிவாகக் கூறுகிறது. வசம்பு, மஞ்சள் பொலிவுடன் மணத்தக்காளி இலை அல்லது ஊமத்தம்பூ இலைச்சாற்றைக் கலந்து ஓலையில் பூசலாம். தர்ப்பைப் புல் கரியுடன் இலைச்சாற்றைக் கலந்தும் பூசலாம். இந்த மூலிகைக் கலப்புக் குழம்பு பூசுவதால் ஓலையைப் பூச்சி அரிக்காது.

**படியோலை**

ஒரு ஏட்டைப் பிரதி எடுப்பதை படியோலை என்பர். வடஇந்தியாவில் இப்படி பிரதி செய்வதற்கு என்று "காயஸ்கர்" என்ற ஒரு சாதியினர் இருந்தனர் என்று கார்த்திகேய சிவத்தம்பி கூறுகிறார். தமிழகத்தில் இப்படிப் படியோலை எடுக்க தனியான ஊர்கள் இருந்தன. இந்த ஊர்களின் அடையாளம் கேட்டு உ.வே.சா. அலைந்திருக்கிறார். திருநெல்வேலி மாவட்டம் தென்திருப்பேரை, ஆழ்வார் திருநகரி என இப்படிச் சில உதாரணங்கள். இப்படியான பல செய்திகளை திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் கற்பித்தனர்.

திண்ணைப் பள்ளிக் கூடம் தொடர்பான சில சொற்கள் இப்போது வழக்கில் இல்லை.

அண்ணாந்தாள் - மாணவனுக்குக் கொடுக்கப்படும் தண்டனை.

ஏற்றாள் அல்லது வேற்றாள் - பள்ளிக் கூடத்துக்கு முதலில் வரும் மாணவன்

கட்டை மாட்டல் - மாணவனுக்குரிய தண்டனை

குதிரை ஏற்றம் - மாணவனுக்குரிய தண்டனை

கோதண்டம் இடுதல் - மாணவனுக்குரிய தண்டனை

சட்டம் - மாணவனுக்கு எழுத்துக்களை ஓலையில் எழுதும் முதல் பயிற்சி

சட்டாம்பிள்ளை - மாணவர் தலைவன்

சுவடிதூக்கு - ஓலைச் சுவடிகளை ஒரு பலகையில் வைத்து முதுகின் முன் தொங்கவிட்டு தூக்கிச் செல்வது.

துவக்கல் - புதிய ஏட்டை படிக்கத் தொடங்கும் முதல் நிகழ்வு

படியோலை - மூல ஓலையிலிருந்து பிரதி செய்யும் ஓலை

மானம்பூ - ஆசிரியருக்கு நவராத்திரியில் வரும் உபரி வருமானம்

முறங்கு சொல்லல் - மனப்பாடமானதை திருப்பிச் சொல்லுதல்

முறை சொல்லல் - மனப்பாடமானதை திருப்பிச் சொல்லுதல்

முரண்டு - உருப்போடுதல், திரும்பத் திரும்பச் சொல்லுதல்

வாவுநாள் - விடுமுறை நாள்

வாவுக்காசு - ஆசிரியரின் சம்பளம்

●

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் வெளியீடாக வெ.இறையன்பு அவர்களின் புதிய நூல்கள்

**ஒவ்வொரு புத்தகமும் விலை ரூ. 50/-**






























# நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, 48601884 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in


## முன் வெளியீட்டுத் திட்டம்

# தமிழில் மார்க்சிய செவ்வியல் நூல்கள் மொழிபெயர்ப்புத் திட்டம்

முதன்மைப் பதிப்பாசிரியர்: **ந.முத்துமோகன்**



**பொதுவுடைமை - குழந்தைகளுக்காக**
பீனி அடம்ஸாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள்: ஜேக்கப் புளூமென்ஃபெல்ட், சோஃபி லூவிஸ் | தமிழில் - எம். பாண்டியராஜன்




**இடதுசார் வெகுமக்களியத்தை நோக்கி**
சந்தால் மோஃபே | தமிழில்: பொன். சின்னதம்பி முருகேசன்



**சர்வாதிகாரம் குறித்து: இருபதாம் நூற்றாண்டிலிருந்து இருபது பாடங்கள்**
டிமோத்தி ஸ்னைடெர் | தமிழில்: ரமேஷ்




**அரசியலாகிற பண்பாடு**
கிறிஸ்டோபர் காட்வெல் பதிப்பாசிரியர்: டேவிட் மார்கோலியெஸ் தமிழில்: கமலாலயன்



**சொத்தின் வரலாறு - ஆதிகாலத்திலிருந்து நாகரிக காலம் வரை**
பால் லஃபார்க் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்




**லெனின் சந்தித்த நெருக்கடிகள் (பயங்கரவாதம், போர், பேரரசு, காதல், புரட்சி)**
தாரிக் அலி | தமிழில்: க.பூர்ணச்சந்திரன்



**கார்ல் மார்க்ஸ் - ஓர் ஆய்வு**
எர்னெஸ்ட் பிளாக் | ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: ஜான் மேக்ஸ்வெல் தமிழில்: பொன்.சின்னதம்பி முருகேசன்




**தொடக்கக் காலக் கிளர்ச்சியாளர்கள்**
எரிக் ஹாப்ஸ்பாம் தமிழில்: ரகு அந்தோணி



**மார்க்ஸ் : முதலாளியத்துக்கு மாற்று**
கியரென் ஆலென் | தமிழில்: சா.தேவதாஸ்



**ரோசா லக்சம்பர்கும் ஜனநாயக மீட்டுருவாக்கத்துக்கான போராட்டமும்**
ஜான் நிக்ஸன் | தமிழில்: சா.தேவதாஸ்




**சமூகம்சார் கொள்ளையர்கள்**
எரிக் ஹாப்ஸ்பாம் | தமிழில்: ரகு அந்தோணி



**கிராம்ஷியைப் பயன்படுத்துதல் - ஒரு புதிய அணுகுமுறை**
மைக்கேல் ஃபிலிப்பினி இத்தாலிய மொழி-யிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பேட்ரிக் ஜே.பார் | தமிழில்: சே.கோச்சடை



**பாலியல் முதிர்ச்சிமிக்க கம்யூனிசப் பெண்ணின் தன்வரலாறு**
அலெக்சாண்டிரா கொலந்தாய் | ரஷ்ய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: சல்வேதார் அத்தன்சியோ | தமிழில்: அ.மங்கை



**மார்க்சின் தத்துவம்**
எட்டியேன் பாலிபர் | பிரெஞ்சு மொழி-யிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: கிரிஸ் டர்னர் | தமிழில்: வேட்டை எஸ்.கண்ணன்



**மார்க்சுக்கு ஆதரவாக**
லூயி அல்தூசர் | பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்: பென் புரூஸ்டெர் | தமிழில்: க. பூர்ணச்சந்திரன்

**15 நூல்கள்**
**சுமார் 4000 பக்கங்கள்**
**விலை இ.ரூ.5000/-**
**முன் வெளியீட்டுத் திட்டத்தில்**
**இ.ரூ.3000/-**
**மட்டுமே!**

**A5 அளவு, தரமான தாள், அழகிய வடிவமைப்புடன்**

**கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்து கொள்ளலாம்.**

இலங்கையிலுள்ள மார்க்சிய சிந்தனையாளர்கள், வரலாற்றுத்துறை, தத்துவத் துறை, சமூகவியல் துறை மற்றும் மானுடவியல் துறைப் பேராசிரியர்கள், மாணவ - மாணவிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு பெரிதும் பயன்படும் வகையில் தமிழில் 15 மார்க்சிய செவ்வியல் நூல்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன. இந்நூல்களை முன்வெளியீட்டுத் திட்டத்தில் பெற, இலங்கை கொழும்புவிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையில் முன்பதிவு செய்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**முகவரி**

**பூபாலசிங்கம் புத்தக சாலை,**
**202, செட்டியார் வீதி, கொழும்பு - 011, இலங்கை.**
**E.mail: poobalasingham202@gmail.com |**
**Ph: 011-2422321, 2435713**

கட்டுரை



# கொங்குநாட்டில் புதிய வட்டெழுத்துக் கல்வெட்டு கண்டுபிடிப்பு

டாக்டர்.ச.இரவி

கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் பேரூராட்சி, கொண்டையம்பாளையம் ஊராட்சி குரும்பாளையம் பஞ்சாயத்துக்குட்பட்ட காளிங்கராயன் குளக்கரையில் கிழக்குப் பகுதியில் கன்னிமார் கோயிலின் அருகே வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்று 2.5அடி நீளமுள்ள துண்டுக் கல்வெட்டில் வாசகம் எழுதப்பட்டிருந்தது. நித்யானந்தபாரதி, புவனேந்திரன், விஜய்பாபு, செல்வராஜ், காமாட்சி ஆகியோர் கொண்ட குழு இரண்டு வாரங்களுக்கு முன்பு குளம் சுத்தப்படுத்தும் பணியில் ஈடுபட்டபோது இதனைக் கண்டறிந்துள்ளனர்.

படிக்கமுடியாத சூழலில் கல்வெட்டியல் பட்டயப்படிப்பு பயிலும் கணபதி தமிழ்ச்சங்கம் நித்தியானந்த பாரதி இவைபற்றித் தகவல் தெரிவிக்க அவ்விடத்திற்குச் சென்று ஆராய்ந்தபோது, 1000 ஆண்டுப் பழமைவாய்ந்த விக்கிரமசோழனாகிய கொங்குச் சோழனுடைய வட்டெழுத்துக் கல்வெட்டு என்று தெரியவந்தது. அக்கல்வெட்டில் வாசகம் எழுதப்பட்டிருப்பது குறித்து, உடனே காளிங்கராயன் குளப்பாதுகாப்புக் குழுவினர் உதவியுடன், இக்கல்வெட்டு வாசகத்தைத் தொல்லியல் துறையைச் சேர்ந்த டாக்டர் இராஜகோபால் அவர்களுடன் படிக்கப்பட்டது. கோவை பி.எஸ்.ஜி பேராசிரியர் டாக்டர் இரவி அவர்கள் அவ்வட்டெழுத்துக் கல்வெட்டைப் படித்து ஆராய்ந்து பல வரலாற்று உண்மைத் தகவல்களை வெளியிட்டுள்ளார்.

அவை வருமாறு:-

**கல்வெட்டு வாசகம்:**

இரண்டரை அடி நீளமுடைய குமுதம் என்று சொல்லக்கூடிய உடைந்த கல்தூணில், நான்கு வரிகளில் வட்டெழுத்தில் எழுதப்பட்டுள்ளதைக் கண்டறியமுடிந்தது. இதன் தொடர்ச்சிப்பகுதி நமக்குக் கிடைக்கவில்லை. அதனைத் தேடும்பணியில் இக்குழு ஈடுபட்டு வருகிறது.

கிடைத்த கல்வெட்டு வாசகம் பின்வருமாறு:-

- ஸ்வஸ்திஸ்ரீ கோக்கலிமூர்க்க ஸ்ரீவிக்கிரமசோழன்வடபரி...
- சாரநாட்டுக் கலையம்புத்தூரி....
- ஆ கைக்கொண்டு பாலமுது படிக்கும்....
- சந்திராதித்தவற்சேவகவும்...

என்று உள்ளது.

இக்கல்வெட்டுத் துண்டு கிடைத்த இடத்தில் இப்போது ஏழு கன்னிமார் கோயில் உள்ளது. இக்கல்தூண் கல்வெட்டு கட்டுமானக் கோயிலில் அமைக்கப்பட்ட குமுதப் பகுதியில் எழுதப்பட்ட

கல்வெட்டாகும். நன்கு கட்டமைக்கப்பட்ட கட்டுமானக்கோயிலில் இத்துண்டுக் கல்வெட்டு குமுதப்பகுதியில் இருந்திருக்க வேண்டும். இதற்கு முன்பு காளிங்கராயன் குளத்தின் கிழக்குக்கரையில் இக்கோயில் இருந்திருக்கிறது. தண்ணீர் நிரம்பி இக்குளக்கரை உடைந்தபோது மழை வெள்ளத்தில் அக்கட்டுமானக்கோயில் சிதிலமடைந்துபோக எஞ்சியுள்ள இத்துண்டுக் கல்வெட்டு மட்டுமே நமக்குக் கிடைத்திருக்கிறது. மற்றபகுதி காணாமல் போய்விட்டது. சிதிலமடைந்த இக்கற்களைக் கொண்டே இப்போது இருக்கிற கன்னிமார் கோயிலைக் கட்டி இருக்கிறார்கள் என்று அப்பகுதி மக்கள் குறிப்பிடுகின்றனர்.

**கல்வெட்டு கூறும் செய்தி :**

கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் வடபரிசார நாட்டிற்குட்பட்ட கவையம்புத்தூரில், (இப்போதைய கோவில்பாளையம்) வழிபாட்டில் சிறப்பாக இருந்த (இப்போது அழிந்துவிட்ட) கோயில், இறைவனுக்குச் சந்திரசூரியன் உள்ள வரைக்கும் பூசை வழியாகப் படைக்கப்படும் பாலமுதமாகிய நைவேத்தியங்கள் செய்து கொடுக்கும் இறைக் கொடைபற்றிய செய்தியை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

**வரலாற்றுச் செய்தி:**

**ஊர்ப்பெருமை:**

காளிங்கராயன் குளக்கரையில் கிடைக்கப்பெற்ற இவ்வட்டெழுத்துக் கல்வெட்டு மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

காளிங்கராயன் கிழக்குக்குளக்கரையில் கண்டெடுக்கப்பட்ட இக்கல்வெட்டு உள்ள இடத்தில் இருந்து 3கி.மீ கிழக்கே கோவில்பாளையம் என்ற ஊர் உள்ளது. இவ்வூர், பண்டைய வரலாற்றுச்சிறப்புப் பெற்றது. கௌசிகா நதிக்கரையில் உள்ள இவ்வூர் கௌசிகா நதிப்பண்பாட்டை வெளிப்படுத்தும் வரலாற்றுச்சிறப்புமிக்க சாம்பல் மேட்டுப்பகுதியில் பல தொல்லியல் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வூரின் வரலாற்றுப் பெருமையைப் பேசும் கோட்டைமேட்டுப் பகுதியிலும் மேற்பரப்பாய்வுப் பணியைச் செய்து பண்டைய வரலாற்றுச் சிறப்பு மிக்க தொல்லியல் எச்சங்களை முன்பு கண்டறிந்துள்ளோம். இதன் மூலம் இரும்புக்காலம் மற்றும் மட்கலப் பண்பாட்டுக்கால மக்கள் நெசவு மற்றும் கல்மணித் தொழிலில் மேம்பட்டு இருந்ததை ஆய்வு செய்து உறுதி செய்திருக்கிறோம்.

கல்வெட்டு குறிப்பிடும் கவையம்புத்தூர், 2000 ஆண்டுப் பழமை உடைய ஊர் என்பதைக் கடந்த நான்கைந்து ஆண்டு கால எங்களது ஆய்விலே வெளிப்படுத்தி வந்திருக்கிறோம்.

காளிங்கராயன் குளம் 150 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது. இக்குளப்பகுதி நீர்மேலாண்மையின் சிறப்பை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. வரலாற்றுக்காலத்திலும் இடைக்காலத்திலும் இப்பகுதியில் உள்ள குளங்களுக்கு வற்றாத ஜீவநதியாக ஓடிய கௌசிகா நதி இப்பகுதி வேளாண் விவசாயத்திற்கு வித்திட்டது எனலாம்.

இப்படி வரலாற்றுச்சிறப்புமிக்க இவ்வூரைக் கல்வெட்டுகள் ‘கவையம்புத்தூர்’ என அழைத்திருப்பதை இக்கல்வெட்டும் உறுதி செய்திருக்கிறது. புத்தூர் என்பது புதிய ஊர் என்ற அடிப்படையில் இடைக்காலத்தில் இவ்வூர் உருவாக்கம் பெற்றிருப்பதை அறியமுடிகிறது.

**நாட்டுப்பெருமை:**

இவ்வூர் இடைக்காலத்தில் வடபரிசார நாட்டுப்பகுதியில் இருந்ததை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது.

மூன்று பெரும்பகுதியாக இக்காலத்தில் கொங்குநாடு பிரிக்கப்பட்டிருந்தது.

- வடகொங்கு
- தென்கொங்கு
- வீரசோழ வளநாடு

வடகொங்குப்பகுதி இடைக்காலத்தில் 20 நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாடு என்பது விவசாயப் பகுதியைக் குறிப்பதாகும். அதில் ஒன்றுதான் வடபரிசார நாடு. கொங்குநாட்டுப் பிரிவுகளில் இதுவே மிகப்பெரியதாக இருந்தபகுதி.

‘வடபரிசார நாடு’ நொய்யல் ஆற்றின் வடக்கே இருப்பதால் இப்பெயர் திசையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த பெயராகக் காணலாம்.

‘வடபரிசார நாடு’ என்ற பெயரைக்கூறும் முதல் கல்வெட்டு என்ற பெருமையையும் இக்கல்வெட்டு பெறுகிறது.

கொங்குநாட்டில் உள்நாட்டுப்பிரிவுகள் கி.பி.10ஆம் நூற்றாண்டு முதல் தான் உருவாகி-யிருக்கிறது. இதற்கு முன் உள்நாட்டுப்பிரிவுகள் இல்லை.

**அரசியல் சிறப்பு:**

**கொங்குச்சோழர் ஆட்சி :**

கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.14ஆம் நூற்றாண்டு வரை கொங்குப்பகுதியில் கொங்குச் சோழர் ஆட்சி குறிப்பிடத்தக்க வரலாற்றுச் சிறப்புடையதாகத் திகழ்ந்தது. இக்காலத்தில் கொங்குச் சோழர்கள் நிலையான ஆட்சியைக் கொடுத்தனர். கி.பி.942 முதல் கி.பி.1305 வரை 350 ஆண்டுகால ஆட்சி கொங்குச் சோழர்களது



ஆட்சியாகத் திகழ்ந்தது. சோழன் என்ற அடைமொழியுடன் இவர்கள் இப்பகுதியில் ஆட்சி செய்தனர்; அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் கணிசமான பங்களிப்புக்குக் காரணமானவர்களாக இவர்கள் விளங்கினர். போராட்டம், படையெடுப்பு, வெற்றி, தோல்வி நிறைந்ததாகவும் அரசியல் வாழ்க்கை நிலையற்றதாகவும் இப்பகுதி இருந்தது.

**அரசின் சிறப்பு:**

கல்வெட்டில் குறிப்பிடப்படும் கலிமூர்க்க விக்கிரமசோழன் 42 ஆண்டுகள் ஆட்சி புரிந்திருக்கிறான். இவரது காலம் கி.பி.1004-05 முதல் 1047 வரையாகும். இவரது தந்தை வீரசோழக்கலிமூர்க்கன் ஆவார். இவர், கி.பி.980 முதல் கி.பி.1004 வரை 24 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளார்.

இவ்வாறாகத் தந்தைக்குப்பின் மகன் என்ற முறையில் அதாவது பாட்டன், தந்தை, மகன் என்று அடுத்தடுத்த மூன்று தலைமுறை உறவுகளை இவர்களது அரசியலில் காணமுடிகிறது.

விக்கிரமசோழனது கல்வெட்டு வடபரிசார நாட்டுப் பகுதிகளாகிய அன்னூர், திங்களூர் அடுத்துத் தற்போது கோவில் பாளையத்திலும் கிடைத்திருப்பது இப்பகுதியின் சிறப்பிற்குச் சான்றாக அமைகிறது.

கொங்குச்சோழர்கள் கோனாட்டு இருக்குவேளிர் மரபினைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்குச் சோழர் ஆட்சியை உருவாக்கியவர் வீரசோழன் ஆவார். இவரே கொங்குச் சோழர்களில் முதல் ஆட்சியாளராகக் கருதப்படுகின்றார். இவரது பேரன்தான் கலிமூர்க்க விக்கிரமசோழன். 'கலிமூர்க்கன்' என்ற பெயர் தந்தையைக் குறிக்கிறது. விக்கிரமசோழன் என்ற பெயர் கல்வெட்டில் உள்ள பெயர்.

கலிமூர்க்கன் என்ற பெயர் இரண்டு மன்னர்களின் பெயர்களுடன் சேர்த்துக் கூறப்படுகிறது. அதாவது தன்பெயருக்கு முன் தந்தையின் பெயரைக் குறிப்பிடும் மரபு இருந்திருப்பதை அறியமுடிகிறது. ஆகவே தான் வீரசோழக் கலிமூர்க்கன், கலிமூர்க்கன் விக்கிரமசோழன் என்ற இரண்டு பெயர்கள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. கல்வெட்டில் உள்ள கலிமூர்க்கன் தந்தையின் பெயராகும் விக்கிரமச்சோழன் பெயர் இக்கல்வெட்டில் முழுமையும் கிடைக்கப்பெறவில்லை 'வி' மட்டுமே உள்ளது. எனவே கலிமூர்க்கனை விக்கிரம சோழனின் தந்தையாகப் பார்க்க முடிகிறது.

கலிமூர்க்கன் என்ற பெயர் கலியைக் கடிந்தவன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'கலி' என்பது கலியுகம், கொடுமை, தர்ம அழிவு என்பதைக் குறிக்கும். அதாவது கலிமூர்க்கன் என்ற இப்பெயர் துன்பம் மிக்க கலிகாலத்தை அழித்தவன் என்பதாக அமைகிறது.

**கோயில் கொடை:**

இடைக்காலத்தில் கோயில் கட்டியதோடு வழிபாடு குறைவின்றி நடைபெறுவதற்குக் கொடை கொடுக்கப்பட்டது.

விழாக்காலங்களில் சிறப்பு வழிபாட்டின்போது அடியார்களுக்கும் தவசிகளுக்கும் உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

'கல்வெட்டில் 'ஆ' கைக் கொண்டு பாலமுது படிக்கும்' என்று சொல்லப்பட்டிருப்பது பசுக்கள் கோயிலுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டிருப்பதோடு அவற்றின் வழி பெறப்படும் பாலமுது பூசை வழியாகப் படைக்கப்படும் நைவேத்தியங்களைக் குறிக்கிறது. அப்பமுது, அவலமுது, இளநீரமுது, தண்ணீரமுது, பிட்டமுது போல இக்கல்வெட்டில் இறைக் கொடையாகப் படையல் சோறு என்ற பொருளில் பாலமுது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**முடிவு:**

இவ்வாறு காளிங்கராயன் குளக்கல்வெட்டு கி.பி.11ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வட்டெழுத்தில் எழுதப்பட்டதாகும். வடபரிசார நாட்டில் கிடைக்கப்பெற்ற வட்டெழுத்தில் இறுதிக்காலக் கல்வெட்டாக இக்கல்வெட்டைக் கருதலாம். இதற்குப் பிறகு இப்பகுதியில் வட்டெழுத்து வழக்கில் இல்லை எனக் கருதமுடிகிறது. கொங்குப் பகுதியில் வட்டெழுத்துக் கல்வெட்டு அருகிலேயே காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

வட கொங்கு நாட்டின் உட்பிரிவுகள் உள்ள 20 நாடுகளில் வடபரிசார நாடு ஒன்று. இதனை இக்கல்வெட்டு குறிக்கப்படுகிறது. இதில் வடபரிசார நாடு பெரிய நிலப்பரப்பைக் கொண்டதோடு நொய்யலின் வடக்கில் அமைந்த பகுதி என்ற அளவில் திசைப்பெயராக அமைகிறது.

இப்போது வழக்கில் உள்ள கோவில்பாளையம் என்ற ஊர் இக்கல்வெட்டில் கவையன் புத்தூராகக் குறிக்கப்பெறுகிறது. இடைக்காலக் கல்வெட்டுகளிலும் இப்பெயரே காணப்படுகிறது.

கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் வடபரிசார நாட்டை கி.பி.11ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆட்சி செய்திருப்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. அத்துடன் இம்மன்னனின் தந்தை வீரசோழக் கலிமூர்க்கனாகவும் இவரது பாட்டனார் கொங்குச்சோழர் ஆட்சியை உருவாக்கிய முதலாவது வீரசோழனாகவும் பார்க்கமுடிகிறது.

இறைக்கொடையைப் பற்றிக் கூறும் இக்கல்வெட்டு 'ஆ' க்களைக் கொடையாகப் பெற்று அதன்வழி பெறும் பாலமுது படையலைப் பற்றிப் பேசியிருக்கிறது.

கொங்குச்சோழர்கள் இருக்குவேளிர் வழி வந்தவர்கள் என்பதும், வடகொங்கில் அமைந்த வடபரிசார நாட்டை ஆண்டவர்கள் என்பதும் பெறப்படுகிறது.

மங்களம் உண்டாகுக என்ற பொருளில் ஸ்வஸ்திஸ்ரீ என்ற இக்கல்வெட்டுத் தொடங்கி சந்திரன் சூரியன் இருக்கும்வரை இறைக்கொடையைப் பின்பற்றுவதற்குச் சந்திராதித்தவற் சேவகவும் என்று கல்வெட்டு முடியும் பகுதியாகக் கிடைக்கப்பெற்றது, என்றாலும் தொடர்ச்சியாக எழுதப்பட்ட மற்றொரு துண்டுக்கல்வெட்டும் கிடைக்கப்பெற்றால் மேலும் முழுமையான வரலாற்றை (ஆட்சி ஆண்டு, இறைதெய்வம்) அறிந்து கொள்வதற்கு ஏதுவாக இருந்திருக்கும்.

●

## FORM - IV

Statement about ownership and other particulars about newspaper New Centuryin Ungal Noolagam to be published in the first issue every year after the last day March.

1. Place of Publication : Chennai

2. Periodicity of its Publication : Monthly

3. Printer's Name : S.Shanmuganathan
   Nationality : Indian
   Address : Pavai Printers (P) Ltd., 16(142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

4. Publisher's Name : Shanmugam Saravanan
   Nationality : Indian
   Address : New Century's Readers Sangam, 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

5. Editor's Name : T.Stalin Gunasekaran
   Nationality : Indian
   Address : 16 (142), Jani Jhan khan Road, Royapettah, Chennai - 14.

6. Names and addresses of individuals those who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.

I, Shanmugam Saravanan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Shanmugam Saravanan)

Signature of Publisher




# கருவி மாமழை சிலைதரும் குரலே

ஆ.கார்த்திகேயன்

**இயற்கையும் சங்கப் பாடலும்**

தமிழில் ஒப்பிலக்கிய ஆராய்ச்சிக்கு வித்திட்ட அறிஞர்களுள் அருள்தந்தை தனிநாயக அடிகளார் முக்கியமானவர். அவர் பல மேலை நாட்டு இலக்கியங்களையும் வடமொழி இலக்கியங்களையும் சங்கப் பாடல்களோடு ஒப்பிட்டுத் தமிழ் இலக்கியத்தின் தனித் தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். 'நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்' (நியூ செஞ்சுரி வெளியீடு, 2014) என்ற தம் நூலில் ஒப்புநோக்கில் இயற்கைக் கவிதை என்ற இயலில் சமஸ்கிருத கவிதையுடனும், கிரேக்க இலத்தீன் கவிதைகளுடனும் ஆங்கிலக் கவிதைகளுடனும் தமிழ்க் கவிதைகளை ஒப்பிடுகிறார். பல மொழிக் கவிதைகளையும் ஒப்பிடும்போது அந்தக் கவிதை, பிறந்த நாட்டின் புவியியல் அமைப்பினை அடிப்படை நோக்காகக் கொள்ளாமல் இருக்க முடியாது என்று கூறுகிறார். சங்கக் கவிதையில் இயற்கை பற்றிய கருத்தாக்கமும் விளக்கமும் சமஸ்கிருத இயற்கைக் கவிதையிலிருந்து பெருமளவு வேறுபடுகின்றன என்று அவர் நம்புகிறார்.




நில அமைப்பும் தமிழ்க் கவிதையும்
தனிநாயக அடிகள்
தமிழில்: பேரா.க.பூரணச்சந்திரன்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை
விலை: ரூ.150/-

சங்கக் கவிதையில் இயற்கை, மனித இயற்கை இவை இரண்டின் ஒருங்கிசைவு முற்றிலும் சாத்தியமாகியுள்ளது. தமிழ்க் கவிஞர்கள் மனிதனைப் பற்றித்தான் சிறப்பாக ஆராய்ந்தார்கள். ஆனால் அவர்கள் இயற்கை வாதிகளாகவும் இருக்க வேண்டிய எதிர்பார்ப்பு இருந்தது. மனிதனைப் பற்றிய வகையில் இயற்கை முக்கியமானது. மானிடர்கள் வந்துபோகும் நாடக மேடைதான் இயற்கை. வாழ்க்கை நாடகத்தின் பின்னணியாகவும் சூழலாகவும் இயற்கை அமைந்தது. ஆனால் இயற்கை வெறும் பின்னணி அல்ல. பரிவுணர்ச்சியோடு சேர்ந்த பின்னணி அது. கவிதையில் முக்கிய கூறு மனித உணர்ச்சிகள், நடத்தை, ஒழுக்கம் இவைதான் முக்கியம். ஆனால் இயற்கை இந்த உரிப்பொருள்களை ஒன்றிசைவிலோ முரண்நிலையிலோ பெரிதுபடுத்திக் காட்டியது (தனிநாயக அடிகள், 2014, பக். 41-42).

விலங்குத் தொகுதிகள், பறவை, தாவரத் தொகுதிகள், மலர்கள், ஆறுகள், மலைகள் இவையாவும் இயற்கையின் பாற்பட்டவை. வான், முகில்கூட்டங்கள், நிலவு, சூரியன், விண்மீன்கள் இவையும் இயற்கையின் கூறாக விளங்குகின்றன. அந்தந்த நில அமைப்பிற்கேற்ப அவை கவிதையில் பின்னணியாக விளங்குகின்றன.

**அபபிரம்சா பாடல்கள்**

இனி, மேகம் குறித்து வரும் தமிழ்-அபபிரம்சா அகப் பாடல்கள் சிலவற்றைக் காணலாம். முதலில் அபபிரம்சா பாடல்கள்:

1. தலைவியைப் பிரிந்ததனால் நெஞ்சம் அறுபட்டது. வான்மீதில் மேகம் இடித்து முழங்குகிறது. பயணம் செல்லும் வழிப்போக்கருக்கு மழைக்கால இரவு பேரிடராக அமைகிறது.[1]

2. மேகங்கள் மலைகளைச் சுற்றிப் பொருந்தியுள்ளன (மலைகளை விழுங்குவதைப் போல அக்காட்சி விளங்குகிறது). இதனைக் கண்ணுற்ற வழிப்போக்கன் அழுதுகொண்டே விரைந்து செல்கிறான் (அவன் அச்சத்தில் உறைந்து போயிருக்கிறான்). பெரு மலையையே விழுங்க நினைக்கும் இம்மேகம் என் காதலியை விட்டுவைக்குமா என்ன?[2]

3. தலைவன் வேற்றுநாட்டில் பொருளீட்டச் சென்றுள்ளான். கார்காலம் வந்துவிட்டது. அவன் பின்வருமாறு கூறுகிறான்: தலைவிக்கு என் மீது அன்பிருக்குமானால் இந்நேரம் அவள் இறந்துவிட்டிருப்பாள். அவள் (மனையின்கண்) உயிரோடிருந்தால் (அதிலிருந்து) அவளுக்கு என் மீது அன்பில்லை என்பது திண்ணம். இரண்டு நிலையிலும் நானே என் துணையை இழந்தவனாகிறேன். அப்படி இருக்க, ஏ கொடிய மேகமே, ஏன் இன்னும் இடித்து முழங்குகிறாய்[3]

மேற்கண்ட மூன்று அபபிரம்சா பாடல்களும் தலைவன், வழிப்போக்கன் கூற்றாக வருகின்றன. மூன்று பாடல்களுமே பருவ வரவின் போது தலைவியைப் பிரிந்த துயரத்தை வெளிப்படுத்துகின்றன. தலைவி உயிருடன் இருப்பாளோ இறந்திருப்பாளோ என்ற எண்ணம் தலைவனுக்கு எழுகிறது. தலைவன் தலைவிக்கு மழைக்கால இரவு பேரிடராகும் என்பது வலியுறுத்தப்படுகிறது. மலையைச் சூழ்ந்துள்ள மேகம் இடித்துக் கொட்டுகிறது. இம்மேகம் என் காதலியை விட்டு வைக்குமா? என்றும், நீ ஏன் இடிக்கிறாய்? என்றும் மேகத்தைக் கேட்கிறான். இது கவிஞரின் கற்பனை. தலைவியின் நிலை குறித்தும், இடியைக் குறித்தும், மழைக்கால இரவு குறித்தும், மலையைக் குறித்தும் பெரிய விவரணை ஏதும் இல்லை. அபபிரம்சா பாடல்கள்

எளிய உரிப்பொருளைக் கொண்டு விளங்குகின்றன. கருப்பொருள், முதற்பொருள் விவரங்கள் ஏதுமில்லை. சங்கப் பாடல்களில் மேகம் குறித்த விவரணை சற்று வித்தியாசமாக வருகின்றது.

**சங்கப் பாடலில் மேக வருணனை**

ஒரு குறுந்தொகைப் பாடல் (158) தலைவியின் கூற்றாக மேகத்தைப் பின்னணியாகக் கொண்டு பின்வருமாறு உள்ளது. "உயர்ந்த மலைப் பக்கத்தில் மேகம் சூழ்ந்துள்ளது. அங்குள்ள பாம்புகள் இறந்துபடும்படியாக அம்மேகங்கள் வேகமாக இடித்து முழங்குகின்றன. மேகம் நீராகிய கருப்பத்தை நிரம்ப கொண்டுள்ளது. அம்மேகத்தை நோக்கித் தலைவி கூறுகின்றாள்: ஏ, மேகமே! உனக்கு இரக்கமில்லையா? பெரிய இமய மலையையும் அசைக்கின்ற ஆற்றல் உடைய நீ! உன்னால் அலைக்கழிக்கப்படும் பெண்கள் துணைவரைப் பெற்றிலர். ஆதலால் கருணை காட்டத்தக்கவர். அவர்கள் துன்பப்படும்படி நீ பெய்து அலைத்தல் எதற்காக?" இப்பாடலில் உள்ள தொடர்கள் சுற்றிச் சுற்றிச் சங்கிலித் தொடர் போல மேகத்தையே மையப்படுத்தி வந்துள்ளன.

மாமழை
கமஞ்சூழ் மாமழை
காலொடு வந்த மாமழை
கழறுகுரல் அளைஇ மாமழை
கடுவிசை உருமின் மாமழை
பாம்புபட இடிக்கும் மாமழை
நெடுவரை மருங்கின் மாமழை
இமயமும் துளக்கும் மாமழை
பேரிசை இமயம்
துணை இலர் பெண்டிர்
அளியர் பெண்டிர்

திணை குறிஞ்சித் திணை என்று இப்பாடல் அடையாளப்படுத்தப் பட்டிருப்பினும் இயற்கைப் புனைவும் மேகத்தைக் குறித்த படிமமும் (image) செறிவாக உள்ளன. துணையின்றி பிரிந்து தனித்துள்ளனர் பெண்டிர். அவர் இரங்கத்தக்கவர் என்ற உரிப்பொருள் சிறந்து விளங்கும்படி இயற்கைப் பின்னணி காட்சியாகக் கண்முன் விரிகிறது. மேகம் இடிக்கிறது, மேகமே நீ ஏன் இடிக்கிறாய் என்று முடியும் அபபிரம்சா பாடல்களையும் இங்கு ஒப்பிட்டால் தமிழ்க் கவிதைகளின் செறிவு புலப்படும். அதுமட்டுமன்று 'துணையிலர் பெண்டிர் அளியர் பெண்டிர்' என்று இயற்கையின்பால் மென்மையாக அதன் கருணைக்கு ஏங்கும் தலைவியாகவும் பாடல் நமக்குத் தோன்றுகிறது.

மற்றொரு குறுந்தொகைத் தலைவி மேகம் இரக்கம் இல்லாமல் தன் இன்னுயிரைக் குறி வைப்பதாகத் தோழியிடம் முறையிடுகிறாள். தலைவன் பொருள் ஈட்டுவதற்காக நாட்டைக் கடந்து சென்றுவிட்டான். அவனைப் பிரிந்த துயரத்தில் கைவளைகள் நெகிழப் பெற்று படுக்கையில் கிடக்கின்றாள் தலைவி. நான் இரங்கத்தக்கவள் என்றுகூடக் கருதாமல் இந்த மேகம் இன்னும் மின்னி இடிக்கிறது என் உயிரைக் குறிவைத்து, என்று முறையிடுகிறாள்.

அன்னள் அளியள் என்னாது மாமழை
இன்னும் பெய்யும் முழங்கி
மின்னும் தோழி என் இன் உயிர் குறித்தே
(குறுந். 216)

இன்னொரு குறுந்தொகைத் தலைவி தன் இன்னுயிரைப் பற்றிக் கவலைப்படாமல் பொருள் ஈட்டுவதற்காகச் சென்ற தலைவனைப் பற்றிக் கவலை கொள்கிறாள். தாம் மேற்கொண்ட வினை முடிக்காமல் அவர் மீள்வாரோ என்றும் வருந்துகிறாள்.

'மழைக்காலம் மிக்க குளிர்ச்சியை உடையது. அக்காலத்தில் பிச்சுப் பூக்கள் சிவந்து பூத்துள்ளன. அவை அறிவற்றவை. பூப்பதற்குரிய பருவம்



வருவதற்கு முன்னரே பூத்துவிட்டன. அது எனக்குத் தெரியும். அதனால் நான் வருத்தப்பட மாட்டேன். ஆனால் தனியராகவிருக்கும் தலைவன் மேகக் கூட்டங்கள் இடிக்கும் ஓசையைக் கேட்டால் நடு இரவில் எந்நிலை எய்துவாரோ?' என்று கவலைப்படுகிறாள்.

**அருவி மாமலை தத்தக்**
**கருவி மாமழை சிலைதரும் குரலே (குறுந். 94)**

பிரிவுத்துயர் வருத்த தன்னைப் பற்றியும், தலைவனைப் பற்றியும் கவலை கொள்கிற மனிதர்களை இயற்கைப் பின்னணியில் கவிஞர் கவினுற படைத்துக் காட்டுகிறார்.

### இடித்து இடித்துப் பெய்க

பிரிவாற்றாமை காரணமாக மேகத்தைக் கடிந்துகொண்ட தலைவன், தலைவியுடன் ஒன்றுசேர்ந்த பின்னர் மேகத்தை வாழியோ பெருவான் என்று உளமாற வாழ்த்துவதைக் காணமுடிகிறது. மேகத்தை நொந்து கொண்டது தற்காலிகமானதுதான். மேகத்தின் பயன் சங்க கால தலைவனுக்குத் தெரியாதா என்ன? புதிய வாழ்க்கையின் தூதுவனாக மழை வருகிறது. மழைக்கு முன் இடியோசை, மழை முகில்களின் காட்சி, மழையின் வீழ்ச்சி, மென்மையான தூறல், பெருமழை போன்றவற்றை தங்கள் வளத்துக்கென மழையையே முற்றிலும் சார்ந்திருக்கும் ஓரின மக்கள் எவ்வித உற்சாகத்தோடும் இன்பத்தோடும் வருணிப்பர் (தனிநாயக அடிகள், 2014, ப. 12). வினை மேற்சென்ற தலைவன் வெற்றிகரமாக வினைமுடித்து வீடு திரும்பிவிட்டான். தம் காதல் தலைவியோடு மகிழ்ச்சியாகப் பொருந்திக் கிடக்கிறான். முன்பு செல்லமாகக் கடிந்து கொண்ட மேகத்தை நோக்கி, 'பெரிய மேகமே, இருள் நீங்கும்படியாக மின்னுவாயாக; குளிர்ச்சியுண்டாகும்படி நீர்த்துளிகளைப் பெய்வாயாக; முரசைப் போல முழங்குவாயாக; பலமுறை இடித்து இடித்து ஓசை எழுப்புவாயாக; மழை பெய்து வாழ்வாயாக என்று வாழ்த்துகிறான்.

**தாழ்இருள் துமிய மின்னித் தண்ணென**
**வீழ்உறை இனிய சிதறி ஊழின்**
**கடிப்புஇகு முரசின் முழங்கி இடித்துஇடித்துப்**
**பெய்க இனி வாழியோ பெருவான் (குறுந். 270)**

இயற்கையின் தேவையை உணர்ந்து அதனைப் போற்றி அணைத்துக் கொள்கிற பாங்கினை இப்பாடலில் காணமுடிகிறது. இன்னலாய் விளங்கிய இடியோசை இன்பமாய் மாறுவதைக் காண்கிறோம்.

### முடிவுரை

தனிநாயக அடிகள் கூறுவதுபோல இயற்கையும் மனித இயற்கையும் ஒருங்கிணைந்து ஒத்திசைத்துச் செல்வதைச் சங்கப் பாடல்களில் காணமுடிகின்றது. இடியோசையைக் கேட்டு படமெடுத்தாடும் பாம்பும் இறந்துவிடும், நடுங்கும் என்ற கருத்து தமிழ்ப் பாடல்களில் அடிக்கடி வருகின்றது (குறுந்தொகை, 158, 391, நற்றிணை 129). குன்றின்கண் விளையாடும் மேகம் என்றும், வேகமாகச் செல்லும் மேகம் என்றும், கருவி மாமழை என்றும், இருள் கெடும்படியாக மின்னும் மேகம் என்றும் பலவாறு மேகம் சிறப்பிக்கப்படுகின்றது. பருவ வரவின்போது பிரிவாற்றாமையினால் மேகத்தை கடிந்து கொள்ளும் தலைவன் தலைவி ஒன்றுசேர்ந்த பின்னர் இடித்து இடித்துப் பெய்க என்றும், வாழியோ பெருவான் என்றும் மேகத்தை வாழ்த்துகின்றனர். அபபிரம்சா பாடல்களில் இத்தகைய இயற்கைப் பின்னணி காணக் கிடைக்கவில்லை.


### அடிக்குறிப்புகள்

1. The heart is rent by (lit. cut) (separation from) fair beloved, and the clouds thunder in the sky. For the travelers (undertaking journey) on a rainy night (or during the rain) this is a great calamity.
2. The clouds are shrouding the mountains (seeing this) the travelers hurries up (lit. moves) crying. He is frightened: When it (the cloud) is so intent on swallowing up such (vast) mountains will it ever spare his beloved.
3. A lover away from his beloved in the monsoon says: if my beloved has love for me she must have been dead (on the advent of rainy season). If she is alive (evidently it shows). She has no love for me. (Thus) In both ways, my beloved is lost to me, Why then, O! vile cloud, are you (still) thundering.

### துணை நூல்கள்


1. தனிநாயக அடிகள், நில அமைப்பும் தமிழ்க் கவிதையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட்., அம்பத்தூர், சென்னை-98 (2014).
2. Apabhramsa of Hemachandra (Edited by Kantilal Baldevram Vyas) Text Book Society, Ahmedabad (1982).
3. குறுந்தொகை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17 (1997).


●



# பழங்குடிகளைக் கற்க ஓர் அரிச்சுவடி

◀ இரா. காமராசு ▶

வானில் பறந்த மனிதனை நிலத்தில் காலூன்றச் செய்திருக்கிறது இயற்கை. நாகரிகம், பண்பாடு, தொழில்நுட்பம், வளர்ச்சி ஆகிய பதங்கள் இன்று நிறமிழந்து நிற்கின்றன. இயற்கையை அறியவும், உணரவும், உயிர்ப்பிக்கவுமான முயற்சிகள் மேலெழுகின்றன. மனிதன் தான் பூசிய அரிதாரங்களை இழந்து பிறந்த மேனியாக நிற்கிறான். இத்தருணத்தில் மனித இனத்தின் ஆதிகுடிகள் குறித்தக் கவனமும் அக்கறையும் பொதுநலச் சமூகத்தின் தேவையாக இருக்கிறது.

இந்தியா போன்ற தொன்மையும் நிலவியல் விரிவும் கொண்ட நாடுகளில் பழங்குடிகள் எண்ணிக்கையிலும் வகைமையிலும் அதிகமாக இருப்பது இயல்பு. பழங்குடிச் சமூகம் பற்றிய இருவிதக் கண்ணோட்டங்கள் பொதுப்புத்தியில் உள்ளன. ஒன்று அவர்கள் வனவாசிகள். நாகரிகமற்றவர்கள். அவர்களை நாகரீகப்படுத்தவேண்டும் (ஒடுக்கப்பட்ட மக்கள் சுத்தமற்றவர்கள். தினமும் குளிக்க வேண்டும் என்றெல்லாம் சொல்வது மாதிரி). மற்றொன்று பழங்குடிகளின் வாழ்வு மேலானது. அவர்கள் மாதிரி பொதுச்சமூக மனிதர்கள் வாழ வேண்டும் என்பது. இந்த இரண்டு நிலையும் யதார்த்தமில்லை. ‘பழங்குடிகள் நம்மைப் போன்ற சகமனிதர்கள் தான்’ என்கிற உணர்வைப் பெறுவது ஒன்றே அவர்களைப் புரிந்து கொள்ள உதவும்.

பெரும்பகுதி காடுகளிலும் சிறுபகுதி மலைகளிலும் வாழ்ந்த மக்கள் சமவெளி நோக்கி தள்ளப்படுவதில் தொடங்குகிறது இவர்களின் வீழ்ச்சி. அதே போல சமவெளி மனிதர்கள் (சாமான்யர் அல்லர்) இவர்களின் வாழிடங்களையும், வனங்களையும் தமதாக்கிக் கொண்டதில் தொடர்கிறது இவர்களது அவலம். வன இலாகா தொடங்கி கார்ப்பரேட்டுகள் சாமியார்கள் வரை எளிய பலிகொள்ளல் பழங்குடி மக்களைத்தான்.

‘நினைவில் காடுள்ள மிருகம்’ என்பார் கவிஞர் சச்சிதானந்தன். அப்படி நினைவில்




வாழும் மூதாதையர்கள் (தமிழகப் பழங்குடி மக்கள்) / அ.பகத்சிங் / விலை: ரூ.600/-, உயிர்பதிப்பகம் / தொலைபேசி: 9092901393, 9841204400)

காடுள்ள மனிதர்கள் தான் பழங்குடிகள். ஆனால் சரணாலயங்கள் என்றும், சூழல் காப்பு என்றும் இன்று மனிதர்களற்ற 'காப்புக்காடுகளை' உருவாக்குகிறார்கள். தன் நிலம், சூழல், வாழிடம், தொழில், வாழ்க்கைமுறை ஆகியவற்றிலிருந்து வேரோடு பிடுங்கி எறியப்படும் இம்மனிதர்கள் குறித்த சக மனித அக்கறை இன்றையத் தேவையாகிறது. 'பழங்குடி மக்களைப் பற்றிய ஆராய்ச்சி அலுவல்களில் ஈடுபட்டிருந்தவர்களை ஏதோ ஒரு வியாதியைக் குணப்படுத்தும் வைத்தியர்கள் என்று கூட சிலர் நினைக்கிறார்கள்' என்பார் வெரியர் எல்வின். அவர் தன் அனுபவத்திலிருந்து இந்த வார்த்தைகளைச் சொன்னார். இன்றும் அதே நிலைதான்.

பழங்குடிகளைப் பற்றி அயல் நாட்டினர் பலரும் முதலில் ஆய்வுகளில் ஈடுபட்டனர். மொழியியல், சமூகவியல் சார்ந்து பல ஆய்வுகள் நடைபெற்றன. தொடர்ந்து மானிடவியல், நாட்டுப்புறவியல், இனவரைவியல், பழங்குடியியல் சார்ந்த ஆய்வுகள் வளர்ந்து வருகின்றன. ஆதிச் சமூகம் குறித்த அறிதல்களுக்கு பழங்குடிகள் பற்றிய ஆய்வுகள் பெரிதும் துணை நிற்கும். பழங்குடி ஆய்வுகள் வழி காட்டுயிர்கள், நாட்டுப்புற மருத்துவம், வனம்படுபொருள்கள், கலைகள், வழக்காறுகள், சடங்குகள் உள்ளிட்டப் பலவற்றையும் அறியலாம். அவரவர் தேவைக்கேற்ப ஆய்வுகள் அமையும்.

முனைவர் அ. பகத்சிங் மானிடவியல் துறையில் பயின்று ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். மானிடவியல் வெளிச்சத்தில் பழங்குடிகளை அணுகும் திறனாளர். கல்வி,ஆய்வு என்பனவற்றுக்கு மேலாக, பழங்குடிகள் வாழ்வு, சிக்கல்கள், எதிர்காலம் குறித்த அக்கறை உடையவர். தமிழ்நாடு அரசு அட்டவணைப்படுத்தி உள்ள 36 வகையானப் பழங்குடி மக்கள் இனங்களுள் 13 இனங்களை அறிமுகம் செய்யும் விதமான 'வாழும் மூதாதையர்கள்- தமிழகப் பழங்குடி மக்கள்' எனும் நூலை எழுதியுள்ளார். இது காடு, உயிர் ஆகிய இதழ்களில் தொடராக வெளிவந்தது. உயிர்பதிப்பகம் பல வண்ணப் படங்களுடன் திரவக்காகிதத்தில் மிக நேர்த்தியாக இந்நூலைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

"பகத்சிங்கின் இந்த நூல் தமிழகப்பழங்குடியியலில் இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டிய பல தடங்களுக்கு வழிகோலுகின்றது" என மானிடவியல் அறிஞர் ஆ. செல்ல பெருமாள் முன்னுரையில் கூறுகிறார்.

"ஒரு சமூகத்தை இனவரைவியல் அடிப்படையில் அறிவதன் நோக்கமானது அவர்களின் தனித் தன்மைகளைக் காட்சிப்பொருளாக மாற்றுவதன்று. இனக்குழுக்களின் தனித் தன்மைகளை அறிந்து அவர்களின் வளர்ச்சிக்குப் பங்காற்றுவதே" என்கிறார் நாட்டாரியல் அறிஞர் ஆ.சிவசுப்பிரமணியன். இந்த நோக்கை அ.பகத்சிங்கின் நூல் பெருமளவு நிறைவு செய்கிறது.

மனிதச் சமூகப் படிநிலை வளர்ச்சி நிலைகளை அறிந்திட பழங்குடிகளிடமிருந்துதான் கற்கத் தொடங்க வேண்டும். குடிமைச் சமூக உருவாக்கத்தை இந்நூலின் பல இடங்களில் காணமுடியும். தனிமனிதன், குழு, கூட்டம் என அமைப்பாகும் போது தானே சுயாதீனமாக உருவாக்கிக் கொள்ளும் நடத்தைகளே பின்னர் சமூக விதிகளாக, சட்டங்களாக உருமாறும். இந்நூலில் பல பழங்குடி இனங்களின் சமூகக் கட்டமைப்பு, நியதிகள், நீதிமுறை, தண்டனைமுறைகள், ஒழுகலாறுகள் இடம் பெறுகின்றன. இவர்கள் பொதுச் சமூகத்தின், அரசதிகாரத்தின் விதிகளுக்கு மாறாக, இயல்பாக பலவற்றை உருவாக்கிப் பின்பற்றி வாழ்வது இந்நூல் வழி பதிவாகி உள்ளது.

“பழங்குடிகளைப் பொருத்தவரையில் ஓடிக்கொண்டிருக்கும் கடிகாரத்தைப்போல் வளர்ச்சிப்பாதைக்குத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும்” என்பார் மானிடவியல் அறிஞர் பக்தவச்சலபாரதி. இந்தப் பணியை இந்நூல் செய்யும் எனலாம். பழங்குடிமக்களின் வாழ்வியல் எல்லை மிகச் சுருக்கமானது. வாழும் இடம், அதற்குப் பட்டா, செய்யத் தொழில், சாதிச்சான்றிதழ்... இந்த வாழ்வாதாரம் நோக்கியே அவர்களின் எண்ணமும் செயல்பாடும் அமையக் காணலாம்.

பெரும்பான்மை எண்ணிக்கையிலும், தொன்மையிலும், தனித்தன்மையிலும் தமிழ்நாட்டில் வாழும் பதிமூன்று பழங்குடிகள் பற்றி இந்நூல் அறியத்தருகிறது. இப்பழங்குடி மக்களின் தொன்மம், வரலாறு, வாழிடம், பரவல், தொழில், கடவுள், சமூக அமைப்பு, வழக்காறுகள், கலைகள், கைவினைகள், மருத்துவம், சடங்குகள், பிறப்பண்பாட்டுக் கூறுகள்... என மிக இயல்பாகவும் நுட்பமாகவும் அ. பகத்சிங் வரைந்துள்ளார். எழுத்தாவணங்கள், ஆய்வுரைகள், கள ஆய்வு வழியே இவை சாத்தியமாகி உள்ளன. இவை பழங்குடிகளின் வாழ்வுக் கொடைகள். இவர்களுக்கு பதிலீடு எப்படிச் செய்வது? ஆய்வாளர் இம்மக்களின் வலிகளையும், தீராக் கோரிக்கைகளையும் கவலையோடு பதிவு செய்கிறார். இவற்றுக்காக அரசைக் கைகாட்டி ஓய்ந்து விடவில்லை. மக்கள் திரட்சி வாயிலாக வெற்றியின் ஜன்னல்களைத் திறந்து காட்டுகிறார். இதை வாசிக்கும் சமவெளி மனிதர்கள் பழங்குடிகளை கற்பதன் அரிச்சுவடியாக இந்நூலைக் கொள்ளமுடியும்.

முதலில் தமிழ்நாட்டின் பெரும் பழங்குடிப் பிரிவான ‘இருளர்கள்’ குறித்து எழுதி உள்ளார். இருளர்களின் தலைவனான கோவனின் புதூரே கோயம்புத்தூர் என்பார் கமில்சுவலபில். மலையிலும் சமவெளியிலும்; வாழிடங்களைப் பொருத்து இருபெரும் பிரிவுகளாக இவர்கள் அறியப்படுகின்றனர். வேட்டையும், வில்லும்தான் இவர்களின் ஆதி வாழ்வு. எனவே‘வில்லியர்’ என அழைக்கப்பட்டனர். பின்னர் காட்டெரிப்பு வேளாண்மையிலும் வளம்படு பொருள்களைச் சேகரித்து விற்பதிலும் ஈடுபடுகின்றனர். என்றாலும், இருளர்கள் என்றாலே நினைவுக்கு வருவது அவர்களின் அடையாளமாக மாறிப்போனது பாம்புபிடித்தல். செங்கல்பட்டு போன்ற வட மாவட்டங்களில் பாம்பு விஷம் தயாரிக்கும் மையமும், பாம்புப் பண்ணைகளும் இவர்களை மையப்படுத்தி உருவாகி உள்ளன. இருளர்களின் இசையும், இலக்கியமும், வழக்காறுகளும் தனித்தன்மை வாய்ந்தவை. இருளர்களின் சமூக வாழ்வில் அவர்களின் பாலினச் சமத்துவம் குறிப்பிடத்தக்கது.

“பெண்கள் சமூகத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் ஆண்களுக்கு இணையாகப் பங்கேற்கின்றனர். திருமணம் நிச்சயித்தபின் ஒரு வருடத்திற்கு மணமாகாமலேயே ஆணும், பெண்ணும் சேர்ந்து வாழ்வார்கள். பின் இவர்களுள் எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்றால் திருமணம் நிகழும். இருவருக்கும் ஒத்துவராத சூழலில் வேறு இணையை ஏற்கும் உரிமை இருவருக்கும் உண்டு” (பக். 15) என இருளர்களின் தனிச்சிறப்புகள் சுட்டப்படுகின்றன.

மேற்குத் தொடர்ச்சிமலையின் ஆனைமலையில் வாழும் பழங்குடிகளான ‘காடர்கள்’ குறித்து அடுத்து பதிவு செய்துள்ளார். காட்டில் வாழ்பவர் எனத் தம்பெயரிலேயே அடையாளத்தைச் சுமக்கும் இவர்கள் தமிழக ஆதிப் பழங்குடிகளில் ஒரு வகையினர். வேட்டையாடி வாழ்ந்த இவர்கள் அது தடைசெய்யப்பட்டவுடன் தேன் எடுத்து விற்று வாழ்கின்றனர். மூங்கிலால் ஆன பொருட்கள் இவர்களின் கைத்திறனைப் பறைசாற்றும். “தேன் சேகரிக்கப் பெரும்பாலும் இரவு நேரங்களில் செல்கின்றனர். தேன் எடுப்பதற்குச் சுமார் 10 கிலோமீட்டர் வரைப் பயணித்துச் சுமார் 80 முதல் 100 அடி உயரத்தில் உள்ள தேன்கூடுகளை மிக நேர்த்தியாகச் சேகரிக்கின்றனர். பாறைகளிலோ, உயரமான மரங்களிலோ உள்ள தேனை எடுக்க ஏறும்போது கயிற்றை மனைவியோ, மைத்துனனோ பிடித்துக்கொள்கின்றனர். சகோதரியின் கணவனைக் காப்பாற்ற வேண்டிய கடமை மைத்துனனுடையது என்பதே அதன் பொருள்” (பக். 29). இது வாழ்வியல் மரபாக அமைகிறது. “பொதுவில் குழந்தைப் பிறப்பு என்பது ஊருக்குப் பொதுவில் உள்ள ‘எட்டாலபதி’ என்ற தனித்தக் குடிலில் நடைபெறுகிறது. குழந்தை பிறந்த பத்து நாட்கள் அக்குடிலில் வைத்திருந்த பின்புதான் வீட்டிற்கு அழைத்துச் செல்கின்றனர்” (பக். 33). இது வாழ்க்கை வட்டச்சடங்காக அமைகிறது.

அடுத்து, அகத்திய மலைக் ‘காணிகள்’ பற்றி விவரிக்கிறார்கள். வேட்டை, வேளாண்மை, வனம்படு பொருள்கள் சேகரிப்பு போன்றவற்றைச் செய்யும் இவர்கள் பெரும்பாலும் நாடோடிகளாக வாழ்கின்றனர். சமூகக்குழுவின் தலைவர் மூட்டுக்காணி என்றும் உதவியாளர் விளிகாணி என்றும் அழைக்கப்படுகின்றனர். திருமணம், கருவுறுதல், பிள்ளைப்பேறு போன்ற வாழ்க்கை வட்டச்சடங்குகள் இவர்களிடம் தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது. காணிகள் கைவினைக் கலைத்தொழில்களில் வல்லவர்கள். “மாவு இடிப்பதற்கான மரத்தினாலான உரல், மூங்கிலிலான

குவளை, மூங்கில் குற்றிகள், பெட்டி, பாய், முறம், கூடை, மீன் பிடிக்கும் கூண்டு என உபகரணங்களை வனத்தில் இருந்து கிடைக்கும் மூங்கில், பனை மற்றும் பிற மரங்களில் இருந்து தயாரிக்கின்றனர்.'' (பக். 39) என இவர்களின் கைவினைக் கலைத்திறன் பதிவுசெய்யப்பட்டுள்ளது. காணிகளை உலக அரங்கில் வெளிச்சப்படுத்தியது வனத்தாவரங்கள், மூலிகைகள் வழி அவர்களின் மரபு மருத்துவமும், மருந்தும்தான். சர்க்கரை நோயைத் தடுக்கும் 'ஆரோக்கியப்பச்சை' யை காப்புரிமை பெற்று அதில் காணிகளின் பெயரையும் பதிவு செய்த நீண்ட நெடிய போராட்ட வரலாற்றைப் பதிவு செய்கிறது நூல். இதன் வழி பழங்குடிகளின் மரபறிவு, தொழில்நுட்பம், மருத்துவ ஆற்றல் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. காணிகாரர்களின் இசைக்கருவியான கொக்கரை தனித்துவச் சிறப்பு கொண்டது.

அடுத்து தமிழ்நாட்டின் ஆறு தொல்குடிகளுள் ஒன்றான 'காட்டு நாயக்கர்' பற்றி அமைகின்றது. இவர்களை காடுகளின் நாயகன் என்கின்றனர். நிலமற்ற சமூகமான இவர்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல், பறவைகளைப் பிடித்தல் ஆகிய பாரம்பரியத் தொழில்களைச் செய்கின்றனர். வேட்டையாடுதல் தடையான பின்னர் வனம்படு பொருள்களைச் சேகரித்து, சிறிய அளவு வேளாண்மையில் ஈடுபடுகின்றனர். மருத்துவ அறிவு இவர்களிடம் அதிகம். கைவினைக் கலைஞர்களாகவும் உள்ளனர்.

நீலகிரி 'கோத்தர்கள்' பழங்குடி இசைக்கும், நடனத்துக்கும் பெயர் பெற்றவர்கள். தொன்மை மிகுந்த இவர்களின் பெயரே 'மலை மக்கள்' (கோ- மலை, தர்- மக்கள்) எனச் சிறப்புப் பெறுகிறது. கோத்தர்கள் பற்றி பல ஆய்வுகளும் நூல்களும் வெளிவந்துள்ளன. இவர்கள் திருமணம், மறுமணம், விதவை மணம் ஆகியவற்றில் முன்னோடியாக உள்ளனர். 'கூட்டு' என அழைக்கப்படும் நாட்டார் நிர்வாகமுறை மரபுவழி சனநாயக அமைப்பாக உள்ளது. கைவினைப் பொருள்கள் செய்வதில் வல்லவர்கள். இவர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் தனித்துவமானவை.

மாண்டல்பாம் என்ற ஆங்கிலேயரின் ஆய்விலிருந்து ஒரு நிகழ்வினை நூலாசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். கோத்தர்களின் குடியிருப்புப் பகுதியில் குடியேறிய ஆங்கிலேயர் ஒருவர் அவர்களுக்கு கழிவறைகள் கட்டித்தர, அவர்கள் (கோத்தர்) இதை ஏற்காது ஊரையே காலிசெய்துள்ளனர்.

''ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியே இரண்டு கழிவறைகள் அமைக்கப்பட்டன. இந்தப் புதிய வழக்கத்தை விரும்பாத கோத்தர்கள், கிராமத்தலைவர்கள் முன்னிலையில் இது குறித்து முடிவெடுக்கத் தங்கள் குல தெய்வத்திடம் குறி கேட்டனர். குடியிருப்பிற்குள் கழிப்பறை அமைந்ததால் கிராமத்தின் புனிதம் கெட்டுத் தெய்வக்குத்தமானதாக ஒரு பெண்மீது சாமியிறங்கி வாக்குச் சொன்னது. எனவே சாமி குத்தத்திற்குப் பயந்து அவர்கள் அந்தக் கிராமத்தை அப்படியே விட்டுவிட்டுப் புதிய பகுதிக்கு இடம் பெயர்ந்தனர். புதிய வாழ்விடம் தேடுவதில் பூசாரிகளுக்கு இடையில் முரண்வர கிராமமே இரண்டாகப் பிரிந்ததாக மாண்டல்பாம் தன் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்'' (பக். 69). இந்நிகழ்வு கோத்தர்களுக்கு மட்டுமல்ல ஏனைய பழங்குடிச் சமூகங்களும் தம் வாழ்வை, பண்பாட்டை, மரபைப் பேணிக்காப்பதையே சுட்டுகிறது.

நீலகிரியில் வாழும் மற்றுமொரு தொல்குடி 'குறும்பர்கள் (அ) குறும்பாஸ்' ஆவர். குறும்பர் என்ற பெயரில் பல குழுக்கள் இங்கு வாழ்கின்றனர். பாலுக் குறும்பா, ஆலுக் குறும்பா, பெட்ட குறும்பா, ஜேனுக் குறும்பா, ஊராளி குறும்பா, பனிய குறும்பா, முள்ளுக் குறும்பா, நேயக் குறும்பா, குறும்பா ஒக்கலியான், அண்டக் குறும்பா, நாயாக் குறும்பா என பல இனங்களாக உள்ளனர். இவர்களில் ஆலு, பாலு, முள்ளு, ஜேனு, ஊராளி ஆகிய ஐந்து பிரிவினர் நீலகிரியில் வாழ்கின்றனர்.

சமூக அமைப்பு, சடங்குகள், நம்பிக்கைகள், நிர்வாகமுறை, வழிபாடு ஆகியவற்றில் தனித்தன்மையுடன் இவர்கள் திகழ்கிறார்கள். பழங்குடி மக்களில் குறும்பர்கள் தங்கள் பண்பாட்டை மீட்டெடுக்க 'நாட்டுஹப்பா' எனும் விருந்தோம்பல் நிகழ்வினை நடத்துகிறார்கள்.

''முன்பு தங்கள் விருந்தினர்களை உபசரிக்கும் சடங்கான நாட்டுஹப்பாவைத் தற்போது, இனமக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கவும், தங்கள் பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்தும் இயக்கமாகவும் முன்னெடுத்துள்ளனர். தங்களின் மரபான ஆடலும், பாடலும், இசைக்கருவிகள் இசைக்க தங்கள் மருத்துவ அறிவு குறித்த பதிவுகளுடன், பாரம்பரிய சிறுதானிய உணவுடன் அனைவருக்கும் விருந்து படைக்கின்றனர் (பக். 83).

அடுத்து,'குறுமன்கள்'. இவர்கள் ஆங்கிலேயர் வரவால் குறுமன்ஸ் ஆனார்கள். குறும்பாடு மேய்ப்பவர்களே குறுமன்கள். ஆடுமேய்த்தலால் இவர்கள் அரை நாடோடிகளாக உள்ளனர். வாழ்க்கை முறையிலும், வழிபாட்டிலும், சடங்குகளிலும் தனித்தன்மைமிக்கவர்கள். இவர்களின் குல



தெய்வக் கோயில் 'காட்டுக்கோயில்'. இவர்கள் சடங்கில் 'காய் போடுதல்' முக்கியமானது.

"தலையில் தேங்காய் உடைத்து காணிக்கை செலுத்துவதைக் காய் போடுதல் என்கின்றனர். பதினெட்டு வயது நிரம்பிய எந்தப் பாலினத்தவரும் காய் போடலாம். அருள் வந்தவர்கள் தாங்களாகவே வந்து மண்டியிட்டுத் தலைமீது உடைக்க உடன்படுகின்றனர். புதிதாக ஒருவர் காய் போட வேண்டுமானால் வழிபாட்டுப் பூசையுடன் சிறிய கலயத்தில் நீரிட்டு அதனை வாழையிலையில் பச்சரிசி, உப்பு பரப்பி அதன்மீது வைத்துவிடுவர். இதன்பின் உச்ச நிகழ்வான காய் போடுதலுக்கு கசம்மாவுடன் வீரபத்திரனையும் வணங்கிக் கொள்வர். சங்கம குலத்தவர்கள் மட்டுமே காய் உடைக்க வேண்டும். வெளியில் இருந்து பார்ப்பதற்கு மூர்க்கமான வழிபாடாகவே இது வெளிப்படுகிறது. ஆனால், காய் உடைப்பவர்கள் அனுபவம் வாய்ந்த பூசாரிகள் என்பதால், காயமோ, வலியோ பெரிதாகத் தெரியாத வகையில் பக்குவமாக உடைப்பார்கள் என்று கோவில் பூசாரியும் மக்களும் தெரிவிக்கின்றனர்" (பக். 95).

காலில் சலங்கைக்கட்டி கையில் வாளேந்தி வீரபத்திரசாமியின் வரலாறு சொல்லி ஆடும் குறும்பர்களின் 'சேவையாட்டம்' பழங்குடிக் கலைகளுள் சிறப்பிடம் பெறுகிறது. இவர்களுக்கு தங்கள் இன அடையாளம் பேணுவதும், அரசு சலுகைகள் பெற சாதிச்சான்றிதழ் பெறுவதும் பெரும் சிக்கலாக உள்ளது. "அரசால் தொடர்ந்து நிராகரிக்கப்படும் நாங்கள் குறுமன்ஸ் இல்லை என்றால், அரசு பட்டியலில் குறிப்பிட்டுள்ள குறுமன்ஸ் யார் என்பதை அதிகாரிகளால் அடையாளம் காட்ட முடியுமா?" (பக். 97) என்ற குரலின் ஆதங்கம் நியாயமானது.

அடுத்து 'மலையாளிகள்'. கிழக்குத் தொடர்ச்சி மலையின் பச்சைமலை, கல்வராயன், சேர்வராயன், ஜவ்வாது மலை ஆகிய இடங்களில் இவர்கள் பரவி வாழ்கின்றனர். தமிழகத்தின் மொத்தப் பழங்குடிகளின் எண்ணிக்கையில் பாதி அளவு இவர்கள் உள்ளனர். 'வெள்ளாள விவசாயிகள்' ஆன இவர்கள் தங்களை வெள்ளாளக்கவுண்டர், காராளர் என அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். இவர்கள் தங்கள் சமூகப்பிரிவுகளை குலம், வீடு என அழைக்கின்றனர். வாழ்க்கை வட்டச் சடங்குகள், வழிபாட்டு முறைகள் ஆகியவற்றில் தனித்தன்மையுடன் விளங்குகின்றனர்.

அடிப்படையில் சிறு நிலவுடைமையாளர்களாக விளங்கும் மலையாளிகள் சிறுதானியங்களையே உணவாக உட்கொண்டனர். தற்போது அரிசிக்கு மாறி உள்ளனர். சமூக நிர்வாக அமைப்பு இறுக்கமாக உள்ளது. பட்டக்காரன், நாட்டார், காரியக்காரர், ஊர்க்கவுண்டர், கங்காணி, மூப்பன் எனப் பல நிர்வாகப் பொறுப்புகள் இவர்களிடம் உண்டு.

பல சடங்குகள் இவர்களிடம் உண்டு. "ஏற்காடு பகுதியில் வாழும் மலையாளிகளின் 'நரிக்கட்டுச்சடங்கு' சிறப்பானது. பொங்கல் பண்டிகையின் ஒரு பகுதியாகக் கரிநாள் அன்று

நரியைப் பிடித்து வந்து வழிபாட்டுச்சடங்கை நடத்துகின்றனர். இப்பகுதியின் வாழப்பாடி, கொட்டவாடி, சின்னமநாயக்கன், படையாச்சியூர், ரெங்கனூர் உள்ளிட்ட பகுதிகளில் அச்சடங்கு நடைபெற்று வருகிறது. காட்டுக்குள் சென்று நரியைப் பிடித்து ஊர்முழுக்க ஊர்வலமாகக் கொண்டு சென்று வழிபடுவார்கள். வழிபாட்டிற்குப் பின் மீண்டும் காட்டிலேயே விட்டுவிடுகின்றனர்'' *(பக். 106).*

மலையாளிகள் பற்றிய அண்மைக்கால வரலாற்றில் 'வாச்சாந்தி வன்கொடுமை' மாறாதவடு. பழங்குடி மக்களை, குறிப்பாகப் பெண்களைப் பொதுச் சமூகம் எப்படி அணுகுகிறது என்பதற்கான மோசமான தடயம் இது.

அடுத்து பாண்டிய நாட்டு 'முதுவர்கள்' பற்றிய விவரங்கள். ஆனைமலை மற்றும் தேனி மாவட்ட மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். சமவெளியில் இருந்து இடம் பெயர்ந்து மலைப் பகுதியில் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டவர்கள் இவர்கள். ''பொன்நிற சருமம், பொலிவான முகம், பெண்களின் தனித்துவமான புடவை அணியும்முறை, ஆண்களின் தலைப்பாகை ஆகியவை தனித்த அடையாளங்கள்... முதுவர் ஆண்கள் குடுமியும், உருமாலையும், காதில் கடுக்கனும் அணிந்திருப்பார்கள். கொண்டை கட்டுவது முதிர்ச்சியின் அடையாளமாகக் கருதப்படுவதால், சிறுமிகள் கொண்டை கட்டுவதில்லை. பருவம் வந்த பிறகே கொண்டை கட்டுகின்றனர். அதற்காக எடுக்கப்படும் விழாவில் 'கொண்டைப்பாட்டுப்' பாடுகின்றனர்.'' *(பக். 113)*

பாண்டியப் பேரரசோடு தொடர்புடையவர்களாக இவர்களை ஆவணங்கள் காட்டுகின்றன. வேட்டையாடுதல், சிறுவிவசாயம், வனம்படு பொருள் சேகரிப்பு ஆகியன இவர்களின் தொழில்கள். இடப்பெயர்வு வேளாண்மையால் நாடோடிகளாக வாழ்ந்ததால் இவர்கள் நிலமற்றவர்களாகவே உள்ளனர். இவர்களின் வீட்டுக்கூரை ஈத்தை மரங்களால் ஆனது. சமூக அமைப்பு, சடங்குகள் இவர்களுக்கென தனியே வைத்துள்ளனர். இவர்களின் திருமணச் சடங்கு வித்தியாசமானது. திருமணம் ஒரு நிகழ்த்துதல் (Performing) போலவே நடைபெறுகிறது. ''மணமகன் தன் பெற்றோரோடு மணமகளின் கிராமத்திற்கு வருகிறார் என்ற செய்தியை அறிந்த மணமகள் வீட்டார் காட்டில் சென்று பதுங்கிக் கொள்கின்றனர். முதுவர்களின் நம்பிக்கையின்படி மணமகன், மணமகளைத்தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். குறைந்தது இரண்டு நாட்களுக்குள் அவளைத் தேடிப்பிடிக்க வேண்டும். அதுவரை இவர்களின் உணவுத் தேவையை மணமகனின் நண்பர்கள் பார்த்துக் கொள்கின்றனர். மணமகளைக் கண்டவுடன் அவள் தோளில் புடவையும், தலைமுடியில் சீப்பையும் அணிவிக்கிறார். இருவரும் அன்று முழுவதும் தனிமையில் வனத்தில் கழிக்கின்றனர். மணமகளைக் காட்டில் தேடும்போது மணமகன் வீட்டார் ஒரு பாடலைப் பாடுகின்றனர். அதே பாடலைக் கண்டுபிடித்தபிறகு மணமகள் வீட்டார் திருமணத்தின் போது தொடர்ந்து பாடுகின்றனர்'' *(பக். 122).*

தமிழ் நிலத்தின் ஆதிகுடிகளுள் ஒரு வகையினர் 'பளியர்'. வனத்தையே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். மலையடி- நீர் நிலைகளின் அருகே குடியிருப்புகளை அமைத்து வாழ்பவர்கள். மதுரையைச் சுற்றிய மலை, காடுகளில் வாழ்கின்றனர். அன்றாட வாழ்வியல் தேவைகளைத் தவிர எதையும் உபரியாக சேமித்துப் பழகாத பொதுமைக்குடிகள். சமூக அமைப்பு, வழிபாடு, சடங்குகள் ஆகியன இவர்களுக்கும் தனித்துவமானவை. வனப்பளியர், தெய்வப்பளியர் என இருவகையினர் உண்டு. தேன் எடுத்தல், தாவரங்களின் வேர், தண்டு, இலை, காய், பூ, கனி ஆகியவற்றிலிருந்து மருந்து தயாரிக்கும் நுட்பம் அறிந்தவர்கள். இயற்கையில் வாழும் வன உயிரிகளையும், வனத் தாவரங்களையும் நன்கு அறிந்தவர்கள். இதுவே இவர்களின் பலமாகவும், பலவீனமாகவும் அமைந்துவிட்டது. வேட்டையாடுபவர்கள் இவர்களைப் பயன்படுத்தினர். மருந்து, மருத்துவ முறைகளைச் சமவெளியினர் இவர்கள் வழியே அறிந்து சந்தைப்படுத்தினர். வனத்தில் வேட்டையாடி, உணவு சேகரித்து வாழ்ந்த பளியர்கள் வனச்சுருக்கத்தால் வாழ்க்கைச் சுருங்கி அரசு ஒதுக்கிய குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாட்டுத் தொன்மைப் பழங்குடிகளுள் 'பணியர்' தனித்தன்மையினர். மேற்குத் தொடர்ச்சி மலையில் வாழும் இவர்கள் தமிழகத்தின் நீலகிரி, பந்தலூர், கூடலூர் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். மலையாளத்தில் பணியர் என்றால் வேலையாள் என்று பொருள். பணியர், பணிக்கர், பணிக்காரர் என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர். காலனிய ஆட்சிக்காலத்தில் நீலகிரிப் பகுதிகளில் பணியர் பண்ணை அடிமைகளாக இருந்துள்ளனர். நிலங்கள் கைமாறும் போது இவர்களும் விற்கப்பட்டுள்ள விவரம் ஆவணங்களில் பதிவாகி உள்ளது.

பண்பாட்டுக் கூறுகளில் அவர்கள் பல சிறப்புத் தன்மையினைக் கொண்டுள்ளார்கள். வாழ்க்கை, தொழில், பொருளாதார நிலை சார்ந்தே சடங்குகள் நிகழ்கின்றன. இவர்களின் சமூகக் கட்டமைப்பு இறுக்கமானது. இவர்களின் பஞ்சாயத்து அமைப்பு 'கொட்டாணி'. இவர்களின் தலைவர் 'மூப்பர்'. சமூகப் புறக்கணிப்பு உள்ளிட்ட தண்டனை முறைகளும் உண்டு.

மேற்கு மலைத் தொடரில் வாழும் தொன்மைப் பழங்குடிகள் 'தோடர்கள்'. தமிழகத்தின் அனைத்துப் பழங்குடிகளிடமிருந்தும் வேறுபட்டவர்கள். இவர்களின் தோற்றம், உடை, சடங்குகள், வழிபாடு, ஆயர்தொழில், எருமை பலியிடல், திருமணம் ஆகியவை பிற சமூகங்களை ஈர்க்கும் தன்மையன. இவர்களின் குடியிருப்புக் கிராமம் 'மந்து'. இவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த நிலம் 'ஒத்தைக்கல் மந்து'. அதுவே ஆங்கிலத்தில் உதகமண்ட். தோடநாடு என்றும் உதகமண்டலம் அழைக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

எருமைகளுடன் குடிபெயர்வது இவர்களின் வழக்கம். தோடர்கள் ஆயர் தொழிலில் ஈடுபடுவதால் இவர்களுக்கு பால் கோயில் (Dairy temple) உண்டு. இவர்களின் திருமணம் முறையுள்ள இருவரிடையே குழந்தைப்பருவத்தில் (2,3 வயது) நிச்சயிக்கப்படுகிறது. இது'கல்கோத்'. பெண் பருவம் எய்தியதும் இணைந்து வாழ்வது 'குவுசெட்த்'. அடிப்படையில் மேய்ச்சல் சமூகத்தவரான தோடர்கள் இறப்புச் சடங்கில் எருமைகளைப் பலியிடும் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். தோடர்களின் 'பூத்தையல் கலை' சுற்றுலாப்பயணிகளை வெகுவாக ஈர்க்கிறது.

'சோளகர்', சத்தியமங்கலம் பகுதியில் வாழ்பவர்கள். சோலைகளை ஆள்பவரே சோளகர். செளிகர், பெள்ளீர், சூருள், தென்னீர், ஆலர் ஆகிய ஐந்து குலங்கள் இவர்களுக்குள் உண்டு. எண்ணிக்கையில் குறைவான (பழங்குடிகளுள் 1 %) இவர்கள் குடும்பம், வழிபாடு, உணவு, சடங்குகள் ஆகியவற்றில் தனித்து விளங்குகின்றனர். பாரம்பரிய மருத்துவ அறிவுமிக்க இவர்கள் பல நோய்களுக்கு மருந்தும், மருத்துவமும் அளிக்கின்றனர். வேட்டை, உணவு சேகரிப்பு நிலையிலிருந்து விவசாயப் பயிரிடுதல் நிலைக்கு மாறி உள்ளனர். சத்தியமங்கலம் பகுதியில் வீரப்பன் தேடுதல் வேட்டையில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சோளகர்களே. அதே போல சாதிச்சான்றிதழ் பெறுவதிலும் சிக்கல் நிகழ்கிறது. "ஊராளி" இனத்தவருக்கும் இவர்களுக்கும் அடையாளச் சிக்கல் தொடர்கிறது.

இவர்களின் வாழ்வில் வில்-அம்பு சடங்கு முக்கியமானது. "பெண் கர்ப்பமான ஏழாவது மாதத்தில் முழுநிலவு தினத்தில் இது நடத்தப்படுகிறது. பெண்ணின் கருவில் உள்ள சிசுவிற்கு ஒரு ஆண் சமூகரீதியாகத் தந்தைமுறை அங்கீகாரம் கோருவதே இந்தச் சடங்கின் முக்கியத்துவம் ஆகும். இச்சடங்கு நிகழ்ந்த பிறகு அப் பெண் அந்த ஆணோடு தொடர்ந்து வாழ்ந்து பெற்றெடுக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் அவனே தந்தையாகக் கருதப்படுவான். மாறாக அந்தப் பெண் வேறு ஒரு ஆணோடு வாழ முற்படும்போது குழந்தைகள் அவளோடு செல்வதில்லை. மாறாகத் தந்தைவழிக் (Patriclan) குலத்தின் வாரிசாகவே கருதப்படும். அவள் வேறொரு ஆணுடன் சேர்ந்து வாழும்போது ஏற்படும் கர்ப்பத்திற்கு வில்-அம்பு சடங்கு மீண்டும் நிகழ்த்தப்பட்டுக் கருவில் உள்ள குழந்தைக்கு உரிய ஆண் தந்தை உரிமை கோரவேண்டும்" (பக். 159). இவர்கள் பல ஆண்தார முறையைப் பின்பற்றுகின்றனர்.

தமிழகப் பழங்குடி மக்களில் பதிமூன்று வகையினர் குறித்த அறிமுகத்தை இந்நூல் தருகிறது. பழங்குடிகளின் தோற்றம், வாழ்வு, இருத்தல், பண்பாட்டுக்கூறுகள், சிக்கல்கள் குறித்து நூலாசிரியர் சுவையாகவும், கவனமாகவும் கருத்துக்களைத் தந்துள்ளார். அவர்கள் யாரோ அல்லர். வாழும் (நம்) மூதாதையர்கள் என்பதன் வழி பழங்குடி மக்கள் குறித்த அக்கறை வெளிப்படுகிறது. அவர்களின் வாழ்க்கையைக் காட்சிப் பொருளாக்கிவிடாமல், கரிசனத்துடன் பொதுச் சமூகத்தின் கண்ணோட்டத்தைக் கோரி நிற்கிறது நூல்.

பழங்குடிகளின் வாழ்க்கை முறைமை என்பது பன்மைத்துவப் பண்பாட்டின் அடித்தளம். "இங்கு யாரும் பழங்குடிகளை நாகரிக மனிதர்களாக மாற்றும் 'பாவைக் கூத்து' நடத்த வேண்டாம். அந்தக் கவர்ச்சிப் பொம்மைகளை ஆட்டுவிக்கும் 'கார்பரேட்' கரங்களை நாம் அறிவோம். இந்த அரசியலைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளப் பழங்குடிகளின் வாழ்வியலைக் கற்கவேண்டும். அதற்கு அ.பகத்சிங் எழுதியுள்ள 'வாழும் மூதாதையர்' துணையாக நிற்கும்" என்ற எழுத்தாளர் நக்கீரன் வார்த்தைகளை வழிமொழியலாம்.

●


**உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு**
**ஒரு வேண்டுகோள்!**



**உங்கள் நூலகம் சந்தாவினை புதுப்பிக்காதவர்கள்**
**தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினை பெற**
**புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

உங்கள் நூலகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600050.
தொலைபேசி எண் : 044-26251968, 26258410

கட்டுரை



# செட்டிநாட்டில் வ.உ.சிதம்பரனார்

முனைவர் சொ. சேதுபதி

பள்ளிக்குச் செல்லுமுன்பே பல பாடங்களைச் சொல்லிக்கொடுக்கவல்ல, கலை இலக்கிய அமைப்புகள் எங்கள் ஊரில் உண்டு. அவற்றுள் ஒன்று 'வ.உ.சி. கலை மன்றம்'. சாதியம் கடந்த சமுதாயப்பார்வையோடு, 'கப்பலோட்டிய தமிழன்' வ.உ.சி.யைக் கொண்டாடிய ஊர் கிருங்கை எனும் கிருங்காக்கோட்டை. ஏதேனும் ஒரு திருநாளை மையமிட்டு, கவியரங்கம், உரையரங்கம், பட்டிமன்றம் என்று திட்டமிட்டு நடத்துவதோடு, சமுதாய விழிப்புணர்வு (அமெச்சூர்) நாடகங்களையும் உருவாக்கி அம்மன்றத்தினர் நடிப்பர். பகல் பொழுதுகளில் அவரவர் கடமைகளை ஆற்றிவிட்டு, எஞ்சிய பொழுதுகளில் இவ்வியக்கப்பணிகளைத் திறம்பட நடத்தியதோடு, 'கப்பலோட்டிய தமிழன்' திரைப்படத்தைப் பொதுவெளியில் திரையிடவும் செய்வார்கள்.

வாழும் காலத்தில் தோழர் ஜீவா, அறந்தை நாராயணன் உள்ளிட்டோர் வந்ததுபோல், தலைவர் வ.உ.சி. எமது

ஊருக்கு வரவில்லை; ஆயினும் இந்த இயக்கம் அவர்களுக்குப் பின் வந்த கலை, இலக்கிய, அரசியல் சித்தாந்திகளையெல்லாம் எங்கள் ஊருக்கு அழைத்துப் பேசவைத்தும் இயங்கவைத்தும் உறவு கொண்டாடியும் மகிழ்ந்திருக்கிறது. என்னொத்த எங்கள் ஊர் அன்பர்கள் சிலரின் கலை, இலக்கியப் பின்புலங்களுக்கெல்லாம் தோன்றாத்துணையாக இருந்தது இந்த மன்றம் என்பதை எப்போதும் நினைத்துக்கொள்வதுண்டு.


செம்மல் சிதம்பரனார் எங்கள் ஊருக்கு வர வாய்ப்பின்றிப் போனாலும் சிவகங்கை மாவட்டத்துச் செட்டிநாட்டுப் பகுதிக்கு அவர் வருகை தந்து பெருமைப்படுத்திய வரலாற்றுச் சுவடுகளை அறிகிற போதெல்லாம் ஒருவிதப் பெருமிதம் பொங்கும்.

**புதுவயலுக்கு வந்த புகழாளர் சிதம்பரனார்**

எமது ஊருக்கு அண்மைய ஊரான மேலைச்சிவபுரி, 'சன்மார்க்க சபை' வழியே கணேசர் செந்தமிழ்க் கல்லூரி அமைத்துத் தமிழ் வளர்க்கும் சிற்றூர். செம்மல் வ.சுப.மா. போன்ற தகுதியாளர்களை ஈன்று புறந்தந்த இலக்கியப் பேரூர். அவ்வூரின் தமிழ்க்கல்லூரியில் பயிலப்போன எனக்கு முதல்வராய் வாய்த்தவர் முனைவர் பழ.முத்தப்பன். அவர்தம் ஊர் புதுவயல். அவர்களது முன்னோர், காரைக்குடிக்கு வந்த மகாகவி பாரதியாரால் ஈர்க்கப்பெற்று, புதுவயலில் ஸ்ரீசரசுவதி சங்கத்தை *22.07.1922* (சாலிவாகன சகம் *1845* கலி *5024* துந்துபி ஆண்டு ஆடித்திங்கள் *9* ஆம் நாள்) திங்கட்கிழமையன்று தோற்றுவித்தனர்.

**காலம் புகழ்வித்தியா சாலை புதுவயலில்**
**சாலச் சிறந்து தழைக்குமே- சீலமிகு**
**தக்கார் பெரியர் சரசுவதி சங்கத்தார்**
**எக்காலும் போற்ற இனிது.**[1]

- என்று கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின் பாடல்பெற்ற இச்சங்கம் அன்று தொடங்கி, இன்றுவரை சிறப்புற இயங்கிவருகிறது. இங்கு ஆண்டுதோறும் நிகழும் விழாக்களுக்கு வந்து பெருமை சேர்த்த வரலாற்று ஆளுமைகள் மிகப்பலர். அவர்களுள் ஒருவர், பெருமைக்குரிய வ.உ.சிதம்பரனார் என்பதை அறிந்து எழுந்த வியப்பு அடங்குமுன்பே, அவர்தம் வாழ்த்துக்குறிப்போடு கூடிய கையெழுத்துப் படிவத்தைக் காட்டினார்கள். மெய்சிலிர்த்துப் போனேன். அவருடையது மட்டுமா? அவர் ஒத்த எத்தனையோ ஆன்றோர்தம்


வ.உ.சிதம்பரம்பிள்ளை
29-4-1935.

வாழ்த்துக்குறிப்புகளும் அவர்கள் வசத்தில் இருந்தன. பாதுகாக்கிற பண்பும் வரலாற்றைப் பேணி வைக்கிற, வளர்க்கிற மாண்பும் செட்டிநாட்டாருக்கு வாய்த்த சிறப்புப்பண்பு என்பதை இனிவருந் தலைமுறையினர் உணரவேண்டும் என்பதை அங்குக் கற்றுக் கொண்டேன். இச்சங்கத்தின் 13 ஆவது ஆண்டுவிழாவிற்குத் தலைமையேற்றுச் சிறப்பித்தவர் வ.உ.சிதம்பரனார். அச்சங்கத்தின்கீழ் இயங்கும் ஶ்ரீசரசுவதி வித்தியாசாலையின் மூன்றாம் ஆண்டுவிழாவும் அப்போதுதான் நிகழ்ந்தது. அதில் பங்கேற்று நடித்த, பாடிய இளையபாரதத்தின் எழுச்சிமிகு ஆற்றலைக் கண்டு மிக மகிழ்ந்து அவர் எழுதிய வாசகங்கள் பின்வருமாறு.

*1935 ஏப்ரல் 28-ஆம் நாள் நடைபெற்ற புதுவயல் ஶ்ரீ சரஸ்வதி சங்கத்தின் பதிமூன்றாம் ஆண்டு நிறைவு விழா, ஶ்ரீ சரஸ்வதி வித்தியாசாலையின் மூன்றாம் ஆண்டு நிறைவுவிழா அவையின்கண் தலைமை வகிக்கும் பாக்கியம் பெற்றேன்.*

*வித்தியாசாலையின் மாணவ, மாணவிகள் அவையின்கண் நடாத்திய சம்பாஷணைகளும், நடிப்புகளும், பாடிய பாடல்களும் எனது தெய்வ பக்தியையும், தேசாபிமானத்தையும், மொழிப்பற்றையும் ஒரே நாளில் மிக வளர்த்துவிட்டன.*

*மாணவிகள் நடாத்திக் காட்டிய பெண்கள் சீர்திருத்த மகாநாட்டின் நடவடிக்கைகள் என் மனத்தையும், அவையினர் மனங்களையும் பூரணமாகக் கவர்ந்தன. சுருங்கக்கூறின், அம்மாணவ, மாணவிகளின் சொற்களால், பாடல்களால், நடிப்பு முதலியவற்றால், யானும் அவையினரும், ''அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின் திறனறிந்தேம் வீடு தெளிந்தேம் - மறனெறிந்த வாளார் அறிஞர்காள் மாணவர்கள்தம் வாயால் கேளாதன வெல்லாம் கேட்டு'' என்று கூறுதல் மிகையாகாது.*

*இம்மாணவ, மாணவிகளுக்கும், அவர்களைப் பெற்ற தாய் - தந்தையர்களுக்கும், அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும், ஶ்ரீ சரஸ்வதி வித்தியாசாலைக்கும், அதன் போஷகர்களுக்கும், அதன் அங்கத்தினர்களுக்கும், அதற்கு ஆதாரமான ஶ்ரீ சரஸ்வதி சங்கத்தினர்க்கும், அதன் அங்கத்தினர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்கள் முதலியவர்களுக்கும் எல்லா நன்மைகளையும் எல்லாம் வல்ல இறைவன் அளிப்பானாக!*

***- வ.உ.சிதம்பரம் பிள்ளை, 29.4.1935.[2]***

**சிராவயலுக்கு வந்த சீலர் சிதம்பரனார்**

'காரைக்குடியில் ஜீவா' நூல் குறித்துத் தேடத் தொடங்கியபோது, அவர் சிராவயலில் நடத்திய குருகுலத்திற்கு, வ.உ.சிதம்பரனார் வந்த குறிப்பும் கிட்டியது. 'வாளும் நூலும்' என்ற தலைப்பின்கீழ், 'ஜீவாவின் கருத்தை வ.உ.சி.ஏற்றார்' என்ற குறிப்புடன் வெளிவந்த பதிவு இது.

*சிராவயலில், ஜீவா காந்தி ஆசிரமத்தைத் தோற்றுவித்து, அதற்குச் செயலாளராக இருந்து, நடத்திக் கொண்டிருந்தவேளையில், ஒரு நாள் தேசபக்த தியாகச்சுடரான வ.உ.சிதம்பரனார் ஆசிரமத்திற்கு வந்தார்.*

*பள்ளியில் சிறுவர்களும் சிறுமிகளும் ராட்டை சுற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்ததும், அவரது இருவிழிகளில் இரத்தச் சிவப்பேறிற்று. ''என்ன முட்டாள்தனமான ஸ்தாபனம்! வாளேந்த வேண்டிய கையை நூலேந்த வைப்பதை என்னால் சகிக்க முடியவில்லை'' என்று எள்ளுக்காய்கள் வெடிப்பதுபோல் வ.உ.சி.பேசினார்.*

*ஜீவாவால் மனம் தாளமுடியவில்லை. அமைதியாக, ஆனால், உறுதியாக வ.உ.சி.யின் குற்றச்சாட்டுக்கு அவர் பதில் கொடுத்தார்.*

*''தாங்கள் சொல்வது சரி. வீர வாளேந்தி இரத்தம் சிந்தினாலொழிய இந்தியாவுக்கு விடுதலையில்லை என்றால், என் போன்ற கணக்கற்ற காளைகள் களம் ஏகி, பிறந்த நாட்டிற்காகப் பெரும் தியாகங்கள் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால், இன்றைய நிலையில், வேறு வழியில்லாததால்தான் இந்தப் பணியில் இறங்கியுள்ளோம். இத்தகைய ஒரு ஸ்தாபனத்தைத் தாங்கள் ஒரேயடியாக அவமதித்துப் பேசுவது எங்களுக்கு மனவேதனை அளிக்கிறது'' என்று கூறினார்.*

*உண்மையை உண்மை என்று ஒப்புக்கொள்ள அஞ்சாத வ.உ.சி. ஜீவாவின் இந்தக் கருத்தைக் கண்ணியத்தோடு ஏற்றுக் கொண்டார்.[3]*

இந்தச் செய்தியை மேற்கோளிட்டுத் தன் 'ஜீவா என்றொரு மானுடன்' என்ற நூலில் பதிவிடும் தோழர் பொன்னீலன்,

*''அன்று மாலை நடந்த பொதுக் கூட்டத்திலும் வ.உ.சி. முன்னிலையில் ஜீவா தன் கருத்துக்களை வலியுறுத்திப் பேசினார். அது வ.உ.சி. மனதில் மாபெரும் மாற்றத்தை*

ஏற்படுத்திற்று. அதே கூட்டத்தில் பின்னர் பேசிய வ.உ.சி. ஜீவாவைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார். ''அஞ்சுபவர்களும், கெஞ்சுபவர்களும் சுதந்திரத்தைப் பெற முடியாது. ஜீவானந்தம் போன்ற சிலர் இருந்தாலே போதும்.''[4]

**மானகிரியில் மாண்பாளர் சிதம்பரனார்**

*1928 ஆம் ஆண்டு, காரைக்குடிக்கும் நாச்சியார்புரத்திற்கும் இடையிலிருக்கும் 'மானகிரி' என்ற கிராமத்தில் ஒரு மன்றத்தின் ஆண்டுவிழா. அதில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரும் ஜீவாவும் கலந்துகொண்டனர். அது பற்றி ஜீவா,*

*''எனது முறை வந்தது. 'பெண்விடுதலை' எனக்கு அளித்திருந்த பொருள். பேசினேன். பத்து நிமிடங்களே பேசினேன். அப்பால் பேச்சு வரவில்லை. அத்தனை ஆவேசம். அத்தனை உணர்ச்சிப் பெருக்கு. பேச்சு இடைமுறிய அமர்ந்துவிட்டேன். 'தம்பி (பக்கத்திலிருந்த என்னைச் சுட்டிக்காட்டி) பேச்சைக் கேட்டபிறகு, தமிழன் வீரம் மங்கவில்லை, மங்கவும் மாட்டாது என்ற எண்ணம் உறுதிப்படுகிறது'' என்று சிதம்பரனார் பாராட்டியதாகக் குறிப்பிடுகிறார். இங்குதான் கப்பலோட்டிய தமிழனை முதன்முதலாகச் சந்தித்தார்''[5]*

*என்கிறார் கே.ஜீவபாரதி.*

*மகாகவி பாரதி, வை.சு.சண்முகனாரையும், பரலிசு.நெல்லையப்பரையும் தம்பி என்று அழைத்ததுபோல், மகாகவி பாரதியாரைத் தன் வாழ்நாளில் காணக்கிடைக்காத கவலையில் இருந்த தோழர் ஜீவாவுக்கு, அவர்தம் உயிர்த்தோழரான வ.உ.சிதம்பரனாரைச் சந்தித்ததோடு, அவர்தம் பாராட்டைப் பெற்றதும் அரிய வாய்ப்பாக அமைந்துவிட்டது. அந்த நிகழ்வின் இனிமையைப் பின்னர் நினைந்து ஜீவா எழுதுகிறார்:*

*''ஆண்டு 1928 என்று நினைவு. ஒரு மன்றத்தின் ஆண்டுவிழாக் கூட்டம். காரைக்குடிக்கும் நாச்சியார் புரத்திற்கும் இடையிலிருக்கும் மானகிரி என்ற ஊர். விழாத்தலைவர், தமிழர் தலைவர் வ.உ.சிதம்பரனார். அதில் நான் ஒரு பேச்சாளன்.*

*விழாத் துவங்கியதும் சிராவயல் காந்தி ஆசிரமத்து மாணவர்கள் இருவரும் பாடினர். குரல் வளத்தோடும், உணர்ச்சிவீறோடும், 'வந்தே மாதரம் என்போம்' என்ற பாட்டைப் பாடினர்.*



இளம் வயதில் வ.உ.சி

*பாட்டில் சூடு ஏற ஏற, சிதம்பரனாரின் கண்களிலிருந்து நீர் வடிந்தமயமாக இருந்தது.*

*எனது முறை வந்தது. 'பெண்விடுதலை' எனக்கு அளித்திருந்த பொருள். பேசினேன். பத்து நிமிடங்களே பேசினேன். அப்பால் பேச்சு வரவில்லை. அத்தனை ஆவேசம். அத்தனை உணர்ச்சிப் பெருக்கு. பேச்சு இடைமுறிய அமர்ந்துவிட்டேன்.*

*உணர்ச்சி எழுச்சி உடம்பால் தாக்குப் பிடிக்க முடியாத அளவு மேலோங்கிவிடவே, பேச்சு வெளிப்பட முடியவில்லை. கடந்த 30 ஆண்டுகளில் உணர்ச்சிமயமாய் நின்று எத்தனையோ பேச்சுக்கள் பேசியிருக்கிறேன். ஆனால், அன்றுபோல் என் வாழ்நாளில் என்றும் உணர்ச்சி என்னை ஆட்கொண்டு பேசவிடாமல் குரல்வளையைப் பிடிக்கிற அளவுக்குச் சென்றதில்லை.*

*ஆகவே, பேசமுடியாமல் உட்கார்ந்துவிட்டேன். இறுதியாகத் தலைவர் முடிவுரை கூறினார்.*

*'வந்தேமாதரம், பாரதி' ஆகிய சொற்களைக் குறிப்பிட்டுத் தொடங்கியதும், தலைவர் வ.உ.சி.யின் அகம் உணர்ச்சி*

வசப்பட்டுக் கொந்தளிப்பதை, முகம் காட்டிற்று. கண்கள் நீர் மல்கின. தொண்டை கம்மிற்று. நாத் தழுதழுத்தது.

'பாரதி இறந்துபோனான் என்று நினைத்தேன். இங்குச் சிறுவர்கள் பாடிய பாட்டைக் கேட்டபொழுது, பாரதி நேரில் பாடக் கேட்பது போன்ற உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது. பாரதி சாகவில்லை. என்றும் இருப்பான்."

குரலில் ஆழ்ந்த கனிவு ஒலித்தது. சிதம்பரனாரின் கண்கள் நீரால் நிறைந்தன. கூட்டத்தில் குழுமியிருந்த நாங்கள் எல்லாரும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தோம்.

"தம்பி, (பக்கத்திலிருந்த என்னைச் சுட்டிக்காட்டி) பேச்சைக் கேட்டபிறகு, தமிழன் வீரம் மங்கவில்லை. மங்கவும் மாட்டாது என்ற எண்ணம் உறுதிப்படுகிறது'' என்று தொடர்ந்து கூறினார்.

பாரதியிடம் தமிழ்நாட்டுத் திலகருக்கு இருந்த பேரன்பும், பெருமதிப்பும் அன்று முழு அளவில் வெளிப்பட்டது. 'வந்தே மாதரம் என்றுயிர் போம்வரை வாழ்த்துவோம்' என்று தமிழர் பெருந்தலைவரின் இதய மகாபக்தியைக் காணும் நல்வாய்ப்பு அன்று கிடைத்தது. புனிதமான நாட்டன்பு, பெருந்தகைமை உணர்ச்சிவசப்படல், உணர்ச்சியூட்டல் முதலிய அரும்பெரும் மனிதப்பண்புகள் முழுவடிவோடு அன்று சிதம்பரனாரிடம் காட்சியளித்ததைப் போல் நான் எந்தத் தமிழ்நாட்டுத் தலைவரிடமும் கண்டதுமில்லை; கேட்டதும் இல்லை."[6]

அநேகமாக, இந்த நிகழ்வுக்குப் பின்னரே, தோழர் ஜீவா நடத்திய குருகுலத்திற்கு, வ.உ.சிதம்பரனாரின் வருகை நேர்ந்திருக்க வேண்டும். அப்போது கண்டு உரையாடிய செய்தியைத்தான் முன்னர்ப் பார்த்தோம்.

நமக்குக் கிட்டிய சான்றுகளின்படி, 1928 ஆம் ஆண்டில் முதன்முறையாகச் செட்டிநாட்டு மானகிரிக்கு வந்த வ.உ.சி., அதே காலக்கட்டத்தில் சிராவயல் காந்தியடிகள் குருகுலத்திற்கும் வருகை புரிந்திருக்கிறார்.

பின்னர் 1935ல் மீண்டும் செட்டிநாட்டுப் புதுவயல் ஸ்ரீசரசுவதி சங்கத்திற்கு வந்து சில நாட்கள் தங்கியிருந்த அவர் அந்தக் காலக்கட்டத்திலோ, அதற்கு முன்பின்னோ, காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்திற்கு வந்திருக்கிறாரா? என்பது தெரியவில்லை. இந்தக் காலக்கட்டங்களில் இவரைத் தம் பகுதிக்கு வரவழைத்த செட்டிநாட்டன்பர்கள் யாவர், வேறு எந்த நிகழ்வுகளில் எல்லாம் அவர் இப்பகுதிக்கு வந்து கலந்துகொண்டார் என்பனவெல்லாம் தேடிக் கண்டறிய வேண்டிய செய்திகள்.

**இனிவருங்காலத்தில்...**

மகாகவி பாரதியை, மாவீரர் வ.வே.சு.ஐயரை, விடுதலைக்கனல் சுப்பிரமணிய சிவாவை வரவேற்று, விரும்தோம்பிப் பன்னாட்கள் இருக்கவைத்துக் கொண்டாடிய செட்டிநாடு, நெல்லை தந்த தமிழர் தலைவராம் வ.உ.சிதம்பரனாரையும் வரவேற்று உபசரித்துப் போற்றியதில் வியப்பில்லை. அவர்தம் வருகைக்கான பின்புலத்தோடு, வருகை தந்து பங்கேற்று, உரையாற்றி மகிழ்ந்த மகிழ்வித்த நிகழ்வுகளையும் தேடித் தொகுத்து ஒரு நூல் எழுதத் திட்டம். கருணைபுரிய வேண்டியது காலம் மட்டுமல்ல, காரைக்குடி சார்ந்த பெரியவர்களும்தான்!

**சான்றெண் விளக்கம்**

1. கிருங்கை சேதுபதி, காரைக்குடியில் பாரதி, ப.417.
2. மேலது, பக்.417--_418.
3. ..............., அரசியல் தலைவர்கள் பார்வையில் ஜீவா, ப.74.
4. பொன்னீலன், ஜீவா என்றொரு மானுடன், பக்.26--_--27.
5. கே.ஜீவபாரதி, தேசத்தின் சொத்து ஜீவா, ப.161.
6. சேதுபதி, காரைக்குடியில் ஜீவா, பக்.126_127.

**துணைநின்ற நூல்கள்**


1. அரசு.வீ (ப.ஆ) ப.ஜீவானந்தம் ஆக்கங்கள், இருதொகுதிகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.2007.
2. கிருங்கை சேதுபதி, காரைக்குடியில் பாரதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மு.ப.2019.
3. சேதுபதி, காரைக்குடியில் ஜீவா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.2016.
4. சேதுபதி, காந்திவந்தால் ஏந்தும் கருவி, கபிலன் பதிப்பகம், புதுச்சேரி, மு.ப.2019.
5. பொன்னீலன், ஜீவா என்றொரு மானுடன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2ஆம்.ப.2003.
6. ஜீவபாரதி, கே., (தொ.ஆ), தேசத்தின் சொத்து ஜீவா, ராஜேஸ்வரி புத்தக நிலையம், சென்னை, மு.ப.2001.
7. ..............., அரசியல் தலைவர்கள் பார்வையில் ஜீவா, பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, மு.ப.2007.


●

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT

ADVT



கட்டுரை

# மக்கள் பாதுகாப்பை அரசு உறுதி செய்யுமா?

◀ க.பழனித்துரை ▶

ராபர்ட் மக்னமாரா என்பவர் உலக வங்கியின் தலைவராக இருந்தபோது ஒரு சிறிய புத்தகம் ஒன்றை எழுதினார். அது பெரும் விவாதத்தை உருவாக்கியது. அவர் நாட்டின் பாதுகாப்பு என்ற தலைப்பில் எழுதிய அந்தச் சிறிய நூல், எதிர்காலத்தில் உலக நாடுகள் மக்கள் பெருக்கத்தால் சந்திக்கப் போகிற பிரச்சினைகள் குறித்து பல அடிப்படையான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அதாவது மக்கள் தொகைப் பெருக்கம், முறையற்ற ஆளுகை, ஊழல் நிறைந்த நிர்வாகம் பெருமளவில் மக்களை பிற நாடுகளுக்கு குடிபெயர வைக்கும். அந்தக் குடியேற்றம் என்பது ஒரு நிலையில் வளர்ந்த நாடுகளுக்கு அப்போது உதவிகரமாக இருப்பதுபோல் தெரியும். நாளடைவில் அது ஒரு பூதாகரப் பிரச்சினையாக அந்த நாடுகளில் பொதுமக்கள் மத்தியில் வெடிக்கும். அது மட்டுமல்ல உள்நாட்டுக் கலகம் ஏற்படுகின்ற நாடுகளிலிருந்து அகதிகளாக வரும் மக்கள் அடுத்த நிலையில் பிரச்சினைகளாக மாறுவார்கள். இந்தச் சூழல் வளர்ந்த நாடுகளை மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு ஆளாக்கும். எனவே நாடுகளை பாதுகாப்பது என்பது விரிவான பார்வையில் விஞ் ஞான அடிப்படையில் ஒவ்வொரு நாடும் ஆளுகை செய்து செயல்படவில்லை என்றால் இன்று வளம்மிக்க, வசதிகள் மிக்க செல்வந்த நாடாக விளங்கும் நாடுகள்கூட சிக்கலுக்கு உள்ளாகிவிடும் என்று அவர் எழுதியபோது, அவரை அன்று பலர் தேவையில்லா பயத்தை உருவாக்குகின்றார் என்று விமர்சனம் செய்தனர். அன்று அவர் கூறியது இன்று எவ்வளவு தீர்க்க தரிசனமான கருத்து என்று வியக்க வேண்டி உள்ளது. இன்றைய உலகச் சூழல் என்பது மக்கள் கூட்டம் கூட்டமாக மற்ற நாடுகளை

நோக்கி தஞ்சமடைய முயற்சிப்பதும், அதை தடை செய்ய பல நாடுகள் முயற்சி செய்வதும், ஒரே நாட்டில் மாநிலம் விட்டு மாநிலம் சென்று பிழைப்புத் தேடுவதும், அங்கு அவர்களை இரண்டாம்தர குடிமக்களாக நடத்துவதும் எதைக் காட்டுகின்றது என்றால் திறனற்ற அரசாங்கங்கள் செயலற்று இருப்பதைத்தான். உலகமயப் பொருளாதாரத்தை முன்னெடுத்த நாடுகள் அனைத்தும் இன்று உள்ளூர்மயம் பற்றிப் பேசி நாட்டு மக்களின் பாதுகாப்புதான் பிரதானம் எனச் செயல்பட்டு வருகின்றனர். உலகத்தைப் பாதுகாக்க உருவெடுத்ததுபோல் பேசி வந்த நாடுகள் உள்ளூர் மக்களின் பாதுகாப்புக்காக புலம் பெயர்ந்து சென்றவர்களை 'வந்தேரிகளே வெளியேறுங்கள்' என்று வெளிநாட்டினரை வெளியேற்றும் திட்டத்தில் இறங்கினர். அதேபோல் ஒரே நாட்டில் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு



மாநிலம் சென்று தங்கள் வாழ்வாதாரத்திற்காக உழைப்பவர்களை வந்தேரிகள் என வர்ணித்து, அவர்களை வெளியேற்ற வேண்டும் எனக் கோஷமிடுகின்றனர். ஆனால் உண்மை என்ன என்று அலசும்போது நம் அனைவருக்கும் தெரியும் எந்த நாடும், சமூகமும் அல்லது மாநிலமும் இன்று தனித்து இயங்கி மேம்பாடு அடைய முடியாது என்பது. இந்த உலக நாடுகளின் மற்றும் நாட்டின் மாநிலங்களின் இரட்டைச் செயல்பாடு ஏன் வந்தது என்று கேள்வி கேட்டால் நமக்குக் கிடைக்கும் விடை அந்த அரசு மற்றும் அந்த ஆளுகை என்பதுதான். அடுத்து மானுடச் செயல்பாட்டை ஒட்டுமொத்தமாகப் பொருள் செய்து, வணிகம் செய்து, லாபம் ஈட்டுவதற்குள் அடக்கியதுதான். மிகப்பெரிய வணிக யுத்தத்தை சமூகத்தில் கட்டவிழ்த்து விட்டதன் விளைவு, மனித சமூகத்தை அதன் உயரிய சிந்தனைப்போக்கை தாழ்த்தி பொருள் ஈட்டுவதை பிரதானப்படுத்தி மக்கள் சிந்தையில் பதிய வைத்ததன் விளைவுதான் இன்று நாம் பார்க்கும் பிரிவினைகள்.

இந்தச் சூழலின் பின்னணியை அலசிப்பார்த்தால் நமக்கு மற்றுமொரு உண்மை புலப்படும். அதாவது மக்களாட்சியை பல நாடுகள் எவ்வளவு திரிபுகளுடன் செயல்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு பயன்படுத்தியதன் விளைவு இன்று மக்களாட்சிக்கே ஆபத்தை விளைவிக்கும் சூழலுக்கு நாம் நம் அரசியலைக் கொண்டு வந்து விட்டோம். மக்களாட்சி என்பது தேர்தல், தேர்தலை வைத்து ஆட்சியைப் பிடிப்பது, ஆட்சியைப் பிடித்தவுடன் கட்சியின் ஆட்சியை நிலைநாட்டிக்கொள்வது என்ற நிலைமைக்கு மக்களாட்சியைக் கொண்டு வந்து விட்டோம். இந்தச் சூழல் என்பது உலகுக்கே மக்களாட்சிக்கு வழிகாட்டும் நாடுகள் நாங்கள்தான் என மார்தட்டிச் சொன்ன நாடுகள்கூட இந்த மக்களாட்சிச் சிதிலங்களுக்கு விதிவிலக்காக இருக்க முடியவில்லை. சமீப காலத்தில் சந்தைப் பொருளாதாரம், நாட்டின் அரசியலை அதன் காலடியில் போட்டு மிதித்துக் கொண்டுள்ளது என்பதைத்தான் எங்கும் மக்கள் பார்த்து வருகின்றனர். இது நம் நாட்டில் மட்டுமல்ல, இது ஒரு உலகளாவிய செயல்பாடு. அடுத்து ஆளுகை என்பது மக்கள் நலன் சார்ந்ததாக இருப்பதற்குப் பதில் பொருளாதார வளர்ச்சி என்பதை மையப்படுத்தி செயல்பட்டதின் விளைவு, ஆளுகை, நிர்வாகம் ஆட்சி என்பதெல்லாம் ஊழல் மயமாக்கப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் நிதியில் அரசியல் என்ற நிலைக்கு வந்துவிட்டது இந்த மக்களாட்சி. இந்தச் சூழலை தாமஸ் பெயின் என்ற சிந்தனையாளன் நம் அரசாங்கம் முறையாக பொதுமக்களால் கண்காணிக்கப்படவில்லை என்றால், அடிப்படையில் அரசாங்கம் தான் செய்யவேண்டிய பணியாகிய மக்கள் பாதுகாப்பு என்பதை மறந்து மக்களைச் சீரழிக்கும் செயல்களில் இறங்கிவிடும். எனவே "பொதுமக்கள் விழிப்புணர்வுதான் ஒரு மக்களாட்சி நாட்டைக் காக்கும் ஓர் அரண்" என்ற கருத்தினை முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கணித்து எழுதி விட்டான்.

மக்களாட்சி நவீன வடிவத்தில் முன்னூறு ஆண்டுகளைக் கடந்தும் அதன் உண்மைத் தன்மையில் அது செயல்பட முடியவில்லை. மக்களாட்சி முதிர்ச்சி அடைவதற்குப் பதில் உலகம்

முழுவதும் சிதிலமடைவதை நம்மால் பார்க்க முடிகிறது. அது மட்டுமல்ல, அரசாங்கம் என்பது மக்களைப் பாதுகாக்கும் ஓர் அரண். அதுதான் அதன் அடிப்படை. ஆனால் அந்தப் பணியை செய்வதில்தான் அரசாங்கமும் சிக்கித் தவிக்கிறது, பொதுமக்களும் அரசாங்கத்தை எப்படி வேலை வாங்குவது என்பது புரியாமல் குழப்பத்தில் இருக்கின்றனர்.

பொதுவாக மக்கள் தங்கள் பாதுகாப்பை முன்னிருத்தித்தான் அரசாங்கத்தை உருவாக்குகின்றார்கள். ஆனால் அதே அரசாங்கம் எதற்காக உருவாக்கப்பட்டதோ அதை மறந்து மக்களுக்குப் பல கேடுகளைச் செய்கின்றது. அவைகளை மக்கள் பொறுத்துக்கொள்கிறார்கள். காரணம் தன் பாதுகாப்பிற்கு வேறு எந்த அமைப்பும் மக்களுக்குத் தென்படவில்லை. அது மட்டுமல்ல, அரசாங்கத்தை நம்மால் நிர்பந்தப்படுத்த முடியும் அதற்கு அரசாங்கம் செவி சாய்க்கும் என்ற நம்பிக்கையால்தான் என்று தாமஸ் பெயின் கூறுகிறான்.

இன்றைய சூழலில் அரசாங்கமே இவ்வளவு பெரிய ராணுவத்தை வைத்திருந்தும், இவ்வளவு பெரிய கட்டமைப்புடன் காவல்துறையை வைத்திருந்தும், வானளாவிய அரசுத்துறைகளை நவீன வசதிகளுடன் வைத்திருந்தும், மக்களைப் பாதுகாப்பதில் தொடர்ந்து கோட்டைவிட்டுக் கொண்டே வருகின்றது. ஏனென்றால் மக்கள் பாதுகாப்பு என்பது மக்களை அண்டை நாட்டினர் தாக்குதலிலிருந்து பாதுகாத்தல் என்பதில் ஆரம்பித்து, மக்களின் உணவுக்குப் பாதுகாப்பு, உரைவிடத்திற்குப் பாதுகாப்பு, உடைமைகளுக்குப் பாதுகாப்பு, உரிமைகளுக்குப் பாதுகாப்பு, வாழ்வாதாரத்திற்குப் பாதுகாப்பு, பணிகளுக்குப் பாதுகாப்பு, ஆரோக்கியத்திற்குப் பாதுகாப்பு, கல்விக்குப் பாதுகாப்பு என்று பாதுகாப்புப் பணிகள் நீட்டிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாதுகாப்புப் பணிகள் என்பதை அரசாங்கம் முழுமையாக அரசு இயந்திரங்களை திறமையுடன் இயக்கி மக்கள் மேம்பாட்டுக்கான கொள்கைகளை வகுத்து உருவாக்கிச் செயல்படுவதில்தான் இருக்கின்றது.


இன்று மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு, சொத்துக்குப் பாதுகாப்பு, தங்கள் உடைமைகளுக்குப் பாதுகாப்பு, தங்கள் பணத்திற்குப் பாதுகாப்பு, தங்கள் பணிக்குப் பாதுகாப்பு என்பதெல்லாம் கேள்விக்குறியாக உள்ளது. இந்தப் பாதுகாப்பை ஏன் அரசாங்கத்தால் தர இயலவில்லை. நம் நாட்டின் சந்தைச் செயல்பாடு அதாவது பொருள் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி




பொருள் ஈட்டும் நிறுவனங்களின் நேர்மையற்ற, நியதியற்ற வரைமுறை மீறிய செயல் என்பதை யாரும் மறுக்க இயலாது. அதுதான் இன்று சமூகத்தைச் சிக்கலுக்கு உள்ளாக்கியுள்ளது. இந்தச் சந்தைதான் அரசியல்வாதிகளுக்கு கட்சிகளை எப்படிக் கம்பெனி நடத்துவதுபோல் நடத்துவது என்பதை கற்றுக்கொடுத்தது. இந்தச் சந்தைதான் வாக்குகளைக்கூட சந்தைப் பொருளாக மாற்றிட கட்சிகளுக்கு வழிகாட்டி, வாக்குகளை வாங்க நிதி உதவியும் செய்தது. இதன் விளைவு இன்று அரசாங்கம் மக்களைப் பாதுகாப்பது என்ற நிலையிலிருந்து சந்தைப் பாதுகாப்பு என்ற இடத்திற்கு வந்துவிட்டது. அரசாங்க அமைப்புக்கள் மக்களாட்சியின் பல அடிப்படைக் கூறுகளான நேர்மை, நீதி, நியதி, சுதந்திரம், உரிமை போன்றவைகளை கடைப்பிடிக்க முடியாமல் கோட்டை விட்டுவிட்டன. மக்களாட்சி என்ற பெயரில் தேர்தலை மட்டும் நடத்தி மற்ற மக்களாட்சிக் கூறுகளைத் தவிர்த்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்றன நம் அரசியல் கட்சிகள். எனவே மக்களைப் பாதுகாக்க, மற்றும் மக்களின் மேம்பாட்டை உறுதி செய்ய மக்களிடம் தேவையான அளவுக்கு பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், அரசாங்கம் ஆளுகை மற்றும் நிர்வாகம் பற்றிய பொது அறிவை உருவாக்குவதைத் தவிர வேறு ஒரு குறுக்குவழி இல்லை என்பதைப் புரிந்து கொண்டு நாம் செயல்படவேண்டும்.

உலகம் முழுவதும் அரசாங்கங்கள் பெரும்பான்மை சமுதாயத்தை நிராகரித்த நிலையில்தான் செயல்படும் சூழலில் இருக்கின்றன. அதைத்தான் நமக்கு உலக ஏற்றத்தாழ்வு அறிக்கை கூறுகிறது. எனவே மக்களைத் திரட்டுவது, அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவது, பொதுமக்களுக்கு ஆட்சி, ஆளுகை, அரசியல் சாசனச் சட்டம் பற்றிய தேவையான அறிவை உருவாக்குவது மட்டுமே தேவையான மாற்றங்களை சமுதாயத்தில் கொண்டுவர முடியும். ●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





₹ 270/-





₹ 95/-





₹ 125/-




₹ 235/-




₹ 180/-




₹ 270/-




₹ 125/-




₹ 200/-




₹ 190/-




₹ 35/-





₹ 125/-




₹ 135/-

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் அரசியல் நூல்கள்




**மோடியின் ஆட்சி ஒரு விமர்சனப் பார்வை**
டாக்டர் சித்தன கௌட பட்டீல்
முரளிதரா
எம், சத்தியானந்த்
₹ 30.00




**மதமா? அரசியலா?**
தா.பாண்டியன்
₹ 45.00





**இந்துத்துவாவா இந்திய சுயராஜ்யமா?**
யு.ஆர்.அனந்தமூர்த்தி
தமிழில்: டாக்டர் வெ.ஜீவானந்தம்
₹ 65.00





**பீகாரிலிருந்து திகார் வரை**
கன்னையா குமார்
₹ 110/-




**கார்ல் மார்க்ஸ் வாழ்வும் பணியும்**
தா.பாண்டியன்
₹ 140/-




**லெனின் என்னும் மனிதர்**
தொமாஸ் க்ரொவ்ஸ்
தமிழாக்கம் எஸ்.வி.ராஜதுரை
₹ 155/-



கட்டுரை

# வரலாற்றுப் பின்னணியில் புயலிலே ஒரு தோணி

◀ கி.இரா.சங்கரன் ▶

உலக வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டு உலகினைத் தொழில்நுட்பம் சார்ந்த நவீனகளத்திற்கு இட்டுச்சென்றது. அதிகமான முக்கிய அறிவியல் கண்டுபிடிப்புகளை இந்நூற்றாண்டு கண்டது. மின்சாரம், நீராவி இயந்திரம், ரயில்பாதையும் தொடர்வண்டியும், தொலைபேசி, தந்தி, இரும்பு மற்றும் உருக்கு இரும்பின் தொழில்நுட்பம் போன்றவையும் வளர்ச்சி பெற்றன. நீராவிக் கப்பல்களும். தொடர்வண்டிகளும் பயண நேரத்தினை மிகவும் குறைத்தன. தொடர்வண்டியில் ஒருவாரத்தில் பாரிசிலிருந்து விலாடிவாஸ்டாக் ரயில் நிலையத்திற்கு செல்லமுடிந்தது. கப்பல்களும், தொடர்வண்டிகளும் புலப்பெயர்ச்சியினை துரிதப்படுத்தின, அதிகமாக்கின.

இது ஒருபுறமிருக்க போர்க்கருவிகள் அதுதொடர்பான உபகரணக்கருவிகள் போன்றவையும் தொழில்நுட்பரீதியாக வேகமாக வளர்ந்தன. உலகநாடுகள் தொழில்நுட்பரீதியாக மூன்றாகப் பிரிக்கப்பட்டன: வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள், வளரப்போகும் நாடுகள். இந்தியா இப்பட்டியலில் இல்லை. வளராநாடுகள் வரிசையில் இருந்தது. 1875 இல் இருந்தே உலக அரசியலரங்கில் முதன்மைபெற்ற நாடுகளாக Britain, France, Germany, Russia, Austria, Italy, Hungery, USA, Japan, China போன்ற நாடுகளே முக்கிய இடம் பெற்றிருந்தன. ஆனால், தொடர்போர் காரணமாகவும், வறட்சி, பஞ்சம் காரணமாகவும் ஐரோப்பியநாடுகளின் குடிமக்கள் பொருளியல்ரீதியாக பெரும் பின்னடைவினைச் சந்தித்தனர். பெருமளவிலான புலப்பெயர்ச்சி ஐரோப்பாவிற்குள்ளேயே நிகழ்ந்தது. எவர் எந்த நாட்டிலிருந்து புலம் பெயர்ந்தாலும் அவர் ஒரு கூலியாகத்தான் தம் வாழ்வினை நடத்தவேண்டியிருந்தது. ஆனால், முதலாளித்துவம் ஓர் இறுக்கமான சமூகக் கட்டமைப்பினை உருவாக்க நினைத்தது. அதன் விளைவுதான் போர்கள். போர்களின்மூலம் நாடுகளைக் கைப்பற்றி இயற்கை மூலவளங்களைக் கொள்ளையிடுவதே நாடுகளின்

பேராசையாக இருந்தது. இதற்கு பலியானவர்கள் வறுமையில் உழன்ற மக்களே.

இக்காலக்கட்டத்தில் முதலாளியத்தாலும் நிலமானியத்தின் கொடூரத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்க்குரலாக சில சிந்தனையாளர்கள் தோன்றினர். இதில் அரசியல் சிந்தனையாளர், ஆன்மீகச்சிந்தனையாளர், தத்துவசிந்தனையாளர் என்றும் கலாபூர்வச்சிந்தனையாளர்கள் சிலரும் தோன்றினர். ஜெர்மனியில் கார்ல்மார்க்சும் (1818-1883), பிரடரிக் எங்கல்சும்(1820-1895), தொழிலாளர்களின் குரலாக ஒலித்தனர். ரஷ்யாவில் டால்ஸ்டாய் (1828-1910) பிரபுகுலத்தில் தோன்றினாலும் அவரும் தஸ்தயெவ்ஸ்கியும் (1821-1881) ரஷ்யாவின் மாற்று அடையாளங்களாக இயங்கினர். தமிழகத்தில் 'வாடியபயிரினைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று இராமலிங்கர் (1823-1874) பசித்தோரின் குரலாக இருந்தார். கருணையில்லா ஆட்சி கடிதுஒழிக என்று எதிர்க்குரல் எழுப்பினார். வர்ணாஸ்ரமத்தினை உடைத்து சமத்துவத்தினை உருவாக்க அயோத்திதாஸரும் (1845-1914), அய்யன்காளியும் (1863-1941), நாராயணகுருவும் (1856-1928), அய்யா வைகுண்டசாமியும் எழுந்தனர். இந்தியத்தேசியத்தினைக் கட்டமைக்க மோகன்தாஸ் கரம்சந்த்காந்தி (1869-1948) தோன்றினார். இந்தியக் கலையினை உலகிற்கு விளக்க இரவீந்தரநாத்தாகூர் (1861-1941) தோன்றினார். உலகில் ஆண்டைகளின் அன்றாட அரசியலை விமர்சிக்க ஜார்ஜ் பெர்னாட்ஷா (1856-1950) தோன்றினார். அய்ரோப்பாவில் அனார்கிஸ்ட்கள், நிஹிலிஸ்ட்கள் போன்ற சமூக இயக்கங்கள் தோன்றின.

ஆனால், இவையனைத்தையும் மீறி அக்காலத்து இளைஞர்கள் மனத்தில் வல்லாதிக்கத்தன்மையும், மேலாதிக்கப் பண்பும் புதைந்திருந்தன. இனவெழுச்சியும், மொழிவழித் தேசியமும், நிறவெறியும், மனத்தினில் ஆயுதங்களாக இருந்தன. அவை அவர்களைப் போரில் கொலைக்கருவிகளை ஏந்தவைத்தன. அவ்விளைஞர்களை வழிநடத்தியவர்கள் நடுவயதினைக் கடந்த கிழவர்களே. அத்தலைவர்களின் பேராசையே முதல், இரண்டாம் உலகப்போர்களுக்கு உளவியல் காரணிகளாக அமைந்தன. போரினைத்தூண்டிய ஹிட்லரும் (1889-1945), முசோலினியும்(1883-1945), அட்மிரல் டோஜோவும் (1884-1948) 50 வயதினைக் கடந்திருந்தனர். சுபாஷ் சந்திரபோஸுக்கு (1897-1945) 1945 இல் 48 வயதுதான் ஆகியிருந்தது.

அய்ரோப்பாவின் காலனிய வெற்றி ஆயுதத்தால் மட்டுமன்று. கொடூரத்தன்மை, ஆக்கிரமிப்புவெறி, பயிற்சிபெற்ற படையணியினர். அவர்களுடன் ஜப்பான் கூட்டணிகண்டதற்குக் காரணம் அது 1858 லிருந்து தொழில்நுட்பரீதியாக நன்கு வளர்ந்திருந்தது. அவர்களிடம் போர்த்தன்மை 1880 முதல் 1930 வரை திட்டமாக இருந்தது. அய்ரோப்பியர்கள் ஆக்கிரமித்த நிலங்களில் பயிர்செய்வதற்காக கூலிகளாக இந்தியாவிலிருந்து அதிகமான மக்கள் புலம்பெயர்ந்தனர். அவர்களில் அதிகமானோர் தமிழர்களே. இவர்கள் தமிழகத்தில் நிகழ்ந்த பஞ்சம் காரணமாகவும் கூலிகளாகப் புலம் பெயர்ந்தனர். 1860 களில் ஸ்பெயினிலும், 1890-1891களில் ரஷ்யாவிலும் கடும்பஞ்சம் தோன்றியது. 1880 களில் எப்போதும் இல்லாத அளவிற்கு புலப்பெயர்ச்சி நிகழ்ந்தது. 1841-1911 காலகட்டத்தில் நிகழ்ந்த பஞ்சம், பொருளாதார மந்தம் போன்றவற்றால் அயர்லாந்து பாதியளவு மக்கள்தொகையினை இழந்தது. 1895-1902 காலகட்டத்தில் ஆஸ்திரேலியா வறட்சி காரணமாக பாதியளவு ஆடுகளை இழந்தது. 1892 இல் பூச்சியினால் அமெரிக்காவில் பருத்தி விளைச்சல் பெருமளவு பாதித்தது. உணவுப் பொருளுக்காகவும், உழைப்பிற்காகவும், மூலப்பொருள்களுக்காகவும் ஐரோப்பாவும், அமெரிக்காவும் காலனியநாடுகளைச் சார்ந்து இருக்கவேண்டியிருந்தது. 1871 முதல் தொழில்வளம் மிகுந்த அய்ரோப்பிய நாடுகள் ஒன்றையொன்று சண்டையிட்டதில்லை. ஆனால், சண்டைகளில் பிறநாட்டு மக்களைக் கொன்றன. பாதிக்கப்பட்ட இனக்குழுக்கள் எதிர்ப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ஆனால், போயர்கள் பிரிட்டிஷாருக்கு கடுமையான ஆயுத எதிர்ப்பைக் காட்டினர். 1905 இல் சிறுநாடான ஜப்பான் பரந்துவிரிந்த ரஷ்யாவினைப் போரில் தோற்கடித்தது. ஒட்டோமான் பேரரசு சிதைந்தது. பால்கன் பிரச்சினைதான் 1914 இல் போர் வெடிப்பிற்கு மருந்தாக அமைந்தது. 1880 களிலேயே பிரடரிக் எங்கல்ஸ் உலகப்போர் வெடிக்கும் என்று கணித்தார். நீட்ஷே (1844-1900) அய்ரோப்பிய இராணுவமயம் மனிதனை விலங்காக்கும் என்றார். இப்பின்னணியில் இந்நாவலைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

## I

தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் சிறந்த நடப்பியல் நாவல்களில் ஒன்றாக அளவிடப்படும்

ப.சிங்காரம் எழுதிய '**புயலிலே ஒரு தோணி**' 1962 இல் எழுதப்பட்டு 1972 இல் வெளியிடப்பட்டது. கடல்தாண்டிய தமிழர்களின் புலப்பெயர்ச்சியினை வரைகாட்டும் இந்நாவல் தமிழரின் பண்பாட்டினை பின்னோக்கிப் பார்க்கும் விமர்சனக்கூறுதலையும் கொண்டுள்ளது. 1930-1945 காலகட்டத்தில் கதைநிகழ்வு அமைவதாக சித்தரிக்கப்பட்டுள்ள இந்நாவலிற்கு களமாக **சின்னமங்கலம், சிங்கம்புணரி, மதுரை, திருப்பத்தூர், காரைக்குடி, புதுக்கோட்டை** போன்ற தமிழகத்தின் வறண்ட நிலப்பகுதியும் தென்கிழக்காசிய நிலப்பரப்பான **பர்மா, பினாங்கு, சிங்கப்பூர், மலேசியா, பாங்காக்** போன்றவையும் அமைகின்றன. இவை அடர்ந்த காடுகளைக் கொண்ட நிலப்பரப்பு.

உலகின் பொருளியல் பெருமந்தத்தினையும் (great economic depression) தொழில்நுட்பத்திலும் படைபலத்திலும் வளர்ந்த ஐரோப்பிய நாடுகளிடையே உருவான போர் போட்டிகள் காலனிய நாடுகளை அலைக்கழித்ததனையும் இந்நாவல் விளக்கும். இடையிடையே, மேற்சொல்லப்பட்ட தென்கிழக்காசியப் பகுதிகளில் வட்டித்தொழில் பயனாகப்பெற்ற செல்வத்தினை கேளிக்கைகளில் செலவிட்டு இழிநிலை அடைந்த தமிழரையும் அதற்கான சமூகப் பண்பாட்டுப் பின்னணியும் பேசப்படுகிறது. தாழ்ந்த தமிழகத்தினை சீராக்கும் உபாயங்கள் கதைமாந்தர்கள் வழியே பரிந்துரைக்கப்படுகிறது. பழமையினைப் போற்றும், தூற்றும் போக்கும் சமூகம் பற்றிய கவலையும் வெளிப்படுத்தப்படுகிறது.

நாற்பது அத்தியாயங்களில் எழுதப்பட்ட இந்நாவலில் கதைமாந்தர்களாக **தமிழர், மலையாளிகள், சீனர், மலேயர், பர்மியர், வங்காளியர், ஜெர்மானியர், இஸ்லாமியர், கிறித்தவர்** என்று பல இனத்தினரும் வந்து போகின்றனர். இந்நாவலின் முக்கிய கூறுகளை சில தலைப்புகளில் அடக்கலாம். அவை: **வரலாற்றின் தொடர்ச்சி, வணிகமும் வரலாறும், பாண்டியனும் புல்லட்டும், நாவலாசிரியரின் பெண்கள்மீதான பார்வை, தமிழ்ச்சமூகத்தின் மீதான விமர்சனம், அரசியல்** போன்றன. ஆனால், இத்தனைத் தலைப்புகளும் இங்கு விவாதிக்கப்படப்போவதில்லை. ஏனெனில், கதை தமிழ்ப் பாட்டினைச் சுற்றி பின்னப்பட்டுள்ளது. இதனை ஒரு Nostalgic நாவல் வகைக்குள் சேர்க்கலாம்.

நூறாண்டுகளுக்குமுன் தமிழகத்தின் ஓர் இடைநிலை ஊரின் சமூகப் பொருளியல் அமைப்புநிலையினை இந்நாவலின் **சின்னமங்கலம்** என்ற ஊர் பற்றிய விவரணைமூலம் அறியலாம். **ஊருக்குப் புறத்தே அமைந்திருக்கும் ஓர் உயர்நிலைப்பள்ளி. புதிதாக வந்த தபால்நிலையம். வாரத்திற்கு ஒருமுறை மருத்துவர் வந்துபோகும் கிளினிக். பிறர்முன் ஆங்கிலத்தில் பேசிக்கொள்ளும் ஒரேயொரு கிறித்தவ குடும்பம். பெண்களுக்கு ஜாக்கெட் தைக்கும் காஜா பெண்ணையே மணந்த ஒற்றைமெஷின் தையல்காரர். படிப்பகத்தில் எப்போதும் இருக்கும் ஒரேயொரு தமிழ்ப்புலவர். தீபாவளியைப் புறக்கணிக்கும் தி.க குடும்பம். எவருடனும் சண்டைபோடாத குருக்கள் குடும்பம். குடித்தாலும் நிலைகுலையாத ஊர் பயில்வான். எல்லையில் தனித்திருக்கும் ஊர்க்கோயில். அதன் நந்தவனத்தின் குளப்படிக்கட்டில் மாலைமங்கிய நேரத்தில் மறைவாக அமர்ந்து கதைபேசும் காதலர்கள். அவர்களை நோட்டம்விடும் விடலைகள். பாழ்மண்டபத்தில் பீடிகுடிக்கும் இளவட்டங்கள். சீட்டாடும் பிழைப்பற்றவர்கள். கோயிலுக்கு நேந்துவிடப்பட்ட ஊர்மாடு. அனாசின்கூட கிடைக்கும் ஒரு மளிகைக்கடை. இதுதான் 1960 களில் தமிழகத்தின் இடைநிலைப்பட்ட ஓர் ஊரின் அமைப்பு.** இதுபோன்ற விவரணையில் கதைக்களத்தின் ஒன்றான சின்னமங்கலத்தினைக் கண்ணுறலாம். அவ்வூரின் சந்தையினை திண்டுக்கல் ராவுத்தர் குத்தகை எடுத்துள்ளார். அதில் பலவித வியாபாரிகள் பொருள்களைச் சந்தைப்படுத்தினர். அவர்கள் பலவாறாக சுட்டப்படுகின்றனர். மின்விளக்கு வசதியற்ற அச்சந்தையில் கடைகள் பெட்ரோமாக்ஸ், சிம்னி விளக்குகள் வெளிச்சத்தில் இரவிலும் பொருள்கள் விற்கப்பட்டதனை நாவலாசிரியர் பதிவுசெய்துள்ளார். கிழங்கு வியாபாரிகள், பலசரக்கு வியாபாரிகள், கசாப்புகடைபோடும் உதினிப்பட்டி ராவுத்தர், நாடார்களின் உப்புக்கண்ட கறிவியாபாரம், கோபால்செட்டியாரின் பட்டணம்பொடி கடை என்று கடைகளின் வரிசை வகைப்படுத்தப்பட்டுள்ளது. சாலையோரத்து புடவை கடைகளில் விற்கப்படும் நெரிஞ்சிப்பூசேலை, **அமுசு** பப்பாளி சேலை, **ஊசி** வர்ணசேலை, **சேலம்** குண்டஞ்சு வேட்டி, அருப்புக்கோட்டை துண்டு, பரமக்குடி சிற்றாடை என்று துணிவகைகள் பற்றிய குறிப்பு உண்டு. உணவுப் பண்டங்கள் தொடர்பாக கோமதிவிலாஸ் அசல் திருநெல்வேலி சைவாள் மண்பானை சமையல்கடை, அபுபக்கர் தகர கடை, பாலக்காட்டு அய்யர் காபி கிளப்பு, வாழவந்தான் பொரிகடலை

கடை, திருநெல்வேலி சைவாச்சியம்மா இட்லிகடை போன்றன. 1970 களில் இதுபோன்ற சிற்றூர்களில் இளமைக் காலத்தினை செலவிட்டவர்களுக்கு இவ்விவரணையில் கற்பனையில்லை என்று தெரியும். இதுபோன்ற உள்ளூர் வியாபாரச் சூழலை இன்றும் மணப்பாறை, திண்டுக்கல் வார, மாதச் சந்தைகள் கூடுமிடங்களில் காணலாம்.

அவ்வூரின் அமைப்புமுறை பற்றிய விவரணை இவ்வாறாக அமைகிறது. கோமுட்டி கிணறு, லாடசாமியார் மடம், வலையர்தெரு, கடலைக்காடு, கள்ளுக்கடை, ஆவாரங்காடு, கரடிமேய்ந்த தோப்பு, எல்லையம்மன்கோயில், வேதக்காரர்பள்ளிக்கூடம், பழநியாண்டவர் பாடசாலை, வாத்தியார் அருமை நாயகம்வீடு, சங்கரன் ஆசாரி கொல்லுப்பட்டறை, மராட்டியர் மிலிடரி கிளப், எருமைக்கார நாய்க்கரம்மா வீடு, குண்டுராவுத்தர் லாடக்கொட்டகை, முன்குடுமிமலையாளி வேலாயுதத்தின் ரம்பக்கிடங்கு, கடற்கரைநாடார் சந்தனக்கடை. இவ்விவரிப்பில் தமிழரோடு பிறமொழி பேசும் இனத்தினரும் கலந்து வாழ்ந்தனர் என்று அறியலாம். தமிழகத்தில் தெலுங்குமொழி பேசும் மக்கள் இல்லாத ஊர்கள் என்றால் அவை மீனவர் கிராமங்களாகத்தான் இருக்கும். தமிழகத்தின் கிழக்கு கடற்கரையில் மீன்பிடி தொழில் செய்யும் தெலுங்கு மொழி பேசும் கிராமங்கள் இல்லை எனலாம். உள்நிலப்பகுதிகளிலும் மீன்பிடிதொழில் செய்யும் தெலுங்குமொழிபேசும் கிராமங்கள் இல்லை.

அவ்வூரில் வாழ்ந்த மக்கள் அணிந்திருந்த கிலாஸ்கோமல்லுவேட்டி, பியூஜி பட்டுசட்டை, புலித்தோல் இடைவார், வெஸ்டர்ன் கடிகாரம், முட்டைமார்க் பனியன், டைமண்ட் துண்டு போன்றவையும் வருணனையில் இடம் பெற்றுள்ளது. இவ்விவரணைகள் நவீனகாலத்திற்கு முந்தைய கிராமங்கள்/ஊர்கள் தேவைகளை சுயமாக நிறைவேற்றிக்கொண்டன என்ற தோற்றத்தினைத் தருகின்றன. அது, ஓரளவு உண்மையும்கூட. ஆனால், சந்தையில் கூடும் இவ்வியாபாரிகள் அடுத்தடுத்த ஊர்களின் சந்தைகளிலும் திட்டமிட்ட காலப்படி கடைபோடுவர். சிலகடைகள் நிரந்தரமாக இருக்கும். இரவில் காண்டா விளக்கொளியில் ஊருக்கு ஊர் புடவைக்கடை போடும் வியாபாரிகளும் உண்டு.

## II

### சிங்காரத்தின் வரலாற்றறிவு

**நாற்பது** உள்தலைப்புகளில் எழுதப்பட்ட இந்நாவல் ஆசிரியரின் புலமைத்துவத்தினை




புயலிலே ஒரு தோணி
ப.சிங்காரம் / நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை / விலை: ரூ.250/-

பரக்க விவரிக்கிறது. சங்க இலக்கியப்பாடல்கள், வழக்கில் இருந்த சொலவடைகள், சில நாட்டுப் புறப்பாடல்கள், தேசிங்குராஜனின் கதைப்பாடல்கள், பைபிள் வசனங்கள், திருக்குறள் போன்றவை பொருத்தமான இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பாபிலோனிய, எகிப்திய நாகரிகங்கள் மறைவிற்கு ஆட்சியாளர்களின் போகவெறியே காரணம் என்பார் ஆசிரியர். மேலும், ஆட்சியாளரின் போகத்தின்மீதான ஆசையும், செல்வத்தின்மீதான ஆசையும் நாகரிகங்களின் வீழ்ச்சிக்குக் காரணம். இவ்விடத்தில் சி.என்.அண்ணாதுரை(1909-1969) **எழுதிய** ரோமாபுரி ராணிகள் என்ற நூலினை நினைவுகூரவேண்டும். தமிழரின் போகவாழ்வே மாலிக்காபூரும், கம்பண உடையாரும், லட்சுமண நாய்க்கனும், ஷாஹாஜியும், வெங்கோஜியும், டியூப்ளேயும் (1697-1763), கிளைவும்(1725-1774) விருப்பம்போல் தமிழகத்தினை சூறையாட அனுமதித்தது. தமிழர்களிடையேயான ஒற்றுமையின்மையே இதற்குக் காரணம் என்று வரலாற்றுச் சம்பவங்களை ஆண்டுமுறைப்படி /

காலநிரல்படி வரிசைப்படுத்துகிறார். வீரபாண்டிய கட்டபொம்மன் (1760-1799) இளவல் புதுக்கோட்டை தொண்டைமான் அரசு அலுவலர்களால் பிடித்துக் கொடுக்கப்பட்டது, பாளையக்காரர்கள் ஒன்றுகூடி குடியானவர்களிடம் அநியாயமாக வரிவசூலித்தது போன்ற வரலாற்று நிகழ்வுகளைப் பதிவிடுகிறார். தமிழ்ச்சமூகத்தின் பண்பாட்டு வீழ்ச்சி பற்றிய பெருத்த கவலையாக இப்பதிவு அமைகிறது. வெளியிலிருந்து வந்து சூறையாடியவர்களையும் சாடுகிறார். மிகைவரியினை குடியானவர்களிடம் வசூலித்த பாளையக்காரர்களையும் சாடுகிறார். இதனை நாவலாசிரியரின் சமூகப்பொறுப்பாகப் பார்க்கலாம். சின்னமங்கலம் என்ற ஊர் காலனிய காலத்திலிருந்து நவீனகாலத்திற்கு மாறிவரும் போக்கும் பதியப்பட்டுள்ளது. ஆங்கிலம் கற்பிக்கும் அவ்வூரின் டானியல் வாத்தியார் அவ்வூரின் சிலபெண்களை பாலியலாக அபகரித்ததனை ஒரு குறிப்பாகத் தருகிறார். ஆங்கிலம் கற்ற ஆண்களின் மீதான பெண்களின் மோகத்தினை இக்கூற்று வெளிப்படுத்துவதாயுள்ளது. 16 வயதினிலே (1977), ரோசாப்பூ ரவிக்கைக்காரி (1979) போன்ற தமிழ்த்திரைப்படங்களில் இதுபோன்ற கதைமாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர். ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஏன்? இப்படி சித்தரிக்கப்படுகின்றனர். தமிழாசிரியர்கள் பற்றிய குறிப்புகள் நாவலில் இல்லை. அதாவது நாவல்களும் அமைந்த ஊர்களில் அதுபோன்ற தமிழாசிரியர்கள் இல்லை.

போர் பற்றிய விவரணைகளில் ஆசிரியரின் உலக அறிவு பளிச்சிடுகிறது. இரண்டாம் உலகப்போரின் படை நகர்வுகள், படையணியினைத் தலைமையேற்ற தளபதிகள் பற்றிய குறிப்புகள் அவர்களின் தனித்தன்மை போன்றன முக்கியத்துவம் வாய்ந்தவை. போரிலும், கடல்சார் வரலாற்றிலும் **இனக்கலப்பு** முக்கியமான உடனிகழ்வு. ஒரு ஜப்பானிய கமாண்டர் யாழ்ப்பாணத் தந்தைக்கும் ஜப்பானியத் தாய்க்கும் பிறந்தவர் என்ற குறிப்பினைத் தருகிறார். இங்கு யாழ்ப்பாணத்துத் தந்தைக்கும் ஐரிஷ் பெண்ணுக்கும் பிறந்த ஆனந்த கென்டிஸ் குமாரசாமியினை (1877-1947) நினைவுகூர வேண்டும்.

## III

### தமிழ்ச்சமூகத்தின் மீதான விமர்சனம்

சென்ற நூற்றாண்டின் முதல்கூற்றில் தமிழ் செவ்விலக்கியங்கள் பலவும் அச்சுக்கு வந்தன. அவற்றின் மீதான ஆய்வும் உந்தப்பெற்றது. பல ஆய்வுநூல்கள், கட்டுரைகள் வெளிவந்தன. சில செம்மொழி பாடல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. ஜி.யூ.போப்பும்(1820-1908), வ.வே.சு.அய்யரும் (1881-1925) திருக்குறளினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அதனை உலக நிலைக்குக் கொண்டு சென்றனர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும்கூட ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. சிலப்பதிகாரம் தமிழரின் பண்பாட்டு அடையாளமாக விதந்து பேசப்பட்டது. 1942 இல் சிலப்பதிகாரம் முழுநீளத் திரைப்படமாக தமிழில் வெளியிடப்பட்டது. தமிழரின் கற்பு, ஒழுக்கம் பற்றிப் பேசுவதற்கு ஒருவருக்கு ஒரு வாழ்நாள் போதாது என்ற அளவிற்கு அதனைப் படிப்போர் உணர்ந்தனர். தமிழில் அதிகமுறை அதிகமான அறிஞர்களால் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட இலக்கியம் சிலப்பதிகாரமாகத்தான் இருக்கும். ஆனால், அதில் பரிந்துரைக்கப்பட்ட **கற்பு,** ஒழுக்கக்கோட்பாடுகளை தமிழர் பின்பற்றினரா என்பதில் ஒவ்வொரு தமிழர் மனத்திலும் கேள்வியுண்டு என்பதுபோல் நாவலாசிரியர் மனத்திலும் எழுந்துள்ளது. இதனைச் சில கதாமாந்தர்கள்மூலம் கேள்வியாக முன்வைக்கிறார். தமிழ்ப்பெருமை பேசிவந்த அக்காலக்கட்டத்தின் அறிஞரின் கருத்துகளை கதைமாந்தர் உரையாடல்களின்மூலம் விமர்சிக்கிறார். அதேநேரத்தில், உலகில் தோன்றிய பல நாகரிகங்கள் அழிந்திட தமிழ் நாகரிகத்தினையும், பண்பாட்டினையும் **மொழியே** காலஓட்டத்தில் அழியாமல் காத்தது என்றுகூறும் ப.சிங்காரம் படைத்த பாத்திரங்கள் தமிழ்மொழியின் மேன்மையினைப் போற்றுதல் உண்மையின் அடிப்படையில் இருக்கவேண்டும் என்றும் பேசும்.


தமிழரைப் பிடித்துள்ள **சனியன்களில் தலையானது ஜாதி** என்றும், அதனை ஒழிக்கவேண்டும் என்றும் மற்றொரு கதாமாந்தர்மூலம் ப.சிங்காரம் அறிவுறுத்துகிறார். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல என்றுரைத்து ஜாதிய கட்டுமானத்தினை மட்டும் ஏன்?கழித்தொழிக்காமல் கடைபிடிக்கவேண்டும் என்ற கேள்வி அப்பாத்திரத்தின் உரையாடலில் பொதிந்துள்ளது. தமிழர்கள் கிணற்றுத் தவளைகளாய் உள்ளனர் என்றும் தென்கிழக்காசிய நாடுகளில் இழிநிலையில் உள்ளனர் என்றும் வேதனைப்படுகிறார். நாவலில் ஒரு பாத்திரம் தமிழர்களுக்குப் பரந்த மனப்பான்மை வேண்டுமென்று ஒலிக்கிறது. இங்குத் தென்கிழக்காசிய நாடுக ளின் தேயிலை,

காப்பி, ரப்பர்த் தோட்டங்களில் இழிநிலையில் கூலிகளாகச் சென்ற தமிழரின் புலப்பெயர்ச்சி பற்றிக் குறிப்பிடப்படவேண்டும். தாமஸ் மன்றோ புதிய நிலவுடைமையினை அறிமுகப்படுத்தியதில் பெரும்பாலான புறம்போக்கு நிலங்களை ஆங்கில அதிகாரிகளும் வாங்கினர். காவிரி-டெல்டா மற்றும் வறண்ட இராமநாதபுரம் வட்டாரங்களில் நிலவுடைமையமைப்பு மாற்றியமைக்கப்பட்டதால் மரபுவழியிலான நிலவுடைமையாளரும் புதிதாகத் தோன்றிய **பட்டாதார், மிட்டாதார், சமீன்** போன்ற புதுவகை நிலவுடைமையாளர்களும் குடியானவர்களை கடுமையாகவும், கொடூரமாகவும் இழிவாக நடத்தியதால் அவர்கள் அடிமைத்தளையினை அறுத்தெறிவதற்கு கடல்தாண்டி புலம்பெயர்ந்தனர். ஆனால், அவர்கள் நிலை சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்தது போன்று புலம்பெயர்ந்த நிலத்திலிருந்து திரும்பமுடியாத நிலை ஏற்பட்டு. அடிமைகளாயினர். அடிமை விற்பனையில் பிரிட்டிஷ் அரசும், டச்சுக்கம்பெனி, போர்ச்சுகீஸ் கம்பெனி, பிரஞ்சு கம்பெனிகளும், கிறித்தவ பாதிரியார்களும் கூட்டணிகொண்டதுதான் a kind of crucifixon. மிசினரிகள் தமிழ் அடிமைகளுக்கு சமயத்தினைத் தந்தனர்; விடுதலையினை அன்று. கீழைத்தஞ்சை மாவட்டத்தின் பண்ணையார்கள் அய்ரோப்பிய நிலவுடைமை பாணியில் கையில் சவுக்குடன் குதிரையில் சவாரிசெய்து குடியானவரை உழைக்க வைத்தனர். அய்ரோப்பியரைப்போல் உடுத்தினர், குடித்தனர், புகைத்தனர். சமூகத்தில் பெரியமனிதராய் நடித்தனர். இதுவே கீழைத்தஞ்சை மாவட்டத்திலிருந்து தென்கிழக்காசிய நாடுகளுக்கும் தீவுகளுக்கும் கூலிகளாகவும் அடிமைகளாகவும் தமிழர் புலம்பெயரக் காரணமாய் அமைந்தது. சிலர், பர்மா, பினாங்கு போன்ற இடங்களுக்கு வட்டித்தொழில் செல்வந்தர்களாகச் சென்றனர்.

IV

### பெண்கள்மீதான பார்வை

அய்ரோப்பியர்களால் காலனியாக்கப்பட்ட தென்கிழக்காசிய நகரங்கள் அய்ரோப்பியபாணி வாழ்முறையினை பூசிக்கொண்டதனை இந்நாவல் விவரிக்கிறது. பினாங்கு, மலேயா போன்ற நகரங்களில் அமைத்த களியாட்ட அரங்குகள், தங்கும்விடுதிகள் போன்றன பொழுதுபோக்கு அம்சங்களோடு ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் இயங்கின என்றும், அதில் தமிழரும் இழிந்தனர் என்றும் நாவல் விளக்கும். நான்யாங் ஹோட்டல் என்று தலைப்பிடப்பட்ட அத்தியாயத்தில்




கடலுக்கு அப்பால்
ப.சிங்காரம் / நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்., சென்னை / விலை: ரூ.120/-

ஈப்போமரியம் என்ற பெண்பாத்திரத்தினை அம்மாடியோவ்... அந்த எருமையா! நம்மாள முடியாது சாமி. அவளுக்கு தாடிக்காரந்தான் லாயக்கு என்று கெக்கெளிக்கிறது ஒரு பாத்திரம். அப்பெண் ஒரு நடன மாதுவாகக் காட்டப்படுகிறார். இவ்விடத்தில் நூறுக்குமேற்பட்ட இந்திபடங்களில் நடனப்பெண்ணாக அசத்திய ஹெலன்பற்றி (Helen Stenborg,1938-2008) குறிப்பிடவேண்டும். இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில், பர்மாவில் பர்மியப் பெண்ணிற்கும் பிரிட்டிஷ்படையின் இந்தோ-ஆங்கிலேயருக்கும் பிறந்தவர். இவரின் தந்தை இரண்டாம் உலகப்போரில் இறந்துபட்டதால் இவர் குடும்பம் இந்தியாவில் தஞ்சம் அடைந்தது. இவர் மூன்று தமிழ்ப்படங்களிலும் நடித்துள்ளார் *(உத்தம புத்திரன்: 1958; சங்கே முழங்கு: 1972; பில்லா:1980).*

போரில் சிங்கப்பூர் ஜப்பானுக்கு கைமாறியபின் அதன்பெயர் மாற்றப்பட்டது. அங்கு, தெருக்களில் வேசியர் திரிந்தனர் என்று கவலைக்குரலில் பேசுகிறார் நாவலாசிரியர். விபசாரம் போரின் உடனிகழ்வில் ஒன்று. முதல் உலகப்போரின் விளைவாக அய்ரோப்பாவில் ஆடல்மகளிர் விலைமகளிராக மாறினர் என்ற மையக்கருத்துடன் Waterloo Bridge என்ற நாடகம் *1930* இல்

நிகழ்த்தப்பட்டது. இந்நாடகம் 1942இல் சினிமாவாக வெளியிடப்பட்டது. Vivien Leigh (1913-1967), Robert Tylor *(1911-1969)* இருவரும் நடித்த மனக்கவலைதரும் அற்புதமான காதல்படம். இதேபோன்ற விளைவுகள் USSR இல் கம்யூனிஸ்ட் அரசு முதலாளிகளால் தகர்க்கப்பட்ட போதும் நாடுகள் பிரிந்தபோதும் உருவாயின. இப்படி முதலாளித்துவத்தினை ஆதரித்தவர்கள் பெண்களை விபசாரிகளாக்கினர். **விலாசினி** என்ற பெண்பாத்திரத்திற்கு என்று தனியே ஓர் அத்தியாயம் ஒதுக்கப்பட்டுள்ளது. அது முழுக்க அவரை வசைமழை மொழிவதற்கு மட்டுமே செலவழிக்கப்பட்டுள்ளது. விலாசினி **தட்டுவாணி** என்று வசைபெறுகிறார். அப்பெண்ணின்மேல் ஒரு திருட்டுக்குற்றமும் சாட்டப்படுகிறது. மோசமாக சித்தரிக்கப்படுகிறார். அவருடைய அண்ணன் நேதாஜியின் பள்ளி தோழர் என்றும் ஒரு மலையாளி என்றும் காட்டப்படுகிறார். "ஒரு வேசை பாரிஸ்டர் சங்குண்ணிமேனனின் தங்கை" என்ற தொடர் கவனத்திற்குரியது. சுந்தரம் என்ற தலைப்பிட்ட அத்தியாயத்தில் மேனன் கிளினிக்கில் பணிபுரியும் நர்ஸ் பாத்திரம் "போறா போ நாத்தச் சிறிக்கி" என்று தூற்றப்படுகின்றார். பொம்பளை செலவு என்ற தொடர் விபசாரக் கூலியாகக் காட்டப்படுகிறது.

V

### கேளிக்கையும் செட்டியாரும்

கேளிக்கை என்ற அத்தியாயத்தில் வட்டித்தொழில் செட்டியார்களின் தவறொழுக்கம் பற்றி விலாவாரியாக விவரிக்கப்படுகிறது. பிரான்மலையில் இருந்து வந்த கல்யாணி என்ற தாசி பற்றி பேச்சு வருகிறது. ராவன்னாமானா என்ற செட்டியார் தாசிகளுக்கு பவுன்காசுகளாகக் கொடுப்பவர் என்று குறிக்கப்படுகிறார். ஆவன்னா என்று தலைப்பிட்ட 10 ஆம் அத்தியாயத்தில் விடாக்கண்டன்செட்டியார் ஒரு பெரியசமீன்தாரோட போட்டியிட்டு விராலிமலை முத்துமீனாட்சியை ஒரு லெட்சம்வரை செலவு செய்து புதுக்கோட்டையில் பளிங்குமாளிகை கட்டி வச்சிருந்தாரு. அவள் இறந்ததும் அடுத்து காக்கி நாடாவிலிருந்து ஒரு ஆந்திராகாரியை புடிச்சாந்து வச்சிருந்தார். அடுத்து மலையாளத்திலிருந்து ஒருத்தியைக் கொண்டுவந்தார். அதனை முடிச்சுவிட்ட லாயருக்கு கமிஷன் பதினாராயிரம் ரூபாய். செட்டியார் பொம்பளை விஷயத்தில் பெரிய கவிச்சி. சூனாபானா என்பவர் ஒரு பார்சிலேடியை வைத்திருந்தார். கானாரூனா இப்போது சோழநாட்டில்தான், திருக்குடந்தையோ, மயிலாடுதுறையோ நினைவில்லை-ஒரு நாடக கணிகைவீட்டில் காலம்தள்ளுவதாகக் கேள்வி. இங்கு, மயிலாடுதுறை, கும்பகோணம் தாசிகள் பற்றிய ஒரு பழமொழி கவனத்திற்குரியது. செட்டிகள் மட்டுமன்று, முத்துக்கருப்பப்பிள்ளை மகன் திருநாவுக்கரசர், விருதுநகர் குங்குமப்பொட்டு உலகளந்த நாடார்மகன் ராஜரத்தினம், சாமித்தோப்பு உண்டியல்கடை ராமையாமகன் கந்தாச்சு எல்லாம் கோடம்பாக்கம் குட்டிகளோடு திரிபவர்கள் என்று நாவலாசிரியர் அடையாளம் காட்டுகிறார். இது, ஒழுக்கத்திற்கும் சாதிக்கும் தொடர்பில்லை என்பதனைக் காட்டும். செட்டியாருக்குப் பிறகு மைனர்கள் ராஜ்யம். தண்ணி போடுறது, ரங்கு விளையாடுறது, எடுபட்ட சிறுக்கிகளை பிளசர்ல தூக்கிவச்சுக்கினு ஊர் சுத்துறதும்தாம் தெரியும்.

விடாக்கண்டன் செட்டியாரின் தமையனார் ஒருவர் பற்றிய குறிப்பு: **சட்டைக்காரி** ஒருத்தியை எடுத்து வச்சிருந்தாராம். இதனால், காலனியகாலம், அனைத்து இனத்து சமூகத்தினையும் அலைக்கழித்தது என்று அறிய வரலாம். இந்த அலைக்கழிப்பிற்கு அனைத்து இனத்து ஆண்களும் பொறுப்பேற்கவேண்டும். காலப்போக்கு மாறிக்கொண்டேயிருந்தாலும் பெண்களின் மீதான பாலியல் வன்கொடுமை சுரண்டல் தொடர்ந்துகொண்டுள்ளது என்பதை அறிவோம்.

நாவலில் ஒரு கதாபாத்திரம் பெண்களை இப்படிப் பட்டியலிடும். வெண்கலக்கடைச் சந்து நாகமணி, மஞ்சணக்காரத்தெரு சொர்ணம், குயவர் பாளையம் கோகிலராணி என்ற குப்பம்மாள், பணம் குறஞ்சுபோனால் ஒன்னாம்நம்பர் சந்து மலையாள பகவதிகள், ஓமனா, பாருக்குட்டி, சரோஜாம்மா. திண்ணைகளில் தூணைப்பிடித்துக்கொண்டு வெள்ளை, சிவப்பு, கறுப்பு சேலைப்பெண்டிர் நிற்பார்கள். இது ப.சிங்காரத்தின் குரலன்று; மதுரையில் சுற்றித்திரிந்த மைனர்களின் குரலாகப் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

குன்றக்குடி வள்ளிக்கண்ணு, மேலமாசிவீதியில் முத்துநாயகி-தாசிமகள் தாசி, வடக்கு ஆவணி மூலவீதியில் ரங்கூன் ராஜசுந்தரி, இரட்டைவீடு முத்துலட்சுமி. கோயில் நகரங்கள் தேவதாசி நடைமுறைக்கு **தீம்புகழ்** பெற்றது போற்றத்தக்கது அன்று. அதற்கு மதுரையும் விதிவிலக்கன்று.

VI

### பண்பாட்டுப் பார்வை

நாவலில் மதுரையின் அன்றாடவாழ்க்கை பதிவுசெய்யப்படுகிறது. பண்பாட்டு மாறுதலும் பதிவுசெய்யப்படுகிறது. "மதுரை டவுன்ஹால் தெரு பீமவிலாஸ் மதுரையில் முதன்முதலாக மேசையில் வைத்துப் பலகாரம் தின்னும் பழக்கத்தினை புகுத்திய கடை. மார்வாடியின் வியாபார முழக்கம், ஹல்வா விற்பவர்கள், பொம்பளைசீக்கு

மாத்திரை விற்பவர்கள், தாயத்து விற்பவர்கள், கொக்கோக சாஸ்திரம் விற்பவர்கள், தேள்கடி மருந்து விற்பவர்கள், **ஏக்பனியன் தோஅனா**''இது மதுரை கடைத்தெருவின் வருணனை. மதுரை தென்னோலைக்காரத்தெரு, நொண்டிவைத்தியரின் மன்மதபானலேகியம், மன்மத சஞ்சீவி மாத்திரை போன்றவையும் விற்கப்பட்டன. இன்றைக்கும் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் உள்ள பேருந்துநிலையங்களின் மறைவான இடங்களில் ஆண்மைக் குறை பற்றி பிங்க் கலர் பின்னணியில் கருப்பு பெரிய எழுத்து விளம்பரநோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளதனைக் காணலாம். மதுரையில் சித்திரைத்திருவிழா, பிட்டுத் திருவிழா, தெப்பத் திருவிழா, மாரியம்மன் தெப்பத்திருவிழா போன்றவை பிரமாதமாகப் பேசப்படுகின்றன. கொன்னையூர் மாரியம்மன்கோயில், திருவேள்பூர் மாரியம்மன்கோயில், நார்த்தாமலை மாரியம்மன்கோயில் போன்றவை இவ்வரிசையில் மிகவும் பிரசித்தி பெற்றவை.

பண்பாட்டின் பிறகூறுகளாக நாட்டரசன்கோட்டை கண்ணாத்தாள் திருவிழா, கொன்னையூரில் மாரியாத்தாள் திருவிழா, காரைக்குடியில் கொப்பாத்தாள் திருவிழா, சின்னமங்கலம் திருவிழா போன்றவையும் நினைவூட்டப்படுகின்றன. அவ்விழாக்களில் நிகழும் பிற கலைநிகழ்ச்சிகளும் வரிசையாக நினைக்கப்படுகிறது. இசையரசி சுந்தராம்பாள், தேசபக்தர் விஸ்வநாததாஸ், ராஜலட்சுமி, வேலாம்பாள், ருக்மணிபாய், ஹார்மோனிய சக்கரவர்த்தி காதர்பாட்சா, ஸ்த்ரீபார்ட் அனந்தநாராயண அய்யர், ஹிந்துஸ்தான் கவாய் நடராஜபிள்ளை போன்ற இசைவாணர்களும், **பபூன்சண்முகம், காமிக் சாமண்ணா, ஜோக்கர்**ராமுடு போன்ற கலைவாணர்களையும் பட்டியலிடுகிறார். மதுரை ஒரிஜினல் பாய்ஸ்கம்பெனி நடத்திய **சவுக்கடி சந்திரகாந்தா, பம்பாய்மெயில், ராஜபக்தி** போன்ற நாடகங்கள் பட்டியலிடப்படுகின்றன. இவை மூன்றும் பின்னாட்களில் சினிமாவாக எடுக்கப்பட்டன.

இவ்வட்டாரத்தில் பெரும்பாலும் பெண்தெய்வக் கோயில்களுக்கு பிரசித்தியாக ஆண்டுதோறும் பூச்சொரிதல் விழாக்கள் எடுக்கப்படும். பல ஊர்களில் இருந்தும் மக்கள் வழிபாட்டிற்கு குடும்பம் குடும்பமாக வந்து வழிபடுவர். மிக விமர்சையாகக் கொண்டாடப்படும் இவ்விழாவினையொட்டி கோயில்களின் அருகே சந்தைகள் நடத்தப்பெறும். இவ்வூர் வட்டாரத்தின் புராண கடவுளர் கோயில்களான திருமெய்யம், திருப்பத்தூர், திருக்கோஷ்டியூர், அழகர்கோயில் பூசைவழிபாடுகள் விழாக்கள் பற்றிய பதிவுகள் இல்லை. மதுரை நகரின் வரலாற்றினை ஒரு மானிடவியல் பார்வையில் அணுகுவதற்கு இந்நாவல் ஒரு திறவுகோலாக அமையும்.

## VII

### ப.சிங்காரத்தின் அரசியல் பார்வை

உலகத்தமிழர்களே ஒன்றுபடுங்கள்! தமிழினம் முன்னேறத் திட்டம் தீட்டுங்கள்! இக்கோஷம் கார்ல்மார்க்சும் பிரடரிக் எங்கல்சும் எழுதிய மூலதனம் நூலின் இறுதி வாசகமான **உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், போராடுங்கள், உரிமை பெறுங்கள்** என்பதன் மாற்று வடிவமே. சில ஆயிரம் தோழர்களின் துணையோடு பலகோடி மக்களின் ரஷியாவை லெனின்பிரபு கைக்கொள்ள முடிந்தது ஏன்? நம்பிக்கை, நன்னம்பிக்கை, தன்னம்பிக்கை, தளராத நம்பிக்கை. இக்கூற்று ரஷ்யப்புரட்சி பற்றிய நாவலாசிரியரின் மதிப்பீடு எனலாம். அதேபோன்று தமிழரும் இயங்கவேண்டுமென்று விரும்பியுள்ளார். தமிழ்இனம் ஒன்றே மான வீரத்திற்கு உறைவிடம். "தமிழ்நாட்டை தமிழினத்தை மேம்படுத்துவது தமிழரின் கடமை. குஜராத்தியரும், வங்காளியரும் எப்படியோ போகட்டும்'' இப்படி ஒரு குரலில் கதாபாத்திரம் ஒலிக்கிறது. இது பொருத்தமற்ற வாசகமாக சேர்க்கப்பட்டுள்ளது. இன்றையத் தாழ்ந்த தமிழகத்திற்குக் காரணம் கடந்தகாலத்தில் மன்னர்களின் திறமற்ற செயல் என்றும் பதிவிடப்படுகிறது. மன்னர்களை இயக்கியவர்களை ஏன் மறந்தார் என்று தெரியவில்லை.

ப.சிங்காரம் எழுதிய இரு நாவல்களிலும் அணுகுமுறை வேறுபடுகிறது. முதல் நாவலான **கடலுக்கு அப்பால்** அக்காலத்தில் எழுதப்பட்ட நாவல்முறையின் பொதுப்போக்கிலிருந்து பெரிதும் மாறவில்லை. அதில் பணமும் காதலும் மையஇழை. பணத்தினை இழக்காமல் காதலை தியாகம் செய்யும் பாத்திரங்கள் இயக்கப்படுகின்றன. புயலிலே ஒரு தோணியின் கதைகட்டு **போரும் பொறுக்கித்தனமும்** என்று அமைகிறது. பாசிசப்போரே பொறுக்கித்தனத்தில் இருந்ததுதான் என்பதனை ஜப்பானியப் போர் வீரர்களின் இழிசெயல்களில் இருந்து அறியமுடிகிறது. பாண்டியன் எனும் கதாபாத்திரம்போல் ஒரு INA வீரர் இருந்திருப்பாரா? என்பது சந்தேகமே. விலாசினி என்ற கதாபாத்திரத்தினை உருவாக்கி அவரை இழிவான நடத்தையுள்ளவராகக் காட்டுவது தேவையற்றதாக அமைகிறது. நேதாஜியின் இறப்பு நாவலில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நாவல் நெடுக பண்பாட்டுக் கவலையும், மனப்புழுக்கமும், விரக்தியும் புடைப்பாகத்

தெரிகிறது. கடைசியாக அமைந்த சில அத்தியாயங்கள் வலிந்து சேர்க்கப்பட்டதோ என்ற நினைப்பினை ஏற்படுத்துகிறது. பலமுறை திருத்தி எழுதப்பட்டுள்ளதனை அறியமுடிகிறது. அச்சாவதற்கு முன் சிலரின் கருத்துகளைக் கேட்டு இந்நாவல் பொலிவூட்டப்பட்டிருக்கலாம். **புயலிலே ஒரு தோணி கரைசேரவில்லை.**

## VIII

இந்நாவலை கடல்சார் இலக்கியவகைக்குள் (maritime fiction) வைக்கலாம். இந்திய இலக்கியத்தில் மணிமேகலையும், இராமாயணமும் இவ்வகைக்குள் ஓரளவு வரும். 12 ஆம் நூற்றாண்டில் பட்டினத்தார் புலம்பலை இவ்வகைக்குள் வைப்பதற்கு எத்தனிக்கலாம். அப்பரின் **கோணேஸ்வரர்** மீதான பாடலையும் சேர்க்கலாம். மீனவர் தோழர்களின் அம்பா பாடல்களையும், ஏலேலோ சிங்கன் பாடல்களையும், ஐலேசா பாடல்களையும் இவ்வகைக்குள் வைக்கலாம். ஆங்கிலத்தில் கடந்த இருநூறு ஆண்டுகளாக கடல்சார் இலக்கியங்கள் எழுதப்படுகின்றன. இம்மாதிரியான நாவல்களை nautical fiction, maritime fiction என்று சுட்டுகின்றனர். 1770 இல் முதன்முதலில் **அரேபிய இரவுகள்** எனும் கதைத்தொகுப்பில் ஒன்றான சிந்துபாத்தின் ஏழாவது கடற்பயணம் சுவாரசியமான கதையமைப்பு கொண்டது. 1882 இல் Robert Louis Stevension என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட **புதையல் தீவு** (Treasure Island) என்ற நாவல் இந்நாவல் வரிசையில் மிக முக்கியமானது. 1903 இல் வெளியிடப்பட்ட Riddle of the Sands என்ற நாவல் மிகவும் புகழ் பெற்றது. 1951இல் Ernest Hemingway (1899-1961) எழுதிய The Old Man and the Sea என்ற நாவல் குறிப்பிடத்தக்க Maritime fiction இதுபோன்று பல நாவல்கள் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நாவல்களின் விவரணைகளில் வரும் கடல்பரப்பு பற்றிய கதாபாத்திரங்களின் உரையாடல்கள் மிக முக்கியமானவை. ஆனால், அது போன்ற வருணனைகள் புயலிலே ஒரு தோணியில் இல்லை.

1962 இல் நிகழ்ந்த இந்தோ-சீனப்போரும் அதன் விளைவுகளும் இந்நாவலை எழுதுவதற்கு உந்துதல் ஏற்படுத்தியிருக்க வேண்டும். இக்காலக்கட்டத்தில்தான் **பார்த்தால் பசிதீரும்** (1962) என்ற திரைப்படம் வெளிவந்தது. இப்படத்தின் கதைக்கரு இரண்டாம் உலகப்போர். கண்ணதாசன் (1927-1981) **இரத்தத்திலகம்** (1963)என்ற திரைப்படத்தினைத் தயாரித்து வெளியிட்டார். இதன் கதைக்கரு இந்திய-சீனப்போர். இதில் சில போர்க்காட்சிகள் காட்டப்படும். அதற்குமுன்பு **அந்தநாள்** (1954) என்றொரு படம் வெளியிடப்பட்டது. இப்படத்தின் கதைக்கரு இரண்டாம் உலகப்போர். இருபடங்களிலும் கதாநாயகன் சுட்டுக்கொல்லப்பட்டான். இரத்தத்திலகத்தில் தியாகியாகக் காட்டப்பட்டான். அவ்விரு படங்களிலுமே கதாநாயகனாக நடித்தவர் சிவாஜிகணேசன் (1928-2001). **பார்த்தால் பசிதீரும்** (1962) படத்திலும் அவரே முதன்மைக் கதாநாயகன். அப்படத்தில் சிறுவனாக கமல்ஹாசன் இருவேடங்களில் நடித்திருப்பார்.

ஆங்கிலத்தில் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட நாவல்கள் போர்பற்றி எழுதப்பட்டுள்ளன. அவற்றை போர் பற்றிய நாவல்கள், போர் தொடர்பான கடிதப்போக்குவரத்து நாவல்கள், கடற்போர் நாவல்கள் என்று வரையறுக்கலாம். போரினை அடிப்படையாக வைத்து மிகச்சிறப்பான படம் ஒன்றினை ஜப்பானின் அகிராகுரோசோவா (1910-1998) சமூகப்பொருளியல் பின்னணியில் வெளியிட்டார். பின்னாட்களில் எடுக்கப்பட்ட ஹாலிவுட் படங்களுக்கு அதுவே காட்சியமைப்பிற்கும் வண்ணக்காட்சிகளை சிறப்பாகப் பயன்படுத்துவதற்கும் முன்மாதிரியாக அமைந்தது.


## IX

**ஒரு சொல்**


ப.சிங்காரத்தின் **புயலிலே ஒரு தோணி** சென்ற நூற்றாண்டின் தமிழ்நாவல் இலக்கியப்பரப்பில் புதுவகையான ஒரு வரவு. **போர், பொருள், போகம்** மூன்றினையும் கண்டிக்கிறவிதமாக அமையும் இந்நாவல் சாதிகடந்த தமிழர் ஒற்றுமையினைப் பரிந்துரைக்கிறது. தாய் நிலத்திலும் புலம்பெயர் நிலத்திலும் தமிழரின் அழுக்கான நடவடிக்கைகள் விமர்சிக்கப்படுகின்றன. தற்பெருமை பேசும் மனோபாவத்தினைத் தவிர்த்து தமிழர் நற்பண்பாட்டினைப் பின்பற்றவேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது. தேசியவாதமும், அதற்குள் அடங்கிய தமிழ்த் தேசியவாதமும் உள்ளீட்டுக் கருத்தாக வைக்கப்படுகிறது. விலாசினி, சங்குண்ணிமேனன், கிளினிக் நர்ஸ் போன்ற பாத்திரங்கள் வலிந்து சேர்க்கப்பட்டு நெருடலை உண்டாக்குகிறது. இது நாவலின் தரத்தினை பின்னுக்கு இழுக்கிறது. முதன்மைப் பாத்திரமான பாண்டியனின் நடவடிக்கைகள் தமிழ்வாணன் உருவாக்கிய **சங்கர்லாலை** நினைவூட்டுகிறது. போரினை காட்சிப்படுத்துதலில் போதிய துலக்கமில்லை.

●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் மார்க்ஸிய வெளியீடுகள்





**கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை**
**கார்ல் மார்க்ஸ், பிரெடெரிக் எங்கெல்ஸ்**
தமிழாக்கம், அறிமுகவுரை, விளக்கக் குறிப்புகள்
எஸ்.வி.ராஜதுரை
₹ 550/-




**மார்க்ஸ் - எங்கெல்ஸ்**
**தேர்வு நூல்கள் மற்றும் வாழ்க்கை வரலாறுகள்**
20 தொகுதிகள்
பதிப்பாசிரியர் - ந.முத்துமோகன்
₹ 5000/-





**மூலதனம்**
**கார்ல் மார்க்ஸ்**
மூன்று பாகங்களும் சேர்ந்து ஐந்து புத்தகங்களும்
₹ 2000/-




**கார்ல் மார்க்ஸ் 200**
பதிப்பாசிரியர் - எஸ்.வி.ராஜதுரை
₹ 675/-

# நியூ செஞ்சுரியின் புதிய நூல்கள்





**சிலுவைராஜ் சரித்திரம்**
ராஜ் கௌதமன்
₹ 560/-




**நெசவாளர்களும் துணிவணிகர்களும்**
எஸ்.ஜெயசீல ஸ்டீபன்
தமிழில்: ந.அதியமான்
₹ 210/-





**யுவான் வம்ச நீலம் மற்றும் வெள்ளை நிறப் பீங்கான்**
ச்சென் சியேஜுன்
தமிழில்: இளந்தமிழ்
₹ 180/-




**வரலாற்று நோக்கில் மங்கலதேவி கண்ணகி கோட்டம்**
கவிஞர் இரா.கணபதிராசன் (எ) தமிழாதன்
₹ 100/-




**தமிழக கிராமிய விளையாட்டுகள்**
குமரி ஆதவன்
₹ 230/-





**பயணம் திறந்த இதயம்**
டாக்டர் இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப.,
₹ 155/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கட்டுரை

# தங்கப்பாவின் இயற்கைப்பாடல்கள் - ஓர் இலட்சியக்கனவு



பாவண்ணன்

ஒருநாள் நானும் நண்பரும் பாரதியாரின் 'பிள்ளைப் பிராயத்திலே' பாடலைப் பற்றிப் பேசிக்கொண்டே நடந்தோம். கல்வியின் மீதான நாட்டமும் பற்றும்தான் அக்கவிதையின் பேசுபொருள். பாரதியார் அதை சரஸ்வதி காதலாக மாற்றுகிறார். பிள்ளைப் பருவத்தில் கல்விமீது கொண்ட ஈடுபாட்டை பெண்மையின் மீது உருவாகும் மையலாக உருமாற்றி, ஒவ்வொரு கட்டத்திலும் பெருகிக்கொண்டே சென்ற விருப்பங்களை அடுக்கிக்கொண்டே செல்கிறார். அந்த அழகியல் அடுக்கு பாரதியாருக்கு கைவந்த கலை. சரஸ்வதி காதலைப்போலவே லட்சுமி காதலையும் காளி காதலையும் முன்வைத்து மூன்று பகுதிகளாக அக்கவிதையை பாரதியார் எழுதியிருக்கிறார். ஒவ்வொரு பகுதியையும் விரிவாக எடுத்துரைத்த பிறகு, "தமிழ்மொழிக்கு பாரதியார் வழங்கிய சிறப்புக்கொடை என அந்த அழகியல் அடுக்குமுறையைச் சொல்லமுடியுமா?" என்று கேட்டார். முடியும் என்று நான் பதில் சொன்னேன். பாரதியார் மட்டுமல்ல, மிகச்சிறந்த ஒவ்வொரு கவிஞரும் தம் கவிதைமொழியில் தமக்கே உரிய தனித்தன்மை மிக்க அழகியல் அடுக்குமுறையை முன்வைத்திருக்கிறார்கள். அந்த அழகியல் அடுக்குமுறையே அவர்களுடைய அடையாளமாக காலம்காலமாக நிலைத்திருக்கிறது. அழகியல் அடுக்குமுறை வழியாக காலம்தோறும் மொழியின் அழகியல் எல்லைகள் விரிவடைந்தபடி செல்கின்றன.

"ஆடையின்றி வாடையின் மெலிந்து கையது கொண்டு மெய்யது பொத்தி காலது கொண்டு மேலது தழீஇப் பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும் ஏழையாளனைக் கண்டனம் எனுமே" என்ற அழகியல் அடுக்குமுறை வழியாகவே சத்திமுத்தப்புலவரின் நாரைவிடு தூது இன்றளவும் நம் நினைவில் நீடித்திருக்கிறது. "வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலும் கீழும் எள்ளிருக்கும் இடமின்றி உயிரிருக்கும் இடம்நாடி இழைத்தவாறோ கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்த காதல் உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி" என்பதுபோன்ற நூற்றுக்கணக்கான அழகியல் அடுக்குமுறை வழியாகவே கம்பரின் கவியாளுமை நினைக்கப்படுகிறது. கானல் வரி பாடல்களிலும் ஆய்ச்சியர் குரவை பாடல்களிலும்

வழக்குரை காதையிலும் காணப்படும் அழகியல் அடுக்குமுறை படிக்கும்தோறும் மெய்சிலிர்க்க வைக்கிறது.

அழகியல் அடுக்குமுறைகளின் வழியாக நம் காலத்தில் வாழ்ந்து மறைந்த மகத்தான மரபுக்கவிஞர் தங்கப்பா. அவர் இயற்கையாற்றுப்படை எழுதி வெளிவந்த காலத்திலேயே மரபுக் கவிதையுலகில் அவருடைய இடம் தனித்தன்மையுடன் வரையறுக்கப்பட்டுவிட்டது. செவ்வியல் இலக்கியங்களில் மனம் தோய்ந்தவர் அவர். தொடக்கக்காலத்தில் அதன் செல்வாக்கு அவருடைய படைப்புகளில் தெளிவாகவே காணக்கிடைக்கிறது. மொழிபுமுறையில் மட்டுமே அதன் சாயல் தெரிகிறது. ஆனால் கவித்தருணங்கள் அவருக்கே உரியவை. அடுத்தடுத்து வந்த தொகுப்புகளில் அந்தச் சாயலையும் அவர் முற்றிலும் கடந்துவிட்டார். அவருடைய கவிமொழி தனித்தன்மையுடன் வெளிப்படத் தொடங்கியது. தன் அழகியல் அடுக்குமுறையால் தன் கவிமொழியை மேலும் மேலும் செழுமைப்படுத்தியபடியே சென்றார் தங்கப்பா.

அவருடைய பெரும்பாலான கவிதைகளை இரண்டு பெரும்பிரிவுகளாக வகுத்துக்கொள்ளலாம் என்று தோன்றுகிறது. ஒரு பிரிவில் அவருடைய கண்கள் கண்டெடுத்த அபூர்வமான காட்சிச் சித்தரிப்புகள். அழகும் கற்பனையும் கொண்டவை. இரண்டாவது பிரிவில் அவருடைய ஏக்கம், கனவு, வேட்கை, துயரம், சலிப்பு, சீற்றம் என்பவைபோன்ற ஆழ்மன உணர்வுகளின் பதிவுகள், லயம் மிக்க சொல்லிணைவுகளும் வேகமும் கொண்டவை. இரு பிரிவுகளிலும் மையம் வேறுபடுகிறதே தவிர, பாடலின் விசையில் வேறுபாடில்லை. அழகியல் அடுக்குகளே அற்ற கவிதையில்கூட விசையில் குறைவில்லை

அழகியல் அடுக்குமுறை ஒரு பாட்டுத் தருணத்தை மேலும் மேலும் பொலிவுறச் செய்கிறது. மேலும் மேலும் கூர்மைகொள்ளச் செய்கிறது. தங்கத்தை உருக்கி பளிச்சென ஒளிகொள்ளும் நகைகளாக மாற்றுகிறது. ஒவ்வொரு அடுக்குமுறையின்போதும் மொழி தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்கிறது.

அடிப்படையில், ஒரு மொழிக்கு, அதற்கேயுரிய தர்க்கக் கட்டமைப்பு உண்டு. ஆனால் அழகியல் அடுக்குமுறை எவ்விதத்திலும் அந்தத் தர்க்கக் கட்டமைப்புக்கு உட்பட்டதல்ல. மாறாக, அழகியலுக்கே உரிய தர்க்கமுறைக்கு மட்டுமே அந்த அடுக்குமுறை கட்டுப்பட்டதாகும்.

தங்கப்பாவின் ‘உன்னை நிரப்பிவைப்பேன்’ என்னும் கவிதையிலிருந்து நாம் தொடங்கலாம்.

**மண்ணில் கிடக்குமோர் சுள்ளியை நான் ஒரு**
**வானவில் ஆக்கிவைப்பேன் - உன்றன்**
**கண்ணில் உறுத்திடும் காட்சியை மின்னும்**
**கனவுகளாய்ப் படைப்பேன்**
**புல்லின் நுனிப்பனி தன்னை அடுக்கியே**
**பொற்கம்பியில் தொடுப்பேன் - கருங்**
**கல்லினை காலில் மிதிப்பவர் ஆயினும்**
**கண்டு தொழ வடிப்பேன்**
**கன்னங் கருங்கரித் துண்டையும் பொன்னின்**
**கனற்பிழம்பு ஆக்கிவைப்பேன் - ஒரு**
**சின்னஞ்சிறு சுண்ணக்கட்டியுள் ஆயிரம்**
**சித்திரம் காட்டி நிற்பேன்**
**தேங்கு தெருப்புனல் நான் அள்ளித் தந்திடின்**
**தேன்சுவை போல் இனிக்கும் - ஒரு**
**மூங்கைக் குரல் கருங்காக்கையும் என் கையில்**
**முல்லையம் பண்மிழற்றும்**
**புழுதியை அள்ளிமுன் நீட்டுவேன்; சந்தனம்**
**போல மணங்கமழும் - நீ**
**பழுதென வீசி எறிந்ததை நான் தொட**
**பளபளப்பாய்த் திகழும்**
**மண்ணில் நெளியும் உன் உள்ளம் அளித்திடு**
**வான்சுடர் ஏற்றிவைப்பேன் - அன்பின்**
**உண்மை கமழ்தெய்வப் பண்கள் ததும்பிட**
**உன்னை நிரப்பிவைப்பேன்**

தங்கப்பாவின் கவிதைகளில் முதன்மையான கவிதை இது. இதில் உள்ள தர்க்கம் நடைமுறைச் சாத்தியத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. புத்தம் புதிய அழகியல் அடுக்குமுறையால் கனவுநிலையில் அருவியென தானாகப் பொங்கிப் பெருகும் தர்க்கம். கனவின் வழியாக அவர் கண்டடையும் தர்க்கம். கொதிநிலையில் பாத்திரத்திலிருந்து பொங்கி வழியும் பாலென கிட்டத்தட்ட ஒரு பித்துநிலையில் ஒவ்வொரு சொல்லும் பொங்கி வழிகிறது. அவருடைய தர்க்கம் குழந்தைமையும் நம்பிக்கையும் கலந்தது.

ஒரு நாட்டுப்புறக்கதை நினைவுக்கு வருகிறது. ஓர் ஊரில் மாடு மேய்க்கிற ஒரு சிறுவன் வசிக்கிறான். ஒவ்வொரு நாளும் மாடுகளை அழைத்துச் சென்று ஏரிக்கரையோரம் மேயவிட்ட பிறகு புல்வெளியில் விளையாடி பொழுதுபோக்குவான். மரங்களில் ஏறி அமர்ந்து வானத்தையும் மேகத்தையும் வேடிக்கை பார்ப்பான். ஏராளமான கிளிகள் பறந்துவந்து அமரும் இடம் அது. ஒரு இலையைத் தொடுவதுபோல அவன் ஒவ்வொரு கிளியையும் தொட்டு வருடிக் கொடுப்பான். கிளிகளும் அவனை ஒரு மனித உயிராகவே நினைப்பதில்லை. மரத்தில்

உள்ள கிளைகளில் ஒரு கிளையாகவே அவனை நினைத்து, அவன் தலைமீதும் தோள்மீதும் சுதந்திரமாக உட்கார்ந்து விளையாடும். கிளிகளுக்கும் அவனுக்கும் இடையில் நல்ல இணக்கமானதொரு உறவு நிலவியது. ஊரே அதைப் பார்த்து ஆச்சரியம் கொள்கிறது.

ஒருநாள் அந்த ஊரில் வசிக்கும் பணக்காரன் அச்சிறுவனை அழைத்துவரச் செய்கிறான். பணக்காரனுடைய மகள் ஒரு கிளி வளர்க்கவேண்டும் என ஆசைகொள்கிறாள். அவளுக்காக ஒரு கிளியைப் பிடித்துவந்து கொடுக்குமாறு பணக்காரன் சிறுவனிடம் கட்டளையிடுகிறான். பணக்காரனின் ஆதரவில்லாமல் யாரும் அந்த ஊரில் வசிக்கமுடியாது என்பதால் ஒருவரும் அவன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு சொல்வதே இல்லை. பணக்காரனின் கட்டளை சிறுவனை ஒரு நெருக்கடியில் தள்ளிவிடுகிறது. அது முறையல்ல என்றும், தன்னால் முடியாது என்றும் எவ்வளவோ எடுத்துச் சொல்லி மன்றாடுகிறான் சிறுவன். ஆனால் பணக்காரன் தனக்கு கிளி வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருக்கிறான். அடுத்த நாள் மாலை கிளியோடு வந்து சந்திக்கும்படி மீண்டும் கட்டளையிட்டு, அவனை வெளியே அனுப்பிவிடுகிறான். இரவு முழுதும் தூக்கமின்றி தவிக்கிறான் சிறுவன். தன் சொந்த நலத்துக்காக கிளியைப் பிடிப்பது என்பதையே அவனால் ஏற்றுக்கொள்ளவே முடியவில்லை.

மறுநாள் காலை மாடுகளை ஓட்டிக்கொண்டு ஏரிக்கரைக்குச் செல்லும்போது அவன் மனம் குழம்பித் தவிக்கிறது. தன் இயலாமையை நினைத்து மனம் குமைந்தபடி அன்று மரக்கிளையில் உட்கார்ந்து வானத்தைப் பார்க்கிறான் அவன். நீண்ட நேரத்துக்குப் பிறகு ஒரு பெரிய கிளிக்கூட்டம் அம்மரத்தை நோக்கி வழக்கம்போல இறங்கி வருகிறது. ஏதாவது ஒரு கிளியுடன் இன்று வீடு திரும்பவேண்டும் என்ற எண்ணத்துடன் அவன் கிளிக்கூட்டத்தை வரவேற்றபடி கை நீட்டுகிறான். அவனை நோக்கிவந்த கிளிக்கூட்டம் ஏதிர்பாராத ஒரு கணத்தில் சட்டென வட்டமடித்துத் திரும்பிப் பறந்து பக்கத்தில் இருந்த மரத்துக்குச் சென்று அமர்கின்றன. ஒரு கிளிகூட அவனுக்கு அருகில் வரவில்லை. அவன் அமர்ந்திருந்த மரத்தின் பக்கம் கூட வரவில்லை. அவன் மனத்தில் படிந்துவிட்ட எண்ணத்தை அவை எப்படியோ உணர்ந்து திசைமாறிச் சென்றுவிடுகின்றன.


சிறுவனுக்கும் கிளிகளுக்கும் இடையில் உருவான நெருக்கத்துக்குக் காரணம் களங்கமின்மை. அது அழியும்போது நெருக்கமும் அழிந்துவிடுகிறது. நிரூபணத்துக்கு அப்பாற்பட்டது இந்த உறவின் தர்க்கம். ஆனால் வாய்மொழிக்கதைகளில் அமைந்திருக்கும் இந்தத் தர்க்கத்தின் வழியாகவே மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொள்ளமுடியும். பண்பாட்டையும் வரலாற்றையும் புரிந்துகொள்வதற்கும்கூட இந்த அறிவு அவசியம். வாய்மொழிக்கதைகளில் உள்ள இந்தத் தர்க்கத்தை கவிஞர்கள் தம் கவிதைகளில் அமைக்கும்போது, ஒரு புதிய அழகியல் பிறக்கிறது. அந்த அழகியலால் மொழியின் அழகும் வளமும் பெருகுகின்றன. தேரை நகர்த்துவதுபோல, மொழியின் அடுத்தடுத்த எல்லைகளை நோக்கி இந்த அழகியல் நகர்த்திக்கொண்டே இருக்கிறது.

இப்போது தங்கப்பாவின் கவிதைக்கு மீண்டும் வருவோம். சுள்ளியை வானவில்லாக்கும் தர்க்கமும் பனித்துளிகளை பொன்மாலையாக்கும் தர்க்கமும் களங்கமின்மையின்மீது கட்டமைக்கப்பட்டவை. உள்ளத்தில் களங்கமின்மையை - அதாவது பனிபோன்ற தூய்மையை - தூய்மைமிக்க அன்பின் ஊற்றை அடையாளம் காட்டுகிறார் தங்கப்பா. ஒருவருடைய நெஞ்சிலும் எண்ணத்திலும் அந்த ஊற்றுநீரைப் பெருகச் செய்து நிரப்பிவிடமுடியும் என்பது தங்கப்பாவின் ஆழ்மன நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் மீது அழுத்தமாக கால்பதித்தபடி ‘உன்னை நிரப்பிவைப்பேன்’ என்று மொழிகிறார் தங்கப்பா. களங்கமின்மையை நிரப்பிக்கொள்ளும் சமூகமே தங்கப்பாவின் ஆழ்மனக்கனவு.

களங்கமின்மையின் அடையாளமாகவே இயற்கையைக் கருதுகிறார் தங்கப்பா. தன் கவிதைகளில் அவர் இயற்கைக்காட்சிகளை முன்வைக்கும்போதெல்லாம் ஒரு கோணத்தில் களங்கமின்மையையே முன்வைக்கிறார் என்றே சொல்லவேண்டும். இயற்கையில் தோய்தல் என்பதை, களங்கங்களை உதறி விடுதலை அடைவதாகும் என்றே அவர் நம்புகிறார். ‘இயற்கையின் அழைப்பு’ என்னும் கவிதையின் வழியாக தங்கப்பாவின் எண்ணத்தை நாம் உணரமுடியும்.

இயற்கை உன்னை அழைக்கவில்லையா – தம்பி
இயற்கை உன்னை அழைக்கவில்லையா
மயற்கை மிகும் கொள்கைகளில்
மகிழ்ச்சி தேடி உழல்கின்றாயே

செயற்கையான பாகுபாடு
தெளிவில்லாத உள்ளம் மேடு
முயற்கொம்பு தேடுதல்போல் தம்பி – நீ
முட்டுகிறாய் எதைஎதையோ நம்பி



உள்ளத்தின் வரம்பை உடை
உண்மை காண வரம்பு தடை
வெள்ளத்தில் துளியாவாய் தம்பி - இயற்கை
விரிந்தபொழில், நீ அதிலோர் தும்பி

இயற்கையை வாழ்த்தும் பாடல்களும் இயற்கையின் ஆற்றலை விதந்தோதும் பாடல்களும் தொடக்க காலத்திலிருந்தே ஏராளமான கவிஞர்களால் எழுதப்பட்டு வருகின்றன. ஆற்றலும் கருணையும் ஒருங்கே கொண்டது இயற்கை. களங்கமில்லாத மனத்தோடு, அதன் மடியில் படுத்திருக்கும்போது, அது அன்னையென நம்மை அரவணைத்துக்கொள்கிறது. தந்திரங்கள் நிறைந்த மனத்தோடு இயற்கையைப் பார்க்கும்போது, நம் கண்களுக்கு கொள்ளையிட வைக்கப்பட்ட புதையலாக மாறித் தெரிகிறது. நாம் உடனே வேட்கையுடன் வேட்டையாடத் தொடங்குகிறோம். நாட்கள் கழியக்கழிய, நம் வேட்கையும் குறையவில்லை, வேட்டையையும் நிறுத்தமுடியவில்லை என்பதை மிகமிகத் தாமதமாகவே நாம் புரிந்துகொள்கிறோம். நம் உள்ளத்தில் தந்திரங்கள் எதையும் வளர்த்துக்கொள்ளாமல், வரம்புகள் எதையும் எழுப்பிக்கொள்ளாமல் இயற்கையான எழுச்சியோடும் இயற்கையான விசையோடும் இயற்கையான முறையில் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும். இந்த வாழ்க்கையை இன்பமயமானதாக வாழ அது ஒன்றே வழி. இவ்வுலகத்தில் உள்ள ஒவ்வொன்றையும் இனிமை மிக்கதாக உணரும் பார்வை நமக்கு அக்கணத்தில் வசப்படும்.

இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான்
இனிமையுடைத்து;
காற்றும் இனிது, நிலம் இனிது, நீர் இனிது, தீ
இனிது
ஞாயிறு நன்று; திங்களும் நன்று.வானத்துச்
சுடர்களெல்லாம்
மிக இனியன. மழை இனிது, மின்னல் இனிது.
இடி இனிது.

கடல் இனிது, மலை இனிது காடுநன்று.
ஆறுகள் இனியன.
உலோகமும், மரமும், செடியும், கொடியும்,
மலரும், காயும், கனியும் இனியன.

பறவைகள் இனியன. ஊர்வனவும் நல்லன,
விலங்குகளெல்லாம் இனியவை, நீர்
வாழ்வனவும் நல்லன.

மனிதர் மிகவும் இனியர். ஆண் நன்று. பெண்
இனிது. குழந்தை இன்பம். இளமை இனிது.
முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது.

என்னும் பாரதியாரின் கவிதையை ஒரு கணம் இங்கு நினைத்துக்கொள்ளலாம். பாரதியார் சுட்டிக்காட்டும் இந்த இனிமையை நோக்கியே தங்கப்பாவின் இயற்கை விருந்தும் இயற்கையாற்றுப் படையும் அமைந்திருக்கின்றன.

‘விழிக்கு விருந்து’ என்பது தங்கப்பாவின் இன்னொரு கவிதை.

விழிக்கு விருந்து செய்தாள் - அன்னை
விழிக்கு விருந்து செய்தாள்

மொழிக்குள் அடங்காக் காட்சித் தேனில்
மொய்க்கும் விழியும் நெஞ்சும் தேனி

உழக்குப் பிட்டு மலர்ந்தது போல
ஒளிசேர் பூவால் மலர்ந்தது காலை
கிழக்குத் தட்டில் கதிர்ப்பழத்தோடு
கிளறிப் படைத்தாள் அன்னை அன்போடு

அருவிச் சுவைநீர் நுரைபட ஆற்றி
ஆவி பருகத் தந்தாள் ஊற்றி

பருகும் போதில் மேலும் அன்போடு
பக்கம் நின்றாள் தென்றல் விசிறியோடு

அருவிக்கரையோரம் நின்று சூரிய உதயத்தைக் கண்டுகளிக்கும் காட்சிதான் கவிதை. ஈர்ப்பான சொல்லிணைவுகளோடு தங்கப்பா உருவாக்கி அளிக்கும் அழகியல் அடுக்கின் காரணமாக கவிதை மிகச்சிறந்த படைப்பாக மரிவிடுகிறது. அருவிக்காட்சியும் சூரியோதயக்காட்சியும் சங்ககாலத்திலிருந்து இன்றுவரைக்கும் தமிழ்க்கவிதைகளில் எண்ணற்ற விதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் எவைஎவை வாசகர்களின் நினைவுகளில் பதிந்து நிலைத்திருக்கின்றன என்று கேட்டுப் பார்த்தால் மரபுவழக்காக அல்லாமல் புத்தம்புதிய கோணங்களில் புத்தம்புதிய சொல்லிணைவுகளோடு காட்சிப்படுத்தும் கவிதைகள் மட்டுமே தொடர்ந்து கவிதை உரையாடல்களில் இடம்பெற்றுவருகின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடியும். தங்கப்பாவின் கவிதையில் ஆவியெழ ஆற்றப்படும் சுவைநீராக அருவியைக் காட்சிப்படுத்தும் வரியைப் படிக்கும்போதே, அதன் புதுமையும் தனித்துவமும் நம்மை ஈர்த்துவிடுகின்றன. தனிப்பெரும் மரபுக்கவிஞராக தங்கப்பா நிலைத்திருப்பதற்குக் காரணம் இந்தத் தனித்தன்மையே.

அருவியை சுவை நீராகப் பார்த்த தங்கப்பா இன்னொரு கவிதையில் திரும்பிப் பார்த்துச் சிரிக்கும் பெண்ணாக அருவியை முன்வைக்கிறார்.

குன்றெலாம் நடந்துலாவிக்
குழியெலாம் குனிந்து தேடி
மன்றலம் பொழிய நுழைந்து
மடியினில் மலர்பறித்து
சென்றுபோய் மூலையொன்றில்
சிரித்தனை, திரும்பிப் பார்த்தேன்
அன்றுநீ புகுந்தாய் நெஞ்சில்
வாழிநீ அருவிப் பெண்ணே

அருவி நின்றகோலத்தில் சிரிக்கவில்லை. பாய்ந்து நெளிந்து நெளிந்து செல்லும் கோலத்திலும் சிரிக்கவில்லை. வெட்கப்பட்டு ஓடோடிச் சென்று ஒரு திருப்பத்தில் திரும்பும் தருணத்தில் சிரிக்கிறது. சிரித்த காட்சி மனத்தில் உறைந்திருக்க, சிரித்த அருவியோ மறைந்துவிடுகிறது.

அள்ளூர் நன்முல்லையாரின் ஒரு குறுந்தொகைப் பாடல் அருவியை புன்னகை பூத்த நங்கையென சித்தரிக்கிறது.

அருவி வேங்கை பெருமலை நாடற்கு
யான் எவன் செய்கோ என்றி யான் அது
நகையென உணரேன் ஆயின்
என் ஆகுவை கொல் நன்னுதல் நீயே

அருவிக்கரையோரம் அழகாகப் பூத்திருக்கும் வேங்கை மரம் புன்னகை செய்கிறது. அதைப் பார்த்ததும் அருவியும் சிரிக்கிறது. ஒரு புன்னகையைப் பார்த்ததும் இன்னொரு புன்னகை தன்னிச்சையாக வெளிப்பட்டுவிடுகிறது. குறுந்தொகை காட்டும் பெண்ணைப்போலவே தங்கப்பா காட்டும் பெண்ணும் புன்னகை புரிகிறாள். ஆனால் இவள் அவளைவிட சற்றே குறும்பு மிகுந்தவள். அவன் புன்னகையைக் கண்டதும் அவளுக்கும் புன்னகைக்க வேண்டும்போல இருக்கிறது. ஆயினும் அந்த விருப்பத்தை கணநேரம் கட்டுப்படுத்திக்கொண்டு பாராமுகத்துடன் சிறிது தொலைவு செல்கிறாள். ஆயினும் ஒரு கணத்தில் விருப்பம் வென்றுவிட கட்டுப்பாட்டை உதறிவிட்டு ஒரு திருப்பத்தில் வெட்கத்தைக் கடந்து திரும்பிப் பார்த்து புன்னகைத்துவிடுகிறாள். சற்றே குழம்பவைத்து, தடுமாறவைத்து, சலிப்புறவைத்து இறுதிக்கணத்தில் தன் விருப்பத்தையும் மகிழ்ச்சியையும் சேர்த்து வெளிப்படுத்தும் விதமாக மாயப்புன்னகை செய்கிறாள். அருவியின் புன்னகை ஒருவகையில் களங்கமின்மையின் புன்னகை.

புன்னகையின் மற்றொரு அபூர்வமான தருணத்தை விவரிக்கும் இன்னொரு கவிதை 'மாமர மங்கை'.

வேனிலெனும் காதலனின் வரவைஎதிர் நோக்கி
விரிகிளைகள் மலர்குலுங்கிப் பசுமை எழில் பூத்து
மேனியிலே புதியஒளி, புதுநாணம் கமழ
மிளிர்கின்ற மாமரத்தின் செழுமையினைக்
கண்டேன்
வானத்துச் செந்நீலம் தோய்ந்தஇளந் தளிர்கள்
வயிரமணி விண்மீன்போல் பூங்கொத்து மின்ன
தேனிலவில் திகழ்கின்ற புதுக்கனவாய் மலர்ந்து
தென்றலிலே மணம்பரப்ப பூத்தஇள மங்கை

ஓவியத்தை மனக்கண்ணில் கொணர்ந்தபடி
மீண்டும்
ஒருநாளில் அத்திசையில் நான்நடந்தேன், அடடா
பூவிரித்த கிளைகளிலே பொற்கிழிகள் தூங்கும்
புதுப்பொலிவு நான்கண்டேன், மகவீன்ற மங்கை
மேவுநெல்லை முதுபெண்டிர் காதணிகள் போல
மின்திகழும் பொற்காய்கள் தாய்தழுவிக்கொள்ள
ஆர்வலனாம் இளவேனில் அணைந்தருகில்
நின்றான்.
ஆரணங்கும் எனைக்கண்டு நாணத்தால்
கவிழ்ந்தாள்.

இங்கே புன்னகைப்பது மாமர மங்கை. இளவேனிலையும் மாமரத்தையும் தலைவனும் தலைவியுமாக உருமாற்றி தங்கப்பா தீட்டிக் காட்டும் காட்சி நாம் நாள்தோறும் பார்க்கத் தவறுகிற பலநூறு காட்சிகளில் ஒன்று. ஆனால் தங்கப்பாவின் கவிதையைப் படித்த பிறகுதான் அபூர்வமான தருணத்தை எவ்வளவு அலட்சியமாகப் புறக்கணித்துவிட்டு வந்திருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட காட்சிகளையே தங்கப்பா இயற்கையின் அழைப்பு என்று முன்வைக்கிறார்.

இந்தப் பாடல்களின் வரிசையில் வைத்து கவனிக்கத்தக்க இன்னொரு கவிதை 'வானவில்'. கதிரவனும் மழையும் வானவில்லும் அந்தக் கவிதையில் புன்னகைக்கிறார்கள்.

**எழில்சிரிக்கும் செங்கதிரோன்**
**வான்ஓரம் நின்றிருந்தான்**
**மழைமங்கை அன்னவனின்**
**மாமன்மகள் அங்குவந்தாள்**
**கண்டாள்தன் காதலனை**
**கண்புதைத்தாள் நாணத்தால்**
**அன்பன் கதிர்க்கையால்**
**அவள்கையைத் தான்பிடித்தான்**
**பிடித்த கதிர்க்கையில்**
**பெண்ணின் வளைநழுவ**
**விடுத்து மறைந்துவிட்டாள்**
**விண்வில்தான் அந்தவளை**

மழையின் கையிலிருந்து நழுவிய வளையென வானவில்லைச் சித்தரிப்பது அழகான கற்பனை. கதிரவனின் ஆசைப்புன்னகை. மழைமங்கையின் நாணப்புன்னகை. இரண்டுக்கும் நடுவில் வானவில்லின் ஆனந்தப்புன்னகை. இதுதான் இயற்கையின் விருந்து.

'மழைத்தாய்' என்னும் கவிதையில் மழையின் புன்னகையைக்' காட்டுகிறார் தங்கப்பா. நீண்ட காலமாக வானமென்னும் சிறையில் அடைபட்டுக் கிடந்த மழைத்தாய் விடுதலை பெற்றதும் மண்மீது உள்ள மரம், செடி, கொடி, பயிர், குன்று என கண்ணில் பட்ட ஒவ்வொன்றையும் தொட்டுத்தொட்டு அன்பை வெளிப்படுத்தி புன்னகைத்தபடியே செல்கிறாள். அவள் விசையையும் விருப்பத்தையும் அழகாக அடுக்கிக் காட்டுகிறார் தங்கப்பா.

**வானச்சிறைக்குள் வலிந்து அடைபட்டு**
**மாதக் கணக்கில் மக்களைப் பிரிந்து, பின்**
**விடுதலை பெற்று விரைந்த பெருமழை**
**வாடி வதங்கி வான்பார்த்துக் கிடந்த**
**ஒவ்வொரு மகவாய் ஓடி அணைத்தது**
**பச்சைப் பயிர்களை உச்சி மோந்தது**
**புற்களை அன்பாய் நக்கிக் கொடுத்து**
**முத்தியும் கொஞ்சியும் முதுகைத் தடவியும்**
**பித்து மொழிகளைப் பேசித் தழுவியும்**
**செடிகொடி யாவையும் சிலிர்க்கச் செய்தது**
**வடியும் மகிழ்ச்சிக்கண்ணீர் பொழிதர**
**வன்பசி கொண்ட உயிர்க்கெலாம்**
**பன்மடி சுரந்து பாலூட்டிற்றே**

சிறையிலிருந்து பெற்ற விடுதலையைக் கொண்டாடுவதற்காகவே மழைத்தாயின் முகம் முதலில் புன்னகையை வெளிப்படுத்துகிறது. பிறகு, இத்தனைக் காலமும் பிரிந்திருந்த ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து மகிழ்ச்சியடைகிறது. பயிர்களைத் தொடுகிறது. புற்களைத் தழுவுகிறது. செடிகொடிகளைத் தீண்டி மகிழ்கிறது. ஒவ்வொரு தருணத்திலும் மழைத்தாயின் மகிழ்ச்சி பலமடங்காகப் பெருகியபடி செல்கிறது. பசியால் வாடிய உயிர்களுக்குப் பாலூட்டும்போது, அந்த மகிழ்ச்சி இன்னும் பல மடங்காக வளர்ந்துகொண்டே போகிறது. இது ஒரு நேரடிக் காட்சியின் நேரடி விளக்கம். மழைத்தாயின் விடுதலையை மன விடுதலை, எண்ணங்களின் சுமையிலிருந்து கிட்டும் விடுதலை, அறிந்ததினின்று பெறும் விடுதலை என வெவ்வேறு தளங்களுக்குப் பொருந்திப் போகும் வகையில் ஒரு படிமமாகப் பார்க்கும்போது இக்கவிதையில் பொருள் இன்னும் ஆழமுள்ளதாகிறது. அனைத்துத் தளைகளிலிருந்தும் விடுதலை பெற்ற மனத்தில் தாய்மையுணர்வன்றி வேறெந்த உணர்வுக்கும் இடமில்லை. வழங்குதலன்றி வேறெதையும் அறியாதது தாய்மை. பன்மடி சுரந்து பாலூட்டுவது அத்தாய்மை.

வானத்தின் புன்னகையைச் சித்தரிக்கும் ஒரு கவிதை 'மலைமேல் மாலைவானம்'.

**மைப்புட்டில் எடுத்துவந்த அழகு நங்கை**
**வானத்தில் கவிழ்த்துவிட்டாள், பதறி பின்னர்**
**கைப்படவே அள்ளிவைத்த சுவடுகள்தாம்**
**கறைகறையாய் கருமுகில்கள், எடுத்தவண்ணம்**
**அப்பிவைத்து குழைக்கும்கைப் பலகையன்றோ**
**அடிவானம்! பலவண்ணச் சிதறலாலே**
**எப்புறத்தும் வண்ணஒளி ஓவியங்கள்**
**எழில்மகளின் கலைக்கூடம், மாலைவானம்**

கணந்தோறும் நிறம் மாறியபடி இருக்கும் அந்தி வானம். செம்மை ஏறியபடியே இருக்கிறது. அதன் அருகிலேயே திட்டுத்திட்டாக கருமுகில்கள் நிறைந்திருக்கின்றன. நிறங்களில் கலவையால் ஒருகணம் அடிவானமே ஓர் ஓவியக்கூடமாக

மாறிப் புன்னகைக்கிறது. இதுதான் கண்ணெதிரில் நிகழும் காட்சி. ஆனால் தங்கப்பா இதை ஒரு நாடகத் தருணமாக மாற்றுகிறார். ஓவியனொருவன் திரைச்சீலையின் முன் நின்று ஓவியம் தீட்டுகிறான். அவன் அருகில் அவன் பல்வேறு வண்ணங்களைக் குழைத்த வண்ணப்பலகை உள்ளது. வண்ணங்களைக் குழைத்ததால் உருவான பல்வேறு வட்டங்கள் நிறங்களின் கலவையாகக் காட்சியளிக்கிறது. ஓவியனின் தேவைக்காக கரிய வண்ணப் புட்டியை எங்கிருந்தோ எடுத்துவருகிறாள் ஓர் அழகி. அது கைதவறி விழுந்து உடைந்துவிட, வண்ணம் சிதறி எங்கெங்கும் கரிய வட்டங்கள் உருவாகின்றன. ஏற்கெனவே உள்ள நிறக்கலவையோடு கரியநிறமும் இணைந்துகொள்கிறது. இறுதி வரியில் உள்ள ‘எழில்மகளின் கலைக்கூடம்’ என்னும் சித்தரிப்பு மிகமுக்கியமானது. ஒரு கலைக்கூடத்தில் நிறபேதம் என்பதே இல்லை. அங்கு அனைத்தும் நிறங்களே. கருமையும் நிறமே. செம்மையும் நிறமே. கலைக்கூடம் என்னும் படிமம் இந்த உலகம் என்னும் கலைக்கூடம், குடும்ப அமைப்பு என்பது ஒரு கலைக்கூடம், ஓர் அமைப்பு என்பது ஒரு கலைக்கூடம் என பொருளை விரிவாக்கும்தோறும், அது உணர்த்தும் உண்மைகள் ஏராளம். இறுதியில் அன்பால் மட்டுமேயான ஓர் உலகத்தை அது தொட்டு நிற்பதை உணரமுடியும். தடுமாறியதால் கவிழ்ந்துவிட்ட மைப்புட்டில் என்னும் வாக்கியத்தைக் கவனிக்கவேண்டும். தவறுகள் அனைத்தும் தடுமாற்றத்தாலேயே நிகழ்கின்றன. தவறுகள் ஒருபோதும் குற்றங்கள் அல்ல.

அரைநூற்றாண்டு காலமாக தன் இயற்கைப்பாடல்கள் புதுப்புது அழகியல் அடுக்குகள் வழியாக, களங்கமற்ற மனம் அல்லது களங்கமற்ற சமூகம் பற்றிய கனவுகளையே முன்வைத்தவர் தங்கப்பா. எழுத்தில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் அக்கனவோடு வாழ்ந்தவர் அவர். அது நடைமுறைச் சாத்தியமற்ற கனவு என உடனடியாக ஒரு குரல் எழக்கூடும். ஆனால் அப்படியொரு உலகம் அமைந்தால், நாம் மறுத்துவிடுவோமா, என்ன? தங்கப்பாவின் கனவு ஓர் இலட்சியக்கனவு. உலகக் கவிஞர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இலட்சியக்கனவோடு வாழ்ந்தவர்களே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ●




நேஷனல் புக் ட்ரஸ்ட் ஆப் இந்தியா மற்றும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி).லிட்., இணைந்து 25.02.2020 (செவ்வாய்க்கிழமை), அன்று கீழவீதி காமராஜ் பவன் அருகில், திருவாரூரில் புத்தக கண்காட்சி தொடங்கப்பட்டது. புத்தக கண்காட்சியை திருவாரூர் மாவட்ட ஆட்சியர், மேன்மைமிகு த.ஆனந்த் I.A.S., அவர்கள் திறந்து வைத்தார். நாகை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம்.செல்வராஜ் B.A. அவர்கள் முன்னிலை வகித்தார். திரு.பி.எஸ்.மாசிலாமணி, திரு. இரா.அறிவழகன், திரு. பெஜிலாஃபெரோஸ், திரு. சி.ஏ.பாலு, திரு. மா.ஆசைத்தம்பி, திரு. மு.சந்திரசேகரன், திரு. S.குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.


# நியூ செஞ்சுரியின் வெளியீடாக...
# ஆ.சிவசுப்பிரமணியன் நூல்கள்




₹ 250/-




₹ 75/-





₹ 150/-




₹ 170/-





₹ 145/-





₹ 210/-




₹ 135/-





₹ 200/-




₹ 60/-

# நியூ செஞ்சுரியின்
# ராஜ் கௌதமன் வெளியீடுகள்




**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.

☎: 044-26251968, 26258410, 48601884 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in



நூல் மதிப்புரை

# ஆழ்ந்த வாசிப்பைக் கோரும் ஆய்வுநூல்

முனைவர் ம.திருமலை


நூற்றாண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட தமிழ்ச் சிறுகதை இலக்கிய வகைக்கு அணி கூட்டும் மேலும் ஓர் ஆய்வு நூல் தி.சு.நடராசனின் "தமிழில் சிறுகதையெனும் வரைபடம்." புதிய தலைமுறைப் படைப்பாளிகளுக்கும் வாசகர்களுக்கும் தான் எவ்விதத்திலும் சளைத்தவனல்ல என்று தி.சு.நடராசன் இந்நூலின் மூலம் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்நூலில், தமிழ்ச் சிறுகதை இலக்கிய வகையின் குறுக்குவெட்டுத் தோற்றம் எவ்வாரிருக்கிறது என்று காட்டுவதற்கு முயற்சி செய்திருக்கிறார். இந்நூல் ஒரே சமயத்தில் பழைய தலைமுறையினருக்கும் புதிய தலைமுறை வாசகர்களுக்கும் தகவல் களஞ்சியமாக உதவக்கூடும்; ஒரு சிறுகதையினை எவ்வாறு வாசிக்க வேண்டும் என்றும் இந்நூல் வழிகாட்டுவதாக எனக்குத் தோன்றுகிறது.

இலக்கியத் திறனாய்வின் தொடக்க காலங்களில் அதிகம் பேசப்பட்ட விம்சாட் என்னும் அறிஞர் "Affective Fallacy" என்று ஒரு முறையியலைக் கூறுவார்; இதனைப் பேராசிரியர் க.கைலாசபதி "மகிழ்ச்சி தரும் போலி நியாயம்" என்று குறிப்பிட்டுள்ளார். இம்முறையியலில், ஒரு கலைப்படைப்பு வாசகனின் மனத்தில் ஏற்படுத்துகின்ற உணர்ச்சி விளைவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதாகும். முற்காலங்களில் நாடகங்கள், அரங்கில் அமர்ந்திருந்த பார்வையாளர்களின் கரவொலி, கண்ணீர் விசும்பல்கள் ஆகியவற்றைக் கொண்டு அளவிடப்பெற்றன என்று இலக்கியக் கொள்கை நூலாசிரியர்கள் ரெனிவெல்லக், ஆஸ்டின் வர்ரென் ஆகியோர் குறிப்பிடுவதுண்டு. இது ஒரு முறை.

பிரிதொரு முறை "Intentional Fallacy" அதாவது "உள்நோக்கப் போலி நியாயம்" என்பதாகும். இதன்படி இலக்கியப் படைப்புக்களின் தோற்றங்களில் ஆசிரியனின் வாழ்க்கை நிகழ்வுகளின் எதிரொலி/பிரதிபலிப்பு இருக்கும் என்பது வற்புறுத்தப்படும். பேராசிரியர் தி.சு.நடராசனின் இந்நூல் ஓரளவிற்கு மகிழ்ச்சி தரும் போலி நியாய

முறைப்படி - அதாவது மனத்தில் படைப்புக்கள் ஏற்படுத்திய தாக்கத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது எனலாம்; ஆனாலும் இந்நூல், முழுவதுமாக மனப்பதிவுகளை மட்டும் நம்பியிருக்கவில்லை என்பது உறுதி! சிறுகதைகளைத் தழுவித் தழுவி ஆராய்ந்து அவற்றின் ஆழத்தில் தங்கியிருக்கும் கவியுள்ளத்தினை இந்நூலாசிரியரும், காணத்தவறவில்லை. எனவே இது ஆரவாரமாகக் கருத்துக்களை முன்வைக்கும் நூலல்ல; ஆழமான வாசிப்பைக் கோரி நிற்கும் நூல் என்பது என் துணிபு.

இந்நூலின் முதற்பகுதி ‘கதையெனும் பேழை’ என்பதாகும். இதில் கதை எழுதுதல் என்பது அனைவராலும் செய்யக்கூடிய பணி என்பதை விளக்குகிறார். பாட்ரிஸா ஹேம்பில் என்பவர் எழுதிய ஒரு நடைச் சித்திரத்தை எடுத்துக்காட்டி, ஒவ்வொருவரிடமும் உள்ள ஒரு நினைவுப் பேழையிலிருந்து சிறுகதைகளை வெளியே கொணரமுடியும் என்று தி.சு.நடராசன் கூறுவது




தமிழில் சிறுகதையெனும் வரைபடம்
தி.சு.நடராசன் / நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி.லிட்.,
சென்னை / விலை: ரூ.270/-

புதுமையானது. “சரியான தூண்டலும் சரியான தருணமும் வந்து போகிறபோது அவை சொல்லு சொல்லு என்று படைப்பாற்றல் உடையவனை இடிக்கின்றன” என்று தீர்வு கூறுகின்றார். வாழ்க்கை அனுபவங்களே இலக்கியப் படைப்புக்களாக வெளிப்படுகின்றன என்பது அனைவருக்கும் தெரிந்த செய்திதான்! எனினும் அதனைப் பேராசிரியர் தி.சு.நடராசன் வெளிப்படுத்தியுள்ள திறம் வாசிக்கத் தூண்டுவதாகும்.

புதுமைப்பித்தனின் சிறுகதைகளின் பொதுப்பண்பு ‘நம்பிக்கை வறட்சி’ என்பதாகும் என்பது சிறுகதை விமர்சகர்கள் பலரும் ஏன்? புதுமைப்பித்தனே கூறும் ஒரு கருத்து. அதனைப் பரிசீலிக்க வேண்டிய தேவை இன்றுள்ளது. தி.சு.நடராசன் இப்பணியை இந்நூலில் செய்திருக்கிறார். புதுமைப்பித்தனின் தனித்துவங்களாக பதினெட்டுச் சாத்தியங்களை முன்வைக்கிறார். இது வாசகருக்கும் ஆய்வாளர்கட்கும் வழிகாட்டியாகவும், இதுவரை பலருடைய சிந்தனையில் கிளைவிடாத செய்தியாகவும் உள்ளன. புதுமைப்பித்தனின் கலைப் பிரபஞ்சம் ஒரு சுரங்கம் போன்றது; அதில் தோண்டத் தோண்டப் புதிய செய்திகள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன; அதன் மீது தி.சு.நடராசன் புதிய ஒளியைப் பாய்ச்சி இருக்கிறார். கு.ப.ரா.வை ஒரு மென்மையான, உணர்வு ரீதியான படைப்பாளி என்று அனைவரும் கூறிக் கொண்டிருக்கையில் தி.சு.நடராசன் இந்நூலில், “கு.ப.ரா. எனும் படைப்பாளியின் மனத்தில் எப்போதும் ஒரு கலகக் குரல் - நியாயத்தின் குரல் - கேட்டுக் கொண்டிருக்கிறது” என்று புதிய கருத்தை முன்வைக்கிறார்.

மௌனியின் சிறுகதைகள் குறித்து தி.சு.நடராசன் கூறும், “எண்ணத்தை நோக்கிய உணர்ச்சிகளின் நகர்தல்கள்தான் அவை” என்ற கருத்து மேலும் சிந்திக்கத் தூண்டுவது. “எண்ணங்களின் நகர்வு” என்பது புதிய கருத்தியல். உள்நோக்கப் போலி நியாயத்தின்படி சிந்திக்க மௌனியின் கதைகள் ஏற்றவை என்பது என் கருத்து. மௌனி ஏன் ஒரு “இன்ட்ரோவெர்ட்” (Introvert) படைப்பாளியாக மாறினார் என்பன போன்ற வினாக்கள் இந்தப் புத்தகத்திற்கு வெளியிலும் இன்னும் உயிர்ப்புடன் இருக்கின்றன.

பொதுவாக விமரிசகர்கள் திராவிட இயக்கச் சிறுகதைகள் குறித்து மிகச் சிலவான பதிவுகளையே செய்துள்ளனர். இவர்களுள் அறிஞர் அண்ணாவிற்குத் தனித்த இடம் உள்ளது என்பதைத் தி.சு.நடராசன் நிறுவியுள்ளார். “அற்புத நவிற்சியின் சொகுசிலும்

கனவுத் தோற்றத்தின் சுகத்திலும் திளைக்கும் ஒரு பிரிவுப் படைப்பாளிகளுள், அறிஞர் அண்ணா ஆழ்ந்த சமுதாய உணர்வு கொண்டவர் என்ற கருத்தைப் பேராசிரியர் நடராசன் உறுதிபடத் தெரிவிக்கிறார். சிறுகதை ஜாம்பவான், தான் எழுதிக் கொண்டிருந்த காலத்தைத் தன்னுடையதாகவே ஆக்கிக் கொண்ட ஜெயகாந்தன் குறித்த விரிவான விமரிசனத்தைத் தி.சு.நடராசன் இந்நூலில் முன்வைக்கிறார். அவரது மதிப்பீடு, “பிராமண வைதீக சமய ஈடுபாடும் இந்தியத் தேசியவாதமும் இணைந்த ஒரு கருத்தியல்வாதம் அவருக்கு உகந்த ஒரு கொள்கைத் தளமாக இருந்தது” என்று கூறப்படுகின்றது. இது எத்தகைய கணிப்பு...! ஜெயகாந்தன் தனது பிம்பத்தைக் கட்டமைத்துக் கொள்ளத் தன்னைப் பல சமயங்களில் பொதுவுடைமைவாதியாக பிரகடனப்படுத்திக் கொண்டார் என்பதும் விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய பதிவு.

இலங்கையர் கோன் என்ற படைப்பாளி குறித்த கட்டுரை, தொன்மங்களைப் புதிய உளப்பகுப்பாய்வு வெளிச்சத்தில் காட்டுகிறது. லா.ச.ரா., தி.ஜானகிராமன், பிரபஞ்சன் பற்றிய கருத்துக்களும் குறிப்பிடத்தக்கவை. வழக்கமாக அனைவரும் மேற்கோள்காட்டும், கதைகளை விடுத்துப் பிரபலமாகாச் சிறுகதைகளை இவர் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறார்.

கரிசல் இலக்கியங்களைப் பற்றிய ஆய்வில் தி.சு.நடராசனின் நடுவுநிலைமை வெளிப்படுகிறது. கு.அழகிரிசாமி, கி.ரா., பா.செயப்பிரகாசம், வீர.வேலுச்சாமி, சோ.தருமன், பூமணி, தனுஷ்கோடி ராமசாமி, ஆ.சந்திரபோஸ் என்றவாறு பல படைப்பாளிகளை நமக்குத் தொட்டுக் காட்டுகிறார். ஓரிடத்தில் தி.சு.நடராசன், “அழகிரிசாமியின் பங்களிப்பு மழுங்கடிக்கப்பட்டது. கரிசல் எழுத்து ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக விளங்குவதற்கு இது இடம் தந்தது. ஆனால் காலம் வலுவானதாயிற்றே” என்று கூறுவதற்கு ஒரு துணிச்சல் தேவைதான்! கி.ரா.வை, மீரா மிக விமரிசையாகத் தூக்கி நிறுத்தினார். “ஒரு படைப்பாளி தன் சொந்த மக்களிடமும் வெளிநாடுகளிலும் அளவிறந்த புகழ் பெறுவதற்கு அவரது நூல்கள் எளிதாகக் கிடைப்பது முக்கியக் காரணம்” என்று பிரபல ஒப்பிலக்கிய விமரிசகர் ஹார்ஸ்ட் பிரன்ஸ் கூறுகிறார். கி.ரா. விஷயத்தில் இது மிகவும் பொருந்தும். அன்னம் பதிப்பகம் முழு வேகத்துடன் பதிப்புப் பணிகள் செய்யத் தொடங்கிய காலத்தில் கி.ரா., மீராவின் கருத்தில் பதிகிறார். பிறகென்ன...? கு.அழகிரிசாமி மட்டுமல்லாமல் ஏனைய கரிசல் படைப்பாளிகளும்கூட, கி.ரா. அளவிற்குப் பேசப்படவில்லை என்பதற்கும் கூடக் காரணங்கள் உண்டு. படைப்பாளிக்கு இருக்கும் தனித்திறன்களுடன் அவரது சார்பு நிலைகளும் குறிப்பிட்ட விகிதத்தில் இணைகிறபோது, பரபரப்பாகப் பேசப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம். தி.சு. நடராசன் குறிப்பிடுகின்ற பல படைப்பாளிகள் இன்று அதிகம் கொண்டாடப்படுவதைக் காணும் போது, “காலம் வலுவானதாயிற்றே” என்ற தொடர் பொருளுடையதாகிறது.



> “எழுபதுகளில் தொடங்கி இன்றுவரை இயக்கத்தில் இருக்கும் வண்ணதாசன் பற்றியும் லட்சுமி மணிவண்ணன், ஜே.பி.சாணக்யா, கண்மணி குணசேகரன், விழி பா.இதயவேந்தன், சு.வேணுகோபால், கோணங்கி என்ற மிக முக்கியமான படைப்பாளிகளின் சிறுகதைகள் பற்றியும் நிறைவாகக் கூறுகிறார் தி.சு.நடராசன்.”

சுந்தர ராமசாமியின் சிறுகதைகள், ஜெயமோகனின் சிறுகதைகள் போன்றவற்றையும் ஆ.மாதவன், ஜி.நாகராஜன் போன்றவர்களின் சிறுகதைகளையும் அவ்வவற்றுக்கான அளவு கோல்கள் கொண்டு அலசுகிறார். பிறழ்வு

மனநிலைகளை ஜி.நாகராஜன் பதிவு செய்திருக்கும் நேர்த்தியை தி.சு.நடராசன் சுட்டிக்காட்டுகிறார்.

'புலம் பெயர் புனைவுகள்' என்ற பகுதியில் இவர் செய்திருக்கும் பதிவுகள் விசேடமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. சந்திரவதனா செல்வகுமாரன், நிருபா, சிவலிங்கம் சிவபாலன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன், இளங்கண்ணன் போன்றவர்களின் கதைகள் புலம் பெயர்தலின் வலியை எங்ஙனம் சித்திரிக்கின்றன என்பதை மிக விரிவாக எடுத்துக்காட்டுகிறார் தி.சு.நடராசன். "புலம் பெயர்வுக்குரிய சூழமைவு, புலப்பெயர்வு எனும் நிகழ்வு, புலம் பெயர்வுக்குப் பின்னர் புகலிடங்களில் தோன்றும் பிரச்சினைப்பாடுகள், புகலிடங்களில் நிலை கொள்ள முயலுகிறபோது எழும் பண்பாட்டு அதிர்வுகள், மாற்றங்கள், புகலிடங்களின் கருத்தமைவுகள், மக்களின் சிந்தனைகள் மற்றும் வெவ்வேறு நிலைப்பாடுகள் சிந்தனை வெளிகளில் செய்கிற தாக்கங்கள் - என்பன இவை" என்று புலம் பெயர் இலக்கியங்களை ஆய்வு செய்வதற்கான அளவுகோல்களைத் தி.சு.நடராசன் தந்து விடுகின்றார்.

பெண்ணின் மொழி பற்றிய பகுதியில் அம்பை, ஆர்.சூடாமணி, உமா மகேசுவரி போன்றவர்களின் சிறுகதைகளை விவாதித்திருக்கிறார். "வலி, மனிதனின் அடிப்படையான உணர்வுகளில் ஒன்று" என்ற ஜான் கார்டனரின் கருத்தை மேற்கோள் காட்டி மேற்குறிப்பிடப்பட்ட எழுத்தாளர்களின் பெண்ணியப் புனைவுகளை மதிப்பீடு செய்திருக்கிறார்.

எழுபதுகளில் தொடங்கி இன்றுவரை இயக்கத்தில் இருக்கும் வண்ணதாசன் பற்றியும் லட்சுமி மணிவண்ணன், ஜே.பி.சாணக்யா, கண்மணி குணசேகரன், விழி பா.இதயவேந்தன், சு.வேணுகோபால், கோணங்கி என்ற மிக முக்கியமான படைப்பாளிகளின் சிறுகதைகள் பற்றியும் நிறைவாகக் கூறுகிறார் தி.சு.நடராசன். இதில் முக்கியமான ஒரு செய்தியைக் குறிப்பிடுகின்றார். "பின்னை நவீனத்துவச் சூழலோ, அதற்குரிய சமூகப் பொருளாதார நிலைகளோ, அரசியல் நிலைப்பாடுகளோ இன்னும் சரியாகக் காலூன்றி விடவில்லை. இது உண்மையாயிருந்தாலும் கவர்ச்சியோடு கூடிய ஐரோப்பாவின் சில பகுதிகளிலிருந்தும் முக்கியமாக 'எதிர்ப்பு' என்ற சிந்தனை மரபோடு நினைக்கக் கூடிய லத்தீன் அமெரிக்க நாடுகளிலிருந்தும் சில கருத்தியல்கள் நூதனமான வலுவான சில எழுத்து முறைகள் - அதற்கேயுரிய பிரசித்தங்கள் முதலிய திரண்டு வந்தன... புதிய எழுத்துக்கான வடிவமல்லாத வடிவத்திற்கான (anti-form) ஈடுபாடும் முயற்சியும் மேற்கொள்ளப்படுதலுக்குரிய சூழல் தோன்றியது" என்று தமிழின் அண்மை எழுத்துப்போக்குகள் பற்றிய அறிமுகத்தினையும் காரணகாரியச் சூழல்களையும் விளக்குகிறார். இலக்கியத் திறனாய்வுத் துறையில் தோய்ந்த, புலமையும், எழுத்தில் அதீத நிதானமும் கொண்ட ஒரு அறிஞர் இவ்வாறுதான் எடுத்துரைப்பு முறையைக் கையாளுவார்.

இலக்கிய விமரிசனம் குறித்துச் சி.சு.செல்லப்பா, "மனப்பதிவுகளால் ஆன கலைப்படைப்பை நுட்பமாகத் தொடர்ந்து அதன் பொருளை ஆராய்ந்து அதன் தன்மையை, அதிலிருந்து கிடைத்த அனுபவத்தை மனப் பதிவுகளாகவே ஒரு விமர்சகன் கொடுக்கிறான். பார்க்கப்போனால் இலக்கிய விமர்சனம் அகப்பார்வையில் ஆனதுதானே? அத்தகைய பார்வை மனப் பதிவுகளாகத்தானே இருக்க முடியும். அவனது மனப்பதிவுகள் அந்தக் கலைப்படைப்பை வாழவும் ஒலிக்கவும் வைக்கமுடிந்தால் அந்த விமர்சகன் தன் தொழிலைச் சரியாகச் செய்து விட்டான் என்று நாம் சொல்லலாம்" என்று கூறுகிறார். பேராசிரியர் தி.சு.நடராசன் தமது நிதான அணுகுமுறையால் அவர் தேர்ந்து கொண்ட சிறுகதைகளை வாசகர்களின் மனத்தில் ஒலிக்குமாறு செய்துவிட்டார் இந்நூலின் மூலம் என்று கூறலாம். ●


**புத்தகங்கள் அச்சிட**
**அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு**
**அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**


தொடர்பு கொள்ள

**98412 93503**


# என்.சி.பி.எச்.சின்
# புதிய வெளியீடுகள்...




**கழலை**
இலக்குமிகுமாரன் ஞானதிரவியம்
₹ 220/-





**பிச்சிப் பூ**
பொன்னீலன்
₹ 70/-




**மஞ்சுவெளி**
சி.ஆர்.ரவீந்திரன்
₹ 170/-




**மொழிபெயர்ப்பு நெறிமுறைகள்**
பேராசிரியர் இரா.மருதநாயகம்
₹ 135/-





**மாடும் வண்டியும்**
(பொருள்சார் பண்பாட்டு ஆய்வு)
முனைவர் தி.ஜான்சி பால்ராஜ்
₹ 130/-




**நாங்கள் நாத்திகரானோம்**
கோரா
தமிழில்: டாக்டர் வெ.ஜீவானந்தம்
₹ 60.00


# நெஸ்லிங் வெளியீடாக
# உலகப் புகழ்பெற்ற சிறார் கதைகள்


(ஒவ்வொன்றும் தலா ரூ.70)
































Nestling

**நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,**

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050

☎ 044- 26251968, 26258410, 48601884,

Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

# நெஸ்லிங் புதிய வெளியீடுகள்




₹ 65.00




₹ 45.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 70.00




₹ 100/-
(இரண்டு புத்தகங்களும் சேர்த்து)




₹ 70.00

**தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்**
**சிறார்களுக்கான நூல்களை வெளியிடும் சிறந்ததொரு புத்தக நிறுவனம்**

## நெஸ்லிங் புக்ஸ் பப்ளிஷிங் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் (பி) லிட்.,

Nestling

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 050
☎: 044- 26251968, 26258410, 48601884,
Email: nestlingbooks@gmail.com | www.ncbhpublisher.in